# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

புதுமலர் - 5 சனவரி - மார்ச் 2024
திருவள்ளுவர் ஆண்டு 2055

ஆசிரியர் : **கண.குறிஞ்சி**
இதழ் முகவரி : 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு,
திண்டல் (அஞ்சல்)
ஈரோடு 638012.
இதழ் தொடர்பு எண் : **94433 07681**
மின்னஞ்சல் : gana.kurinji@gmail.com

வடிவமைப்பு : புதுமலர்
தனி இதழ் : ரூ. 100
ஆண்டுக் கட்டணம் : ரூ. 400
மூன்றாண்டுக் கட்டணம் : ரூ. 1000
புரவலர் கட்டணம் : ரூ. 5000

**நெறியாளர்கள்**

- வீ.அரசு
- பொதியவெற்பன்
- ஜமாலன்
- ரவி குமாரசாமி

இதழுக்கான கட்டணம் அனுப்பியவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் கீழ்க்காணும் தொடர்பு எண் மூலம் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம் இல்லாவிடின், இதழை அனுப்புவதில் சிரமம் ஏற்படும்.

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம் குறித்துத்தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்: 94433 07681

வங்கிக் கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/C no. 7390 144 253 IFSC NO. IDIB000T202

**G Pay – 94433 07681 – G. Shanmuga Sundaram**

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| (1) இதழின் குரல் | 04 |
| (2) தோழர் கல்யாணி (எ) பிரபா கல்வி மணி பேட்டி | 06 |
| (3) கருக்கலைப்புஅரசியல்: அமெரிக்கா, இரசியாவை முன்வைத்து - **எம். பாண்டியராஜன்** | 28 |
| (4) காசா : பாலஸ்தீன மக்களின் இனக்கொலை பூமி. - **யமுனா ராஜேந்திரன்** | 38 |
| (5) தமிழீழத்தின் காதல் மற்றும் போர் எந்திரங்கள் - தேவகாந்தனின் "கலிங்கு" - **ஜமாலன்** | 54 |
| (6) தமிழ்வழிக் கல்வி-சிக்கல்களும் தீர்வுகளும் - **கண. குறிஞ்சி** | 64 |
| (7) பிரதேச நவீனத்துவமும் தமிழ் சனாதன உருத்திரிபும் - **இந்திரன்** | 75 |
| (8) நாவல் எழுதுதல் - **சுப்ரபாரதிமணியன்** | 81 |
| (9) உங்கள் மனஓசை | 84 |
| (10) கவிதைகள் | 103 |
| (11) தேவிபாரதிக்குப் பாராட்டு விழா | 107 |
| (12) புத்தகப் பேழை | 111 |



## இதழின் குரல்

**புதுமலர் இதழ், இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.** 2023 சனவரியில் வடலூர் வள்ளலார் அவர்களின் 200ஆவது ஆண்டு நிகழ்வைக் கொண்டாடும் வகையில் புதுமலர், முதல் இதழாக வள்ளலார் சிறப்பிதழை வெளிக்கொணர்ந்தது. வள்ளலார் குறித்த திராவிட இயக்கங்களின் பார்வையை இந்த ஆவணம் குறிப்பாகப் பதிவிட்டிருந்தது. தவிரவும் அடிகளின் பேசப்படாத பல்வேறு சிறப்புக் கூறுகளை இதிலுள்ள கட்டுரைகள் தெளிவாக்கின. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள எண்ணற்ற தமிழ் அன்பர்கள் வள்ளலார் சிறப்பிதழைக் கேட்டுக் கேட்டு வாங்கினர். இன்னும் கூட இதழுக்கான அழைப்புகள் வந்து கொண்டிருப்பது சிறப்பிதழின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

இரண்டாவது இதழில், இந்தியாவிலுள்ள தாய் மொழிகளைக் காப்பதற்கான இயக்கத்தை முன்னெடுத்து வரும் பஞ்சாப் பேராசிரியர் ஜோகா சிங் அவர்களின் விரிவான பேட்டி இடம் பெற்றது. செயற்கை நுண்ணறிவுப் புரட்சி குறித்த **ஆழி செந்தில்நாதன்** அவர்களின் கட்டுரை, மொழிகளின் எதிர்காலத்தோடு அதைப் பொருத்தி விவாதித்தது. திருக்குறளுக்கு ஜி.யூ. போப் அவர்கள் எழுதிய முன்னுரை 137 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக கண. குறிஞ்சி அவர்கள் மொழியாக்கம் மூலம் இதழில் வெளி வந்தது.தொல்லியல் நோக்கில் தமிழ்ச் சங்கம் குறித்த **புலவர் இராசு** அவர்களின் கட்டுரை, இவ்விதழுக்குச் சிறப்புச் சேர்த்தது. மேலும் தமிழறிஞர்

**பொதியவெற்பன்** அவர்களது பவழ விழா குறித்த செய்தியும், படங்களும் இதழில் மிக விரிவாகப் பதிவிடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

மூன்றாவது இதழில், மனித உரிமைச் செயல்பாட்டாளர் **ஹென்றி திபேன்** அவர்களின் விரிவான பேட்டி இடம் பெற்றது. உள்ளூர்ச் சிக்கல்கள் தவிரவும், சர்வதேச அளவில் மனித உரிமைத் தளத்தில் நிகழ்ந்துவரும் பல்வேறு முன்னெடுப்புகளை விரிவாக அவர் பதிவிட்டிருந்தார். தமிழ்நாட்டில் அடிமை முறை இல்லை என்னும்

பொதுவான கருத்தாக்கத்தை மறுத்து ஆவணங்களில் அடித்தள மக்கள் என்னும் அரிய கட்டுரையைப் புலவர் செ. இராசு அவர்கள் எழுதியிருந்தார். அவர் காலமாவதற்கு முன் பத்திரிகையில் அவர் எழுதிய இறுதிக் கட்டுரையாக அது அமைந்தது. அதையொட்டி தமிழகத்தில் அடிமை முறை பற்றிய அவரது நூலும் வெளிவந்தது,

நான்காவது இதழ், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ் இலக்கியத்தில் தீவிரமாகச் செயல்பட்டு, பலராலும் கவனிக்கப் படாமல் மறைந்த **கவிஞர் தமிழ்ஒளி** அவர்களின் நூற்றாண்டுச் சிறப்பிதழாகப் புது மலர் வெளிவந்தது. **தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கம்** மூலம் வெளிவந்த "கவிஞர் தமிழ் ஒளி படைப்புலகம்" நூலிற்குப் பிறகு, புதுமலர் இதழ்தான் அக்கவிஞரைச் சிறப்பித்து அவரது படைப்புக்களை ஆவணப்படுத்தியது என்பது கருதத் தக்கது. முற்போக்குப் படைப்பாளி தமிழ் ஒளி அவர்களின் பன்முக ஆளுமையை விளக்கி, பல்வேறு ஆளுமைகள் தங்களது கட்டுரைகளை இதழில் பதிவிட்டிருந்தனர். நாடறிந்த **நற்றமிழ் ஆய்வறிஞர் வீ.அரசு** அவர்களின் விரிவான பேட்டி புதுமலர் நான்காம் இதழுக்குக் கூடுதல் அடர்த்தியைத் தந்தது. அப்பேட்டி அறிவுத் தளத்தில் மிகப்பெரும் வரவேற்பையும் பெற்றது. வள்ளலார் சிறப்பிதழைப் போல, கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டுச் சிறப்பிதழையும் கேட்டுத் தொடர்ந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு இதழையும் பாதுகாத்து வைத்துக் கொள்ளத்தக்க வகையிலான செறிவு மிக்க கட்டுரைகள், கடந்த ஆண்டு புதுமலர் இதழில் வெளிவந்தன. அவை விரிக்கின் பெருகும் என்பதால் கடந்து செல்கிறோம்.

இரண்டாம் ஆண்டிலிருந்து இதழுக்குச் செறிவூட்டும் வகையில் நெறியாளர்கள் புதுமலரில் இணைகின்றனர். **பேராசிரியர் வீ.அரசு, ஆய்வறிஞர் பொதியவெற்பன், எழுத்தாளரும் விமர்சகருமான ஜமாலன் மற்றும் கவிஞர் ரவிகுமாரசாமி** ஆகியோரைப் புதுமலர் வணங்கி வரவேற்கிறது. யானைக்கு யானை கை கொடுப்பது போல, இவர்களது வழிகாட்டல் புதுமலரைப் புதிய சிகரங்களுக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்த 2024 ஆம் புத்தாண்டில் வாசகர்கள் தங்களது மேலான பேராதரவை நல்க வேண்டும் என விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

- கண. குறிஞ்சி






# தோழர் கல்யாணி (எ)

# பிரபா கல்விமணி

**கண.குறிஞ்சி - உங்களது பெற்றோர் குடும்பப் பின்னணி குறித்துச் சுருக்கமாகக் கூறுங்கள்:**

**பிரபா கல்விமணி** - திருநெல்வேலிமாவட்டம் இராதாபுரம் வட்டத்தில் உள்ள சௌந்தரபாண்டியபுரம் நான் பிறந்து வளர்ந்த கிராமம். பாலையா பிரமு தம்பதியரின் பத்தாவது குழந்தை நான். இராதாபுரம் அரசு மருத்துவமனையில் ஆபத்தான நிலையில், சுகப்பிரசவம். ஆனால் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் இராதாபுரம் கல்யாணி அம்மன் பெயர் வைப்பதாக வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் கல்யாணி என்ற பெயர் எனக்கு வைக்கப்பட்டது. அப்போது எனக்கு இரண்டு அக்காளும் நாலு அண்ணன்களும் இருந்தனர். கடைக்குட்டியான நான் அனைவருக்கும் செல்லப் பிள்ளை; அப்பாவுக்கு அருகில் உள்ள சமூகரங்கபுரத்தில் தலையாரி வேலை. அப்போது மாதம் ரூபாய் 18 சம்பளம். பூர்வீகச் சொத்து சொற்பமே; குத்தகை விவசாயம்; குடும்பமோ மிகவும் வறுமையான சூழ்நிலைதான். நான் பிறப்பதற்கு முன்பே என்னுடைய மூத்த அக்காள் தாயம்மாளுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் கன்னியாகுமரியில் வாழ்ந்து வந்தார். மூத்த அண்ணன் ஆறுமுகம் கன்னியாகுமரியில் ஒரு பலசரக்குக் கடையில் வேலை பார்த்து வந்தார். அடுத்த அண்ணன் மகராசன், மாடசாமி ஆகியோர் குத்தகை விவசாயம் மற்றும் கூலி வேலை. அடுத்த அக்காள் பிரேமா வீட்டு வேலை. நானும் எனக்கு அடுத்த மூத்த அண்ணன் கணபதியும் உள்ளூரில் உள்ள தூய

ஞானப்பிரகாசியார் தொடக்கப் பள்ளியில் படித்து வந்தோம்.

- **பள்ளி மற்றும் கல்லூரி வாழ்வு.**

○ உள்ளூரில் ஐந்தாம் வகுப்பை முடித்த பின்பு அருகில் உள்ள கள்ளிகுளத்தில் உள்ள தூய ஞானப்பிரகாசியார். நடுநிலைப் பள்ளியில் நானும் என் அண்ணனும் எட்டாவது வகுப்பு முடித்துவிட்டு கள்ளிகுளத்தில் உள்ள அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளியில் நான் ஒன்பதாவது வகுப்பிலும் அண்ணன் கணபதி பத்தாம் வகுப்பிலும் படித்து வந்தோம். அண்ணன் பத்தாவது வகுப்பில் தேர்ச்சியாகவில்லை. அதில் பள்ளி நிர்வாகம் பாரபட்சமாக நடந்து கொண்டது இந்தக் காரணத்தினால் நான் பத்தாம் வகுப்பை என் அப்பா தலையாரி வேலை பார்த்து வந்த சமூகரங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்தேன். அண்ணன் கணபதி படிப்பை நிறுத்திவிட்டு விவசாய வேலைக்கு வந்து விட்டார். 11ஆம் வகுப்பு பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வு 1963இல் எழுதி தேர்ச்சி பெற்றேன். பின்பு கல்லூரிப் படிப்பை மதுரையில் உள்ள எனது அக்காள் பிரேமா தங்கப்பன் வீட்டில் தங்கி அமெரிக்கன் கல்லூரியில் இளம் அறிவியல் பட்டப்படிப்பை 1967 இல் முடித்தேன். கும்பகோணத்தில் ஒரு வருடம் தனிப்ப யிற்சி மையத்தில் வேலை: அடுத்து அப்போதைய இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் கல்லூரியில் ஓராண்டு விளக்குனர் (Demonstrator) பணி. அடுத்து 1969 லிருந்து அரசுக் கல்லூரியில் இயற்பியல் துறையில் விளக்குனர் பணி பின்பு 1974-76 சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் மேற்படிப்பும் 1985-86 இல் எம்.பில் படிப்பை முடித்தேன். அடிப்படையில் புரிந்து படிப்பதை வழக்கமாகக் கொண்டேன். கடினமாக உழைப்பேன். வகுப்பில் முதல் மூன்று இடங்களில் இருப்பேன். பள்ளி படிப்பு எல்லாம் தமிழ் வழி. கல்லூரி கல்வி எல்லாம் ஆங்கில வழி. அப்போதெல்லாம் அப்படித்தான் இருந்தது.

- **பேராசிரியர் பணியும் போராட்டங்களும்.**

○ பட்ட மேற்படிப்பை முடித்த நான் விழுப்புரம் அரசுக் கல்லூரியில் 1976 இல் பணியில் சேர்ந்தேன். அரசுக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தில் சேர்ந்து அனைத்துப் போராட்டங்களிலும் ஆர்வமுடன் பங்கேற்றேன். அப்போதுதான் அங்கு பி.எஸ்.என். எல் மத்திய அரசு நிறுவனத்தில் சங்கப் பொறுப்பாளராக இருந்த தோழர் அபிமன்யூ, தோழர் சீனிவாசன் ஆகியோர் தொடர்பு மற்றும் நகரத்தில் உள்ள அனைத்துக் கட்சிப் பொறுப்பாளர்களின் தொடர்பு கிடைத்தது. தொடர்ந்து 1981-ல் இருந்து 1997-இல் விருப்ப ஓய்வு பெறும் வரை திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றினேன். ஆசிரியர்களின் எல்லா போராட்டங்களிலும்

ஆர்வமுடன் பங்கேற்றுள்ளேன். மாணவர்களின் நியாயமான போராட்டங்கள் அனைத்திற்கும் நேரடியாக ஆதரவு அளித்து வந்துள்ளேன். தோழமைச் சங்கங்களின் போராட்டங்களுக்கும் கல்லூரி ஆசிரியர் சங்கம் மூலம் ஆதரவாகச் செயல்பட்டு வந்துள்ளேன். குறிப்பாக திண்டிவனத்தில் பள்ளித் திறப்புக் குழு, நகரக் கல்வி மேம்பாட்டு குழு போன்ற அமைப்புகளிலும் உறுப்பினராக இருந்து செயல்பட்டதோடு போராட்டங்களிலும் பங்கேற்று உள்ளேன்.

● **புரட்சிப் பண்பாட்டு இயக்கம், அதன் செயல்பாடுகள் குறித்து விரிவாக கூறவும்.**

○ விழுப்புரம் அரசுக் கல்லூரியில் பணியாற்றியபோது 1976 -1980 களில் அனைத்து இடதுசாரி இயக்கத் தோழர்களுடன் தொடர்பு கிடைத்தது. இளம் வயதிலிருந்து கடவுள் மறுப்பு, பகுத்தறிவு, திமுக ஆதரவு நிலையிலிருந்து வந்த **எனக்குத் தேசிய இனப் பிரச்சனையில் அதிக ஈடுபாடு இருந்தது**. இதில் இந்திய பொதுவுடமைக் கட்சிகள் சரியான நிலைபாடு எடுக்கவில்லை என்பது எனது கருத்து. இதனால் தேசிய இனப் பிரச்சனையில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் இடதுசாரி இயக்கங்களோடு இணைந்து செயல்பட விரும்பினேன். அதனை மாணவர்கள் மத்தியிலும் ஆர்வமுள்ள இளைஞர்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல முயற்சித்தேன். **ஞானசூரியன், த.பாலு, அண்ணாதுரை, அன்பாதவன், இரவி கார்த்திகேயன்** போன்றோர் அடங்கிய குழு உருவானது. அதன் தொடர்ச்சியாகப் பேராசிரியர் பழமலை தலைமையிலான **"நெம்புகோல்"** உருவானது இதில் **பேராசிரியர் சே.கோச்சடை, அ.மார்க்ஸ் கோ.கேசவன்** அப்போது புதுவையில் பணியாற்றி வந்த ரவிக்குமார் மற்றும் கோ.சுகுமாரன் நெய்வேலியில் பணியாற்றி வந்த **சி.துரைக்கண்ணு** இப்படிப் பலருடைய தொடர்பு கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக 1982-83 இல் மாநில அளவில் புரட்சிப் பண்பாட்டு இயக்கம், அகில இந்திய அளவில் "அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கங்களின் கூட்டமைப்பு" ஆகியவற்றில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது. இந்தக் காலகட்டத்தில்தான் அப்போதைய அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியரும் தற்போதைய புதுமலர் ஆசிரியருமான கண.குறிஞ்சி அவர்களின் தொடர்பும் கிடைத்தது. சென்னையில் **இல.கோவிந்தசாமி** இப்படி எல்லோருடனும் பணியாற்றும் பெரும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். இதன் தொடர்ச்சியாக 1985இல் சென்னையில் சாதியும் வர்க்கமும் என்ற தலைப்பில் இரண்டு நாள் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, மேற்குவங்கம் எனப் பல மாநிலங்களில்

இருந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எல்லாம் கலந்து கொண்டு மேலான பங்களிப்பை அளித்தனர். புரட்சிகர எழுத்தாளர் **வரவரராவ், கே.வி.ரமண ரெட்டி, கத்தார்** போன்றோரெல்லாம் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆந்திரா உள்ளிட்டு வட மாநில அரசுகளின் அடக்குமுறைகளைக் கண்டித்து வரவரராவ் கத்தாருடன் தமிழகம் முழுவதும் பரப்புரை மேற்கொண்டோம். **செந்தாரகை** என்னும் மாத இதழ் புரட்சிப் பண்பாட்டு இயக்கம் சார்பில் வெளியிடப்பட்டது. அதன் மூலம் இளம் படைப்பாளிகள் பலர் ஊக்குவிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி போன்ற பகுதிகளில் நக்சல்பாரி இயக்கத்தின் மீது காவல்துறையினர் நடத்திய கடும் தாக்குதல்களைக் கண்டித்து பிரச்சார இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பல ஜனநாயக சக்திகளோடு நல்ல தொடர்பு ஏற்பட்டது. அந்த காலகட்டத்தில் எஸ்.வி.ஆர் போன்ற தோழர்களின் நட்புக் கிடைத்தது. அப்போதும் மத்திய அரசு கொண்டு வந்த தடா சட்டத்தைக் கண்டித்துப் **பேராசிரியர் தீரன்** தலைமையில் **டி.எஸ்.எஸ். மணி** போன்ற தோழர்கள் இணைந்து அடக்குமுறைச் சட்ட எதிர்ப்புக் கூட்டியக்கம் சார்பில் தமிழகமெங்கும் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளோம். எல்லாப் பணிகளையும் சரியான முறையில் இப்போது என்னால் நினைவு கூற முடியவில்லை.



● **மக்கள் பாடகர் கத்தார் குறித்து உங்கள் பதிவுகள்.**

○ புரட்சிப் பண்பாட்டு இயக்கம் மூலமாக ஆந்திராவில் அப்போது செயல்பட்டு வந்த **ஜனநாட்டிய மண்டலி** என்ற அமைப்பின் தொடர்பு கிடைத்தது. அப்போதுதான் எழுத்தாளர் வரவரராவ், கேவிஆர் போன்றவர்களோடு புரட்சிப் பாடகர் கத்தார் அவர்களின் தொடர்பும் கிடைத்தது. கலைஞர்களுக்கே உரித்தான வெகுமக்கள் மத்தியில் நிகழ்ச்சி நடத்துவதில் மிகவும் விருப்பமாக இருப்பார். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதற்கு முன்பு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன்பிருந்தே மேடையில் தான் பங்கேற்கப் போகும் நிகழ்ச்சியைப் பற்றியே சிந்திப்பார்; திட்டமிடுவார். சுற்றுப்பயணங்களில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் குழுவினருடன் சேர்ந்து பயிற்சி மேற்கொள்வார். அதையெல்லாம் நாம் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

எப்போதும் இரயில் பயணத்தையே அதிகம் விரும்புவார். இரயில் பயணத்தில் கிடைக்கும் கழிவறை வசதி பேருந்தில் கிடையாது என்பதை குறிப்பிடுவார் .போகும் இடங்களில் எல்லாம் தோழர்கள் வீட்டில் சமைத்த உணவையே அதிகம் விரும்பிச் சாப்பிடுவார். எல்லோரிடமும் தோழமையுடன் அன்புடனும் பழகுவார். எந்த ஒரு கிராமத்திலும் குடிசைகளில் தங்குவதையே பெரிதும் விரும்புவார். ஆடம்பரமான விடுதிகளில் தங்குவதை விரும்ப மாட்டார். எப்போதும் மக்களோடு மக்களாகவே இருக்க, பழக விரும்புவார்.

- **ஆசிரியர் சங்கங்களில் உங்களது அனுபவங்கள்.**

○ விழுப்புரத்தில் 1976 இல் பணிக்கு வந்த போதுதான் ஆசிரியர் இயக்கங்களில் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டமே அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு உந்து சக்தியாக விளங்கியது. அவர்கள்தான் பல போராட்டங்களை முன்னெடுப்பார்கள். அதேபோல் அனைத்திந்திய அளவில் இடதுசாரி இயக்கங்களின் தலைமையிலான ஆசிரியர் போராட்டங்கள் எல்லோருக்கும் ஓர் உந்து சக்தியாக விளங்கியது. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நடத்திய போராட்டங்களில் ஆசிரியர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். அந்தப் போராட்டங்களின் மூலம் அப்போது எங்களுக்குப் பணிப் பாதுகாப்புக் கிடைத்தது. அதன் காரணமாகவே எங்களால் கல்வி நிறுவனங்களிலும் பொதுத் தளத்திலும் பணியாற்ற முடிந்தது. இந்தப் போராட்டங்களில் எல்லாம் கல்வி நலன், மாணவர் நலன் என்று வரும்போது ஆசிரியர் இயக்கங்களின் அணுகுமுறையில் நான் சில முரண்பாடுகளை எதிர்கொண்டேன். எடுத்துக் காட்டாகச் சில ஆசிரியர்கள் வகுப்பிற்கு நேரத்திற்கு வருவதில்லை; தங்கள் ஆசிரியர் பணியைச் செவ்வனே செய்வதற்கு அக்கறை எடுத்துக் கொள்வதில்லை ; சில கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் விதிகளை மீறி வீட்டில் தனிப்பயிற்சி மேற்கொள்வதை ஆசிரியர் இயக்கங்கள் கண்டு கொள்வதில்லை. இது போன்று தனிப்ப யிற்சி எடுப்பது ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலனுக்கு எதிராக இருப்பதோடு மட்டுமல்லாமல், அடிப்படையில் கற்பித்தல், கற்றல் முறைக்குத் தீங்கு விளைவிப்பதாகும். இதனை எதிர்த்துத் திண்டிவனம், நெய்வேலி, தஞ்சாவூர் பகுதிகளில் **தனிப்பயிற்சி எதிர்ப்பு மாநாடுகள்** நடத்தியுள்ளோம். அது போல் பயிற்று மொழி பிரச்சனையில் பெரும்பாலும் யாரும் அதிக கவனம் எடுத்துக் கொள்வதில்லை. அதன் விளைவு இன்று ஆங்கில மோகத்தின் காரணமாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகி வருகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் தனியார் மயம் வணிகமயக் கொள்கையால் ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலன் பெரிதும்

பாதிக்கப்பட்டு வருகிறது.

இன்று தமிழகத்தில் பெரும்பாலான ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்தில் பாதுகாப்பற்ற முறையில் கொத்தடிமைகளாகப் பணியாற்ற வேண்டிய அவல நிலை உள்ளது. அவர்களிடம் பயிலும் மாணவர்கள் எவ்வாறு சுதந்திர காற்றை சுவாசிக்கக் கற்பிக்கப்படுவார்கள் என்பது கேள்விக்குறியே. ஆனால் இதனை எல்லாம் கணக்கில் கொண்டு **பேராசிரியர் முனைவர் வீ.அரசு, ப.சிவக்குமார், இரா.முரளி, கண.குறிஞ்சி, உமா மகேஸ்வரி** போன்றவர்கள் **மக்கள் கல்விக் கூட்டியக்கம்** எனும் அமைப்பைத் தொடங்கி இருப்பது கொஞ்சம் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

● **நீங்கள் தொடங்கிய திண்டிவனம் நகரக் கல்வி மேம்பாட்டுக் குழுவின் செயல்பாடுகள் மற்றும் அதன் எதிர்வினைகள்.**

○ 1986இல் திண்டிவனத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் மாணவர்கள் சேர்க்கையின் போது சட்ட விரோதமாகப் பண வசூல் நடைபெற்றது. இதனால் ஏழை எளிய பெற்றோர்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். அதுவரை அரசுப் பள்ளியே இல்லாத திண்டிவனத்தில் ஓர் அரசுப் பள்ளியின் தேவை உணரப்பட்டது. இதற்காக மருத்துவர் இராமதாஸ் அவர்களின் தலைமையில் ஒரு பள்ளித் திறப்புக் குழு உருவானது. அதன் செயலாளர் வழக்கறிஞர் த.பவணந்தி, பொருளாளர் மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரசன்ன வெங்கடாஜலபதி. இதில் கல்வியில் அக்கறை உள்ள அனைத்துக் கட்சி மற்றும் சாதியைச் சேர்ந்த நகரப் பிரமுகர்கள் 14 பேர் உறுப்பினர்கள். நகர மக்கள் சார்பில் ரூபாய் 22,500 கல்வித்துறைக்கு கட்டிய பின்பு திண்டிவனத்தில் உள்ள முருங்கப்பாக்கம் நகராட்சி நடுநிலைப்பள்ளியை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தத் திண்டிவனம் நகாராட்சியின் நகர மன்றத் தீர்மானம் தேவைப்பட்டது. அப்போதைய நகர மன்றத் தலைவரும் ஒன்றுபட்ட தென்னாற்க்காடு மாவட்ட அதிமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான டி. ஹிராசந்த் அதனை எதிர்த்தார். இந்த சமயத்தில்தான் நகர மக்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கில் அனைத்துக் கட்சி மற்றும் இயக்கப் பிரமுகர்களைக் கொண்ட ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. அந்த அடிப்படையில் பகுத்தறிவாளர் கழகத் தலைவரும் கூட்டுறவுத் துறையில் பணியாற்றி வந்தவருமான வ.சு.சம்பந்தம் அவர்களின் தலைமையில் நகரக் கல்வி மேம்பாட்டு குழு தோற்றுவிக்கப்பட்டது. தொடர் போராட்டத்தில் திமுக நகர மன்ற உறுப்பினர்கள் 14 பேர் மற்றும் பள்ளித் திறப்புக் குழு உறுப்பினரும், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நகரமன்ற உறுப்பினர் என்.வி.நடராஜன் ஆதரவோடு நகர மன்றத்தில், நகர மன்றத் தலைவர் எதிர்ப்பையும்

மீறித் தீர்மானம் வெகுமக்கள் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது. பின்பு அந்த அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி முன்னாள் முந்தைய அதிமுக ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் அவர்களின் முயற்சியால் மேல்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. நகரக் கல்வி மேம்பாட்டு குழு, கல்விக் பிரச்சனை மட்டுமல்லாது மனித உரிமை பிரச்சனைகள், மற்றும் திண்டிவனம் நீதிமன்ற வளாகத்தில் நிறுவப்பட்ட பிள்ளையார் கோவில் எதிர்ப்பு என பல்வேறு தளங்களிலும் அதன் பணி விரிவடைந்தது பேராசிரியர்கள் ப.சிவகுமார், மு.திருமாவளவன் போன்றோர் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். இதன் விளைவாக 1989இல் தமிழக அளவில் **மக்கள் கல்வி இயக்கம்** உருவானது.

1994 இல் திண்டிவனம் நகர மற்றும் ஊரகக் கல்வி மேம்பாட்டு கழகம்

1996 இல் பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்

2000 இல் திண்டிவனம் மத நல்லிணக்கக் குழு,

2000 இல் திண்டிவனம், ரோஷணையில் தாய்த் தமிழ்ப் பள்ளி

2007 இல் பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளை

போன்ற பல அமைப்புகள் தோன்றுவதற்கு இது காரணமாயிற்று.

புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் மாநில அளவில் இணைந்து செயல்பட்டு வந்த பேராசிரியர் கோச்சடை, எழுத்தாளர் ரவிக்குமார், புதுக்கோட்டை கு.தர்மலிங்கம் கும்பகோணம் பொதியவெற்பன், நெடுவாக்கோட்டை ராஜேந்திரன், விழுப்புரம் பேராசிரியர் த.பழமலை மற்றும் இரவி கார்த்திகேயன், அண்ணாதுரை, புதுச்சேரி கோ.சுகுமாரன், ஈரோடு கண.குறிஞ்சி மற்றும் கோ.கேசவன் ஒத்துழைப்புடன் இணைந்து செயல்பட்டு வந்தோம்.

தொடர்ந்து தடா எதிர்ப்பு அடக்குமுறைச் சட்ட எதிர்ப்பு இயக்கம், 2000 இல் மக்கள் உரிமைக் கூட்டமைப்பு போன்ற இயக்கங்களில் திண்டிவனம் சார்பில் பங்கேற்கும் வாய்ப்புக் கிட்டியது. இதனால் காவல்துறை மற்றும் கல்வித்துறை தொடுத்த பல பொய் வழக்குகளையும் அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அவற்றையெல்லாம் வெகு மக்கள் ஆதரவோடும் **வழக்கறிஞர்கள் பொ.இரத்தினம், சத்தியச்சந்திரன், அப்போதைய மூத்த வழக்கறிஞர் கே.சந்துரு** போன்றோரின் ஆதரவோடும் எதிர்கொள்ள முடிந்தது. இன்றளவும் இந்த அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

- **மக்கள் கல்வி இயக்கத்தின் தோற்றம்/ அதன் சாதனைகள்.**
  - புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் தொடர்ந்து செயல்பட

முடியாத சூழலில் தொடர்ந்து மக்கள் கல்வி இயக்கம் என்ற ஓர் அமைப்பைப் பேராசிரியர் அ.மார்க்ஸ், சே.கோச்சடை, நெடுவாக்கோட்டை இராஜேந்திரன், புதுக்கோட்டை கு.தருமலிங்கம் ஆகியோர் கூடி விவாதித்துத் தொடங்கினோம். அதன் சார்பில்

(1) மக்கள் கல்வி இயக்கம் ஏன்?

(2) இசுலாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள்

(3) பயிற்று மொழி தமிழா ? ஆங்கிலமா?

(4) பெண் கல்வி

(5) அம்பேத்கரின் போர்க் குரல்

(6) வரலாறும் மதவாதமும்

(7) மண்டல் குழு அறிக்கையும் இட ஒதுக்கீட்டின் அவசியமும்

-ஆகிய குறு நூல்களை, குறைந்த பக்கங்களுடன், மலிவு விலையில் வெளியிட்டு விரிவான பிரச்சாரங்களை மேற்கொண்டோம். மக்கள் கல்வி இயக்கமும் கல்வி பிரச்சனைகளோடு மனித உரிமைப் பிரச்சினைகளிலும் பங்கேற்று வந்தது. தமிழ் வழிக் கல்வி மாநாடு, தனிப் பயிற்சி எதிர்ப்பு மாநாடு , தலித் ஆதரவாளர்கள் மாநாடு எனப் பல மாநாடுகளைப் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து நடத்தியுள்ளோம். அது போல் அப்போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கையை எதிர்த்துப் பரவலாக பிரச்சாரம் மேற்கொண்டோம்.

● **சமச்சீர்க் கல்விக்கான போராட்டங்கள்.**

○ இதில் திண்டிவனம் பகுதிகளுளிலும், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் நடைபெற்ற போராட்டங்களில் பங்கு பெற்றதோடு **எழுத்தாளர் பூவிழியன்** அவர்களோடு இணைந்து சமச்சீர் கல்வி 80 நாள் போராட்டப் பதிவுகள் என்ற நூலினை வெளியிட்டோம். சமச்சீர் கல்விப் போராட்டம் தொடர்பாக வெளிவந்த நாளிதழ்ச் செய்திகளை தொகுத்து மக்கள் கல்வி இயக்க வெளியீடாகக் கொண்டுவரப்பட்டது.

● **தொடக்கத்தில் நீட் தேர்வுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்தீர்களா? பிறகு நீட் தேர்வுக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்ந்ததின் பரிணாமம்:**

○ நீட் எதிர்ப்பு இயக்கத்தில் தொடக்கத்தில் பதின்மப் பள்ளிகள் உள்ளிட்டு அனைத்து வணிகக் கல்வி நிறுவனங்களும் பங்கேற்றனர். அப்போது அனைவரும் முன்வைத்த வாதங்கள் நீட் தேர்வால் ஏழை எளிய மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காது என்பதும்தான். ஆனால் அதற்கு முந்தைய பத்து ஆண்டுகளின் சராசரியைப்பார்த்தால் அரசு பள்ளியிலிருந்து மருத்துவக் கல்விக்குத்

தேர்வானவர்கள் 1.2 % மட்டுமே ஆகும். அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருந்து 4 % தேர்வு ஆகி இருந்தனர். அதாவது ஏழை எளிய மாணவர்கள் பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 70% மாணவர்களில் மிகக்குறைந்த விழுக்காடு மாணவர்களுக்கே மருத்துவப் படிப்பில் இடங்கள் கிடைத்து வந்தது. அனைத்து இடங்களையும் 30% ஆக உள்ள தனியார் பள்ளி மாணவர்களே பெற்று வந்தனர்.

முன்பு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தனியார் பள்ளிகளில் முதலாம் ஆண்டு பாடங்களை நடத்தாமல் முதல் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டுக்கான பாடங்களை நடத்தி வந்தார்கள். எனவே தனியார் பள்ளி மாணவர்கள் இரண்டு ஆண்டுகள் படித்து எழுதும் தேர்வினை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் ஓர் ஆண்டு மட்டுமே படித்து எழுதும் நிலை. இந்தக் கல்வி மோசடியால்தான் அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்பில் தேர்வாகவில்லை.

நீட் தேர்வில் இரண்டு ஆண்டுகள் பாடங்களிலிருந்தும் சம அளவில் கேள்விகள் கேட்கப்படும் போது, அதிலும் குறிப்பாகத் தேர்வு தமிழிலும் எழுதும் வாய்ப்பு உள்ளதால் சிறப்பாக எழுதி அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்விக்கு தேர்வாகும் வாய்ப்புக் கூடும் என்று கருதினேன். ஆகையால்தான் நீட் தேர்வுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்தேன்.

ஆனால் அரசுப் பள்ளிகளிலும் முதல் ஆண்டுப் பாடங்களை நடத்தாமல் அக்கறையின்றி இருந்துள்ளார்கள். நான் எதிர்பார்த்தபடி நீட் தேர்வில் அவர்கள் வெற்றி பெற இயலவில்லை. மேலும் நீட் தேர்வில் ஒன்றுக்கு மேற்பட்டு 3 முறை திரும்ப தேர்வு எழுதும் வாய்ப்பு உள்ளதால் வசதி படைத்தோர் அதனைப் பயன்படுத்திப் சிறப்புப் பயிற்சி பெற்று தேர்வாகிறார்கள். எதிர்பார்த்தபடி நீட் தேர்வு நடைமுறையில் மீண்டும் ஏழை எளிய மாணவர்களுக்கு உரிய இடங்கள் கிடைக்கவில்லை.

கடந்த அதிமுக ஆட்சியில் **நீதிபதி கலையரசன்** குழு பரிந்துரை வந்த பின்பு இப்போது அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள் ஒதுக்கீடு கிடைத்தமையால் வருடத்துக்கு 400-க்கும் மேல் அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்கிறார்கள். தற்போதைய நிதித்துறை செயலாளரும் முன்னாள் கல்வித்துறை செயலாளருமான **உதயச்சந்திரன் அவர்கள்** எடுத்த முயற்சியினால் முதல் ஆண்டு பொதுத் தேர்வு கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த மதிப்பெண்கள் உயர்கல்வி சேர்க்கையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது கிடையாது .

தமிழகத்தின் முக்கியக் கட்சிப் பிரமுகர்கள் பலர் கல்வி வணிகர்களாக உள்ள நிலையில், இப்போதும் தொடர்ந்து ஏழைஎளிய மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இது தொடர்பாக ஏழை எளிய மாணவர்களின் கல்வியில் அக்கறை உள்ளவர்கள் விரிவாக விவாதிக்க வேண்டும்.

உடனடித் தீர்வாக உயர்கல்விச் சேர்க்கையில் விகிதாச்சாரப் பகிர்வு முறையைச் செயல்படுத்தலாம்.

அதன்படிக்கு

1) அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 55 %
2) அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு 15 %
3) பதின்மப் பள்ளி மாணவர்களுக்கு 25 %
4) சிபிஎஸ்இ பள்ளி மாணவர்களுக்கு 4.5%
5) ஆங்கிலோ இந்தியன் பள்ளி மாணவர்களுக்கு 0.5 %.

என விகிதாச்சாரப் பகிர்வு அளிக்கப்பட்டு அதில் தற்போதைய இட ஒதுக்கீட்டுமுறை பின்பற்றப்பட வேண்டும். கூடுதலாக கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

● **தாய்த் தமிழ்ப் பள்ளியைத் தொய்வில்லாமல் தொடர்ந்து நடத்தும் நீங்கள் அதன் வெற்றி எப்படி சாத்தியமானது என்பது குறித்துத் தெளிவுபடுத்தவும்:**

○ முதலில் தாய்த் தமிழ்ப் பள்ளியை நான் நடத்தவில்லை; திண்டிவனம் நகர மற்றும் ஊரகக் கல்வி மேம்பாட்டுக் கழகம் என்னும் கல்வி அறக்கட்டளைதான் பள்ளியை நடத்திவருகிறது என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திண்டிவனத்தில் 1986இல் இருந்து தொடர்ந்து கல்விக்காக நடைபெற்ற வெகுசன போராட்டங்களின் தொடர்ச்சியாகவே மேற்படி அறக்கட்டளை 1994 இல் தோற்றுவிக்கப்பட்டது. தினமணி நாளிதழில் திருப்பூர் தாய்த்தமிழ் பள்ளியைப் பற்றிய செய்தியைப் பார்த்து உந்துதல் பெற்று இப்பள்ளியை 01.08.2000 இல் தொடங்கினோம். மொட்டு, மலர் வகுப்புகளில் 21 குழந்தைகள், 1 ஆசிரியர், ஒரு தாயம்மாளுடன் பள்ளி தொடங்கப்பட்டது. தற்போது மழலையர் பிரிவில் 44 மாணவர்களும், 1 முதல் 8 ஆம் வகுப்புகளில் 216 மாணவர்கள் என மொத்தம் 260 குழந்தைகள் பயின்று வருகின்றனர். தலைமை ஆசிரியர் உள்ளிட்டு 11 ஆசிரியர்கள் மற்றும் 9 பணியாளர்களுடன் பள்ளி செவ்வனே செயல்பட்டு வருகிறது.

பள்ளியின் வெற்றிக்கான காரணங்கள் என சொல்ல வேண்டுமெனில், (அ) பள்ளிக்கு ஒரு வெகுசனச் சார்பு உள்ளது அல்லது வெகுசன அடிப்படை உள்ளது என்று கூறலாம். (ஆ)

அடுத்ததாக திண்டிவனத்தில் ஏழை எளிய தலித் மக்கள் வாழும் பகுதியில் பள்ளி அமைந்துள்ளதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தமிழில் பயிலச் சேர்க்கத் தயங்குவதில்லை, (இ) ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணியின் காரணமாக தரமான கல்வி வழங்கப்படுகிறது. பக்கத்தில் உள்ள ஆங்கில வழிப் பள்ளியில் பயின்று வரும் 3, 4, 5 ஆம் வகுப்பு மாணவர்களைப் பெற்றோர்கள்' தாய்த் தமிழ்ப் பள்ளியின் தரமான கல்வி பற்றி தெரிந்து இப்பள்ளியில் வந்து சேர்க்கிறார்கள், (ஈ) அனைத்து மாணவர்களுக்கும் இலவயக் கல்வி, தரமான மதிய உணவு, மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மழலைகளுக்குக் காலையில் சத்து மாவுக் கூழ், மாலையில் முளைகட்டிய பயிறு வகை என கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது, (உ) தரமான இலவயக் கல்வியுடன் வெகுமக்கள் மத்தியில் வெளிப்படையாக வரவு செலவுக் கணக்குகளைத் துண்டறிக்கையாக அச்சடித்து விநியோகித்தல் போன்ற காரணங்களால் பள்ளிக்கு விரும்பி வந்து நிறையப் பேர் நன்கொடை வழங்குகிறார்கள், (ஊ) பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் வெகுமக்கள் குறிப்பாக பெற்றோர்களின் கருத்தை அறிந்து தேவையான மாற்றங்களை செய்து வருகிறோம், (எ) வகுப்பறைத் தண்டனை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் பள்ளியில் மிகவும் மகிழ்ச்சியாகவும் தன்னம்பிக்கையோடும் பயின்று வருகிறார்கள், (ஏ) ஓய்வு பெற்ற நல்ல ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு ஆசிரியர்களுக்கு அடிக்கடி தேவையான வழிகாட்டல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன, (ஐ) திண்டிவனம் நகராட்சி எல்லைக்குள் பள்ளிக்காக, பள்ளியைச் சுற்றி 89 சென்ட் நிலம் உள்ளது. தேவையான கட்டட வசதி மற்றும் உள்கட்டமைப்பு, கழிப்பிட வசதி போன்ற அனைத்து வசதிகளும் பள்ளியில் உள்ளதால், பெற்றோர்கள் இப்பள்ளியை அதிகம் விரும்புகிறார்கள் (ஒ) நாங்கள் கட்டணக் கல்வியை எதிர்த்து போராட்டம் நடத்தி வந்துள்ளதால், நாங்கள் இலவயக் கல்வியுடன் தரமான மதிய உணவு மற்றும் சீருடைகள் வழங்கிவருகிறோம். இதனை நகர மக்கள் ஆதரவுடன் செய்துவருகிறோம்.

- **அத்தியூர் விஜயா குறித்த உங்களது பதிவுகள்.**

○ அத்தியூர் விஜயா என்பவர் ஒரு பழங்குடி இருளர் பெண். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் அத்தியூர் கிராமத்தில் மாசி தங்கமா தம்பதியினரின் அன்பு மகள். கண்டுபிடிக்க முடியாத திருட்டு வழக்குகளில் நலிந்த பிரிவினரான இருளர்களை சித்திரவதை செய்து சிறையில் அடைப்பது என்பது காலம் காலமாக நடந்து வரும் ஓர் அநியாயமாகும். அப்படித்தான்

புதுச்சேரியில் 1993இல் வெங்கட்டா நகரில் ஒரு திருட்டுச் சம்பவம் நடந்தது. அந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்ப்பதற்கு புதுச்சேரி காவல்துறை, தமிழக காவல்துறைத் தனிப்பிரிவு உதவியோடு அத்தியூர் சென்றுள்ளார்கள்; அத்தியூர் விஜயாவை அவர் உறவினர் வீட்டை காண்பிக்க அழைத்துச் செல்லும்போது அவரை ஐந்து காவலர்கள் பாலியல் வன்கொடுமை செய்தார்கள். இது பத்திரிகை செய்தியானது. செஞ்சி வழக்கறிஞர் செல்வராஜ் தலைமையில் உண்மை அறியும் குழு சென்று ஆய்வு செய்து அறிக்கை வெளியானது. சிபிசிஐடி புலன் விசாரணை நடைபெற்றது. வழக்கில் விஜயா மற்றும் அவரது உறவினர்கள் நன்கு சாட்சியம் அளித்தனர். விசாரணையின் முடிவில் 2006 ஆம் ஆண்டு தீர்ப்பு வெளியானது. குற்றம் சுமத்தப்பட்ட ஆறு காவலர்களுக்கும் தண்டனை அளித்து விழுப்புரம் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்தது.

சம்பவம் நடந்த 1993 இல் விஜயா வயது 17. காவல் துறை மற்றும் ஆதிக்க சாதியினரால் பாதிக்கப்பட்ட தன் உறவினர்களை திண்டிவனத்திற்கு அழைத்து வந்து புகார் கொடுக்க அவர்களுக்கு உதவினார். இப்படி 1993 இலிருந்து 96 வரை பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் அவர் மூலம் பெறப்பட்டது. அதன் பிறகுதான் 1996 இல் **பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்** உருவானது. வழக்கு விசாரணையில் தொடர்ந்து உறுதியாக இருந்து வந்தார். புதுச்சேரி போலீசார் ரூபாய் ஐந்து இலட்சம் வரை கொடுக்க முன்வந்த போதும் அதை ஏற்க மறுத்து நல்ல முறையில் சாட்சியம் அளித்தார். அதனால்தான் ஆறு காவலரும் விழுப்புரம் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றனர். ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடு போன்றவற்றில் பங்கேற்பதில் ஆர்வமுடன் இருந்தார். பாதிக்கப்பட்ட இருளர்களை அழைத்துக்




2015–அத்தியூர் விஜயா நினைவு விருது வழங்கும் விழா

கொண்டு காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று கேள்வி கேட்பார். பிற பணிகளுக்காக அத்தியூர் செல்லும் போதெல்லாம் நல்ல முறையில் தேனீர் சிற்றுண்டி அளித்து உபசரிப்பார். அவர் 2014 இல் 40-ஆவது வயதில் காலமானது பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

**எழுத்தாளர் முனைவர் து.ரவிக்குமார்** ஆலோசனையின் பேரில், வழக்குகளில் இறுதிவரை உறுதியாக நின்று போராடும் இருளர்களுக்கும், பழங்குடியினருக்காகப் பணி செய்துவரும் மனித உரிமை ஆர்வலர்களுக்கும் **அத்தியூர் விஜயா நினைவு விருது** வழங்கப்பட்டு வருகிறது.

- **நீங்கள் சந்தித்த பிற வழக்குகள் மற்றும் அதன் முடிவுகள்.**

○ 1992 திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே உள்ள பொன்னூர் கிராமத்தில் உள்ள தலித் மக்களின் உரிமைப் போராட்டத்தில் இரு சமூகங்களுக்கு இடையே பகைமை உருவாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் 31 ஆண்டுகள் ஆன பின்பும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

1993 விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியதாக திண்டிவனத்தில் கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன். 17 ஆண்டுகள் நடைபெற்ற வழக்கில் 2010ல் விடுதலை கிடைத்தது. 1998 இசுலாமியருடன் சேர்ந்து சதி செய்ததாக என்னோடு ஒன்பது பேர் விழுப்புரத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டோம். விழுப்புரம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் பின்பு விடுதலை கிடைத்தது.

2000 திண்டிவனம் நீதிமன்ற வளாகத்தில் பிள்ளையார் சிலை வைத்ததை முன்னிட்டு திராவிடர் கழக நகரத் தலைவர் கா.மு தாஸ் , மற்றும் ஆசிரியர் மு.கந்தசாமி ஆகியோருடன் சென்று எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக நான் கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன். மூவர் மீதும் குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு சென்னையில் உள்ள ஒரு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. வழக்கில் பின்பு மூவருக்கும் விடுதலை கிடைத்தது.

2002 திண்டிவனம் பட்டணம் கிராமத்தில் தண்ணீர் பிடிக்கச் சென்ற இடத்தில் இருளர் இனப் பெண் தாக்கப்பட்ட வழக்கில் கட்டப்பஞ்சாயத்திற்கு உடன்படாததால் இருளர் ஒருவரை நான் தாக்கச் சென்றதாகப் பொய் வழக்குப் போட்டனர். இதனைக் கண்டித்து விழுப்புரத்தில் மாபெரும் பேரணி மற்றும் மாநாடு வி.சி.க தலைவர் **தொல் திருமாவளவன்** தலைமையில் நடத்தப்பட்டது. இதனையடுத்துப் பொய் வழக்கைக் காவல் துறை திரும்பப் பெற்றது.

2010 சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதி பெற்று ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக கடலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்றமைக்கு இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன். இதில் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

2011 திருக்கோயிலூர் தி.கே.மண்டபத்தில் நான்கு இருளர் பெண்கள் காவலர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான வழக்கில் மேற்படிப் பெண்களுக்குச் சட்டரீதியாக உதவி செய்தமைக்காக விழுப்புரம் மனித உரிமை ஆர்வலர் பி.வி.ரமேஷ் உடன் நானும் சேர்ந்து பழங்குடி இருளர் ஒருவரைத் தாக்கியதாக எங்கள் இருவர் மீதும் எஸ்.சி/எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் அண்மையில் 2022 இல் சென்னை உயர் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

2019 திண்டிவனம் அருகே உள்ள மயிலம் காவல் நிலையத்தில் சித்தரவதை செய்யப்பட்ட பழங்குடி இருளர் மோகன் என்பவருக்குப் புகார் எழுத உதவியமைக்காக மோகன், சங்கத்தின் முகாம் தலைவர் பெரியபையன், எழுத்தாளர் முருகப்பன் மற்றும் நான் ஆகிய நால்வரும் மோகன் மனைவி ரோஜாவைத் தாக்கியதாக வழக்குப் போடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணை தற்சமயம் திண்டிவனம் நீதித்துறை நடுவர் மன்றம் 2 இல் நடைபெற்று வருகிறது.

- **கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட வழக்கின் பின்னணி.**

○ 2000 வாக்கில் கன்னட நடிகர் இராஜ்குமார் வீரப்பன் குழுவினரால் கடத்தப்பட்டார். அப்போது அவருடன் இராஜ்குமார் மனைவியின் சகோதரர் உள்ளிட்ட மூவர் கடத்தப்பட்டார்கள். இச்சம்பவம் தமிழகம் கர்நாடகா எல்லையிலும் கர்நாடகத்திலும் பதற்றத்தை ஏற்படுத்தியது. நக்கீரன் கோபால் உள்ளிட்டோர் மூலம் பேச்சுவார்த்தை நடத்தியும் முடிவு எட்டப்படாத சூழலில் வீரப்பன் குழுவினரால் **ஐயா பழ.நெடுமாறன் தலைமையில், நான், புதுவை கோ.சுகுமாரன், கொளத்தூர் மணி** ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழ் நாடு, கர்நாடகா அரசு சார்பில் நாங்கள் வீரப்பன் குழுவினரைச் சந்திக்கச் சென்றோம். வீரப்பன் குழுவினர் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் மனித உரிமைகள் சார்ந்த கோரிக்கைகள் ஆகும்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் இரண்டு முக்கியமானவை. வீரப்பனைப் பிடிக்க அமைக்கப்பட்ட கர்நாடக தமிழக கூட்டு அதிரடிப்படை செய்த அட்டூழியங்கள் கொடூரமானவை. 100 பேர்

போலி மோதலில் கொல்லப்பட்டனர். 60 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். 300க்கும் மேற்பட்டோர் ஊனமற்றவர்களாக ஆக்கப்பட்டனர். இவை அனைத்தும் பாதிக்கப்பட்டவர்கள் அஞ்சாமல் கூறிய விவரங்கள் ஆகும். இப்படியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கத் **தேசிய மனித உரிமைகள் ஆணையம் நீதிபதி சதாசிவா** தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்தது. நீதிபதி சதாசிவ ஆணைய விசாரணைக்குக் கர்நாடக அதிரடிப்படை காவல் அதிகாரி உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கி இருந்தார். இத்தடையை நீக்கி நீதிபதி சதாசிவ ஆணையம் விசாரணை முடித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வேண்டும் என்பது முக்கியமான கோரிக்கை. இராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பின்னர் அத்தடை நீக்கப்பட்டு, மாதேஸ்வரன் மலையில் நீதிபதி சதாசிவம் ஆணையம் நான்கு நாட்கள் விசாரணை மேற்கொண்டது. நானும், கோ.சுகுமாரன் இருவரும் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆணையத்தில் சாட்சியம் அளிக்க உதவியாக இருந்தோம். நீதிபதி சதாசிவா ஆணையம் விசாரணை முடித்து அறிக்கை அளித்தது. பின்னர், கர்நாடக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையாக அல்லாமல், ஓரளவிற்கு நிவாரணம் வழங்கியது.

அடுத்து கர்நாடகா மைசூர் சிறையில் 124 தமிழர்கள் வீரப்பனுக்கு உதவியதாகத் தடாச் சட்டத்தில் சிறையில் இருந்தனர். இதில் 14 பேர் பெண்கள். இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட வேண்டும் என்பது மற்றொரு முக்கிய கோரிக்கை. இராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பின்னால், நீதிபதி கிருஷ்ணப்பா தலைமையில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. வழக்கு விசாரணை முடிந்து நான்கு பேர் தவிர அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். நால்வருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. நால்வரும் இறந்து போய்விட்டனர். தடாவில் ஒன்பதரை ஆண்டுகள் மைசூர் சிறையில் வாடினர்.

● **வீரப்பனுடனான உங்களது தனிப்பட்ட அனுபவங்கள் பற்றி விரிவாக குறிப்பிடவும்.**

○ வீரப்பன் குழுவினர் எப்போதும் மிகவும் எச்சரிக்கையோடும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே வாழ்ந்து வந்துள்ளனர் அவர்களுடன் இருந்த மூன்று பேர் மாறன், இனியன், ரமேஷ் ஆகிய மூவரையும் எனக்கு முன்பே தெரியும். அவர்கள் அன்றைய தென்னாற்காடு மாவட்டத்தில் தமிழகம் சார்ந்து தமிழ்த் தேசிய அமைப்புகளில் செயல்பட்டு வந்தவர்கள். காவல் துறையின் அத்துமீறல்கள் மற்றும் அடக்குமுறைகளைக் கண்டித்து



நடைபெறும் மாநாடுகள் மற்றும் இயக்கங்களில் சந்தித்துள்ளேன். அவர்களை எந்த நேரமும் காவல்துறையினர் வந்து பிடிக்கலாம் என்ற எச்சரிக்கை உணர்வோடு வாழ்ந்து வந்தனர். பேச்சுவார்த்தையின் போது கோரிக்கைகளை மிகவும் அக்கறையோடு அணுகினார்கள். அவர்களுக்கு அன்றாடம் உணவுப் பிரச்சனை மிகவும் கடினமானது. அவர்கள் காட்டில் வாழும் மக்களின் ஆதரவோடுதான் தங்களின் தேவைகளை நிறைவேற்றி வந்தனர். அவர்களுக்கு மக்கள் ஒரு பாதுகாப்பு அரணாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் காடுகளில் பயணிக்கும் போது அவர்கள் சென்ற இடங்களில் ஒரு சிறு தடயங்களைக் கூட விட்டுச் செல்ல மாட்டார்கள். அவர்கள் அப்படி விட்டுச் சென்றால் காவல்துறையினர் அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க காரணமாகிவிடும். மேலும் வீரப்பனைப் பொருத்தமட்டில், ஊடகங்களுக்குப் பேட்டி கொடுப்பதையும் அவர்கள் குறித்த செய்தி வெளிவருவதையும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார். கையில் குறித்த வைத்திருந்த கையடக்கமான ரேடியோ மூலம் அவ்வப்போது செய்திகளைக் கேட்பதில் வீரப்பன் குழுவினர் ஆர்வமாக இருந்தனர். காட்டு வாழ்க்கையை விடுத்து மக்களோடு மக்களாக வாழ வேண்டும். எல்லோரையும் போல் வாழ வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தனர். முறையான பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் அவர்கள் தானாக சரண்டர் ஆகி தமிழக அரசியலில் ஈடுபட்டிருப்பார். அதை தடுப்பதற்காகவே கைது செய்யப்பட்டு, பின் என்கவுன்டர் பெயரில் தமிழ்நாடு காவல்



ராஜ்குமார் மீட்புக்குழுவினரை வீரப்பன் வழி அனுப்புதல்




**வீரப்பன் கூட்டாளிகள் என்பதற்காகத் தூக்கு தண்டனை வழங்கப்பட்டதை எதிர்த்து, 2004 கர்நாடாகவில் நடைபெற்ற மரண தண்டனை ஒழிப்பு மாநாடு**

காவல்துறையின் தனிப்படையினர் சுட்டுக் கொன்று விட்டனர். நம்பியவர்கள் காட்டிக்கொடுத்துளனர். நம்பியதில்தான் குறைபாடு. இல்லை என்றால் காட்டில் அவர்களைத் தனிப்படையினர் பிடிப்பதற்கு வாய்ப்பே கிடையாது .

● **தொடக்க காலத்திலிருந்து இன்றைய காலம் வரை உங்களது மனித உரிமைச் செயல்பாடுகள் மற்றும் அதன் விளைவுகள்;**

○ எனக்கு இடதுசாரி அரசியல் குறித்து ஈடுபாடு வந்த தொடக்கத்திலேயே **எங்கல்ஸ் எழுதிய குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், லெனின் அவர்கள் எழுதிய அரசும் புரட்சியும், முரண்பாடுகள் பற்றி மாவோ எழுதிய நூல்** ஆகியவற்றை விரும்பி படித்ததோடு மட்டுமின்றி மாணவர்களோடும், இயக்கத்தில் உள்ள இளைஞர்களோடும், இயக்கத் தோழர்களோடும் விவாதித்துள்ளேன். எனவே அரசு, அரசாங்கம் பற்றி ஓரளவு அடிப்படைப் புரிதல் இருந்தது. அதிலிருந்து அரசு என்பது ஆளும் வர்க்கத்திற்கான ஓர் அடக்குமுறைக் கருவி என்பதில் எனக்கு ஒரு தெளிவு ஏற்பட்டது. இந்த அடிப்படைப் புரிதலில் இருந்துதான் என்னுடைய மனித உரிமைச் செயல்பாடுகள் அமைந்தது. பல்வேறு இயக்கத் தோழர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் செயல்பாட்டாளர்களுடன், ஏற்பட்ட தொடர்பு, உண்மை அறியும் குழுக்களில் பங்கேற்றது என்னுடைய பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எந்த இயக்க வேலைகளிலும் மனித உரிமை மீறலை உற்றுக் கவனிக்கக் காரணமாயிற்று. புரட்சி பண்பாட்டு இயக்கம் மூலம் கிடைத்த அனுபவங்கள், தொடர்ந்த மனித உரிமைப் பணிகளுக்கு அடித்தளமாக இருந்தது. ஆசிரியர் சங்கங்களின் போராட்டங்களில் பங்கேற்றவை எல்லாம் நல்ல பாடமாக அமைந்தது.

இவற்றோடு நண்பர்களோடு கூட்டு முயற்சியின் விளைவுதான் விழுப்புரம் நெம்புகோல், திண்டிவனம் நகரக் கல்வி மேம்பாட்டுக்குழு, மக்கள் கல்வி இயக்கம், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம், திண்டிவனம் ரோஷணை தாய்த்தமிழ்ப் பள்ளி பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளை எனத் தொடரும் பணிகள் ஆகும். இந்த அமைப்புகள் மூலம் சில காரியங்கள் நடைமுறை சாத்தியமாகி உள்ளன. சாத்தியப்பாடு உள்ள கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதில் கூடுதல் கவனம் செலுத்துவேன்.

● **இருளர் சமூகத்தோடு உங்களுக்கு ஏற்பட்ட தொடர்பு மற்றும் பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் தோற்றம் ஆகியவை பற்றி விரிவாகத் தெரிவிக்கவும்.**

○ அத்தியூர் விஜயா வழக்கில் (1993) உண்மை அறியும் குழுவில் தொடங்கியதுதான் இருளர் சமூகத்துடனான தொடர்பு. அக்குழுவில் **சகோதரி லூசினா** அவர்களும் இடம் பெற்றிருந்தார். அடுத்தடுத்து இருளர்களின் பாதிப்புகள் அத்தியூர் விஜயா மூலம் எங்களுக்குத் தெரியவந்தது. அவர்கள் உறவினர்களின் பாதிப்புகளை அறிந்து நண்பர்கள் மூலம் களைய முற்படும்போது நண்பர்கள் ஆலோசனை மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்களின் ஆலோசனையின் பேரில் **பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் 1996 இல் தொடங்கப்பட்டது**. அந்தக் கால கட்டத்தில் திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சிவ.ராஜேந்திரன் மூலம்தான் எஸ்.சி/எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் விதிகள் தெரிய வந்தது. நெய்வேலியில் பணியாற்றிய பொறியாளர் சி.துரைக்கண்ணு , புதுச்சேரியில் பணியாற்றிய துரை. ரவிக்குமார், கோ.சுகுமாரன் மற்றும் விழுப்புரம் நெம்புகோல் தோழர்கள் ஆகியோர் துணையோடு பாதிக்கப்பட்ட இருளர்களை மையமாகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வந்தோம். பழங்குடி இருளர் சமூகத்தில் பிறந்த சிறுவலை மு.நாகராஜன் ஆசிரியர் ஜெயபாலன், தொட்டித்தோப்பு சு.ஆறுமுகம் , பாரதி நகர் ஆதிமூலம், மாணவர் பருவத்தில் அறிமுகமான ஆசிரியர் பொன்.மாரி, 1987 இல் அறிமுகமான அருட்தந்தை அ.ரபேல்ராஜ் எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய ஆட்சிப் பணியில் இருந்த கிறிஸ்துதாஸ் காந்தி, ப.சிவகாமி போன்றோரின் நட்பு, ஆதரவு , ஆலோசனைகள், கூட்டு முயற்சி தொடர் போராட்டங்கள் இவையே இன்றைய பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம்.

தொடக்கத்தில் ஊடகவியலாளர் ஆகவும் தற்போது திரைப்பட இயக்குனராகவும் உள்ள **த.செ.ஞானவேல்** அவர்களின் நட்பு 2007 இல் கிடைத்தது. அவர் மூலம் **நடிகர் சூர்யா** அவர்களின் **அகரம்**

**கல்வி அறக்கட்டளை, சக்தி மசாலாவின் சக்தி தேவி அறக்கட்டளை** இதுபோன்று இன்னும் **ராமராஜ் காட்டன்** போன்ற பலருடைய தொடர்பு கிடைத்தது. அவர்கள் மூலம் கிடைத்த நன்கொடை திண்டிவனம் ரோசனை தாய்த் தமிழ் பள்ளியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. ஞானவேல் இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்து, தயாரித்த **ஜெய்பீம் திரைப்படம்** வெளியானது. பழங்குடி இருளர் மக்களின் அவலங்களை உலக அளவில் எடுத்து சென்றுள்ளது. தற்போது இருளர்களின் கோரிக்கைகள் தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் நன்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தமிழக அரசும் சாதிச் சான்று மனைப்பட்டா நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், பசுமை வீடு கட்டும் திட்டம் போன்ற கோரிக்கைகளை ஓரளவு நிறைவேற்றி வருகிறது. சங்கமும் புது உத்வேகம் பெற்றுள்ளது.

● **பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் தற்போதைய வளர்ச்சி:**

○ விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 20 க்கும் மேற்பட்ட வட்டங்களில் மொத்தம் 5000-க்கு மேல் உறுப்பினர்கள் கொண்ட இயக்கமாக உள்ளது. அண்மையில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் காலூன்றி உள்ளது. காவல் துறை மற்றும் சாதிய அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் இயக்கமாகவும் சாதிச்சான்று மனைப்பட்டா, வீட்டுமனை ஆகியவைகளை பெற்றுத்தரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. நேர்மையான காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் நன்னம்பிக்கை பெற்றுள்ள ஒரு இயக்கமாக உள்ளது. 1993 இல் அத்தியூர் விஜயா வழக்கை எடுத்த போது இருந்த நிலையை ஒப்பிடும் போது தற்சமயம் ஒரு பாதுகாப்பு உள்ளது. இந்த மாவட்டங்களில் இவர்கள் மீது காவல் துறை போடும் பொய் வழக்குகள் குறைந்துள்ளது. அதேபோல் சாதி அடக்குமுறைகளும் குறைந்துள்ளது .

● **பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளையின் செயல்பாடுகள்:**

○ சங்கம் முறையாக 1996 தொடங்கப்பட்டது. 1999 இல் மேற்கொண்ட கள ஆய்வு இருளர்கள் மத்தியில் எழுத்தறிவு 12% ஆக இருந்தது. கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 1999 லிருந்து 2 முதல் 8 வகுப்பு மாணவர்களுக்கு கோடைக்காலப் பயிற்சி நடத்தினோம். **2007 பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளை தொடங்கப்பட்டது.** தலா ரூபாய் 5000/ வீதம் அறக்கட்டளை உறுப்பினர்களிடம் நன்கொடை பெற்று அனந்தபுரத்தில் 28 சென்டு மனை வாங்கியுள்ளோம். அங்கு விரைவில் மாணவர்கள் தங்கிப்

பயில விடுதி கட்டவுள்ளோம். **ஜெய்பீம் திரைப்படம் தயாரித்த நடிகர் சூர்யா அறக்கட்டளைக்கு ரூபாய் ஒரு கோடி நன்கொடை வழங்கியுள்ளார்கள்.** அந்தத் தொகையில் இரண்டு விடுதிகள் கட்ட முடியும். திண்டிவனம் ரோஷணை தாய்த்தமிழ் பள்ளியில் ஒரு விடுதி கட்டப்பட்டுள்ளது. அடுத்த கல்வி ஆண்டு முதல் அதில் 50 இருளர் மாணவர்கள் தங்கிப் பயில உள்ளனர். புனித அன்னாள் சபை, கிளாரட் சபை, அகரம் கல்வி அறக்கட்டளை ஒத்துழைப்பு மற்றும் ஆதரவோடு 100-க்கும் மேற்பட்டோர் பட்டப்படிப்பை படித்துள்ளனர். பழங்குடியினர் கல்வி உரிமை மாநாடு நடத்தவுள்ளோம்.

● **பழங்குடி மக்கள் செயல்பாட்டாளர் சகோதரி லூசினா குறித்த உங்கள் கருத்துக்கள்**

○ திண்டிவனம் நகரக் கல்வி மேம்பாட்டுக் குழு செயல்பாடுகள் குறித்துத் தெரிந்து 1990 களில் திண்டிவனம் பகுதிக்கு வருகை தந்தார்கள். 1993 அத்தியூர் வழக்கு தொடர்பான உண்மைஅறியும் குழுவில் ஆர்வத்துடன் பங்கேற்றார். தொடர்ந்து 1996 இல் பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் தோற்றுவிக்க முக்கியப் பங்காற்றியவர்.

விளிம்பு நிலை மக்களின் கல்வியில் அதிக அக்கறை உள்ளவர். இதுவரையிலும் பழங்குடி இருளர் மாணவர்களுக்கு 20 க்கும் மேற்பட்ட கோடைக்காலப் பயிற்சி முகாம்களை முன்னின்று நடத்தியவர். 50-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உருவாக காரணமானவர். தற்சமயம் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் 6 வட்டங்களுக்கு ஒருங்கிணைப்பாளராகச் சிறந்த முறையில் அர்ப்பணிப்புடன் தனது 77-வது வயதிலும் ஓய்வின்றி உழைத்து வருகிறார்.

● **தோழர் தொல்.திருமாவளவனுடன் உங்களது அனுபவங்கள்**

○ 1989-இல் மக்கள் கல்வி இயக்கம் தொடங்கப்பட்டது. தலித்துகள் பிரச்சனைகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவது எனத் தீர்மானித்தோம். இதன் தொடர்ச்சியாக 1992 இல் பாட்டாளி மக்கள் கட்சியின் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் பங்கேற்கச் செய்தோம். 1995 இல் புதுச்சேரியில் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற தடா எதிர்ப்பு மாநாட்டில் அவர் பங்கேற்றார். தொடர்ந்து பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் அனைத்து மாநாடுகளில் பங்கேற்று ஆதரவு தெரிவித்தார். திண்டிவனம் ரோஷணை தாய்த்தமிழ்ப் பள்ளியில் 2014-இல், தனது தந்தையின் நினைவாக **ரூபாய் 3.5 இலட்சம் செலவில் ஒரு வகுப்பறை கட்டிக்கொடுத்துள்ளார்.** 2007 இல் எனக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி ரூபாய் 50,000/ பரிசுத்தொகையும் வழங்கி என்னை ஊக்குவித்துள்ளார்.

23.02.2019 இல் இருளர் மக்களுக்குச் சாதிச் சான்று, மனைப்

பட்டா கேட்டு விழுப்புரத்தில் மாபெரும் மாநாடு நடைபெற்றது. இதனை அடுத்துதான் கீழ்சிவிறி கிராமம் தென்னேரியில் இருளர் மக்களுக்கு 80க்கும் மேற்பட்ட மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் அருட்தந்தை ரபேல்ராஜ் உதவியுடன் தமிழக அரசின் பசுமை வீடு கட்டும் திட்டம் செம்மையாக அமல்படுத்தப்பட்டு உள்ளது.

- **ஈழப் போராட்டத்தில் உங்களது பங்களிப்பு**

○ திண்டிவனம் பகுதி மற்றும் ஒன்றுபட்ட தென்னாற்காடு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டோம். தமிழீழ விடுதலை தமிழீழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பில் பங்கேற்றுள்ளேன். திண்டிவனம், விழுப்புரம், செஞ்சி பகுதிகளில் பரவலான பிரச்சாரம் மேற்கொள்ள என்னால் இயன்ற பணிகளை செய்துள்ளேன்.

தமிழீழ விடுதலைக்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாமங்கலம் வங்கி வழக்கில் **பேராசிரியர்களான சௌந்தரபாண்டியன், பாலசுப்பிரமணியன் என்ற பாலு மற்றும் அருட்தந்தை சூசைமாணிக்கம்** ஆகியோர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்களுடன் இணைந்து வழக்கு நிதி திரட்டி நீதிமன்றத்தில் அவர்கள் விடுதலை பெறுவதற்கு மாயவரம் வழக்கறிஞர் இராமதாஸ் மூலம் முயற்சி செய்து, அவர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தோம்.

புரட்சிப் பண்பாட்டு இயக்கம் சார்பில் தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக நூல் வெளியிட்டு மாநிலம் முழுமைக்கும் பிரச்சாரம் மேற்கொண்டோம். வேலூரில் நடைபெற்ற தமிழீழ ஆதரவு மாநாட்டில் பங்கேற்றமைக்கு அப்போதைய பா.ம.க தலைவர் பேராசிரியர் தீரன் அவர்களோடு என்னையும் கைது செய்து பின்பு விடுதலை செய்தனர்.

- **அகரம் கல்வி அறக்கட்டளையில் உங்களது பங்களிப்பு**




2013 அகரம் அறக்கட்டளை கல்வி உதவித் தொகை வழங்கும் வழங்கும் நிகழ்வு.

○ **2010 இல் நடிகர் சூர்யா அவர்களால் அகரம் கல்வி அறக்கட்டளை தொடங்கப்பட்டபோது** பல ஆலோசகர்களில் நானும் ஒருவனாக த.செ.ஞானவேல் அவர்கள் பரிந்துரைத்ததின் பேரில் செயல்பட்டு வருகிறேன். அதன் செயல்பாடுகள் அனைத்தும் விளிம்பு நிலை மாணவர்கள் நலன் கருதியே திட்டமிடப்படுகிறது. அகரம் கல்வி அறக்கட்டளையின் சொத்து,அதற்காக செயல்பட்டுக் கொண்டிருக்கும் தன்னார்வலர்கள்தான். எல்லோருடனும் கலந்து பேசி சனநாயக முறையில் நல்ல முடிவுகளை எடுக்கிறார்கள். எனது பங்கேற்பு என்பது சேர்க்கையின் போது நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வது மட்டுமே. **எனக்கு மிகவும் பிடித்தது முதல் தலைமுறை ஏழை எளிய மாணவர்கள் பயின்று வரும் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிப்பதுதான். தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் உச்சத்திற்கு வருவார்கள் என்பதற்கு அகரம் கல்வி அறக்கட்டளை ஒரு நற்சான்றாகும்.** கல்வி அளிப்பதோடு நின்றுவிடாமல் தொடர்ந்து அவர்கள் நல்ல பணியில் சேர்வதற்கும் வழி காட்டுகிறார்கள். பின்பு அவர்கள் சமூக மேம்பாட்டில் அக்கறை உள்ள ஒரு நல்ல குடிமகனாக மாற்றுவதிலும் சாதனை படைத்து வருகிறார்கள்.



● **தந்தை பெரியார் அவர்கள் குறித்த உங்களது அணுகுமுறை:**

○ பெரியார் அவர்களின் கடவுள் மறுப்பு, பெண்ணடிமைக்கு எதிரான கருத்துகள் போன்ற அவருடைய பகுத்தறிவு கருத்துக்களில் முழு உடன்பாடு உண்டு. பெரியாருடைய கருத்தியல்தான் இன்றளவும் மதவாதத்திற்கு எதிரான ஒரு பேராயுதமாக உள்ளது. அவருடைய பகுத்தறிவு கருத்துக்களைத் தொடர்ந்து பரப்புவதுதான் நம்மை ஆர்.எஸ்.எஸ் அபாயத்திலிருந்து பாதுகாக்கும்.

● **த.செ.ஞானவேல் அவர்களுக்கு நீங்கள் அளித்த பேட்டி ஒன்றில் “தமிழ்த் தேசிய அரசியலின் மீது எப்போதும் அதிக ஈடுபாடு உள்ளவன் நான்” என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கவும்:**

○ இந்தியா என்பது ஒரு தேசம் அல்ல; இது பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு ஆகும்: நடைமுறையில் இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடமாக உள்ளது. **ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். ஒன்றிய அரசு என்பது தேசிய**

**இனங்களின் கூட்டமைப்பாக இருக்க வேண்டும்.**

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இந்தியாவில் ஒன்றிய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை ஒவ்வொன்றாகத் தனதாக்கிக் கொள்கிறது. அதாவது தேசிய இனங்களை தொடர்ந்து ஒடுக்கி வருகிறது. கல்வி மருத்துவம் போன்றவற்றில் மாநில அரசுகளின் உரிமைகள் பறிபோய்க்கொண்டு இருக்கின்றன. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை செய்வதை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. அந்தந்த தேசிய இன மக்களுக்கு அனைத்து உரிமைகளும் இருந்தால்தான் அவர்கள் சுயமாக திட்டமிட்டு மேம்பாடு அடைய முடியும்.

● **உங்களது எதிர்காலத் திட்டங்கள் பற்றித் தெளிவுபடுத்துக:**

○ (1) விளிம்பு நிலை மக்களுக்கான பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் தொடர்ந்து மக்களைச் சார்ந்து செயலாற்றுவதற்கு தேவையான அரசியல் மற்றும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பழங்குடி மக்களின் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும்.

(2) பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளை, பழங்குடியினரில் விளிம்பு நிலை மக்களின் குழந்தைகள் கல்வி மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும். இதற்குத் தேவையான கல்வியாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் இச்சமூகத்திலிருந்து உருவாக்கப்பட வேண்டும்.

(3) திண்டிவனம் தாய்த் தமிழ்ப் பள்ளி தொடர்ந்து விளிம்பு நிலை மக்களுக்கானதோர் பள்ளியாகவும் மாநில அளவில் முன்மாதிரியானதொரு பள்ளியாகவும் வளர்ச்சி பெற வேண்டும். இதற்குத் தேவையான திட்டங்களைக் கல்வியாளர்கள் மற்றும் நகர மக்களின் ஆதரவோடு குறிப்பாக ரோஷணைப் பகுதி மக்கள் பங்கேற்புடனும் பழங்குடி சமூகத்தின் ஒத்துழைப்புடனும் மேற்கொள்ள வேண்டும்.

(4) மாநில அளவில் மக்கள் கல்வி இயக்கப் பணிகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் வழிக் கல்வியின்-அதாவது தாய் மொழியில் பயில்வதின்-அவசியத்தை விரிவாக அடித்தட்டு மக்களிடம் பிரச்சாரமாக எடுத்துச் செல்ல வேண்டும்.

(5) கல்வியில் வணிகமயமாதலுக்கு எதிராகவும், ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலன் சார்ந்தும், ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பு குறித்தும், கல்வியில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக தேசிய நலன் சார்ந்ததும் செயல்பட வேண்டும்.

(6) கல்வியை மாநில பட்டியலுக்குக் கொண்டு வருவதின்

அவசியத்தையும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்தும் பரவலாகப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். இதற்கான ஆதரவு அரசியல் இயக்கங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் .

(7) இந்தியாவில் தொடர்ந்து சனநாயகம் நிலைத்திட அடிப்படை வாத அரசியலுக்கு எதிராகவும் சர்வதேச மனித உரிமை பிரகடனங்களைப் பாதுகாக்கும் வகையிலும் தொடர்புகளை வளர்த்தெடுக்க வேண்டும்.

❖❖❖




2016 மதுரை சோகோ அறக்கட்டளை சார்பாக நீதிபதி கிருஷ்ணய்யர் நூற்றாண்டு விருதினை நீதிபதி முருகேசன் வழங்குகிறார்.



2017 இந்து தமிழ் திசை நாளிதழ் வழங்கிய தமிழ் திரு விருது

# கருக்கலைப்பு அரசியல்: அமெரிக்கா, இரசியாவை முன்வைத்து

எம். பாண்டியராஜன்

அமெரிக்காவில் ஒஹையோ மாகாணத்தில் நவம்பரில் நடந்த வாக்கெடுப்பில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கருக்கலைப்பை உறுதி செய்வதை மக்கள் அங்கீகரித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பின்போது கருக்கலைப்புக்கு ஆதரவான பிரசாரங்களில் ஜனநாயகக் கட்சி யினருடன் கணிசமான அளவிலான குடியரசுக் கட்சியினரும் இணைந்துகொண்டனர் என்பது வியப்பளிக்கும் விஷயம்!

இந்த வெற்றியைக் கொண்டாடும் மனித உரிமை ஆர்வலர்களும் பெண்ணியவாதிகளும் அமெரிக்காவின் பிற மாகாணங்களுக்கும் இதன் தாக்கம் பரவ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்; செயல்படுகின்றனர்.

குடியரசுக் கட்சி ஆதரவு மாகாணமான ஒஹையோவில் மக்கள் கருக்கலைப்புக்கு ஆதரவாக நிற்கின்றனர். வர்ஜீனியாவிலும் இதே பிரச்சினையைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்ட ஜனநாயகக் கட்சியினர், இதையே தேர்தல் பிரச்சினையாக்கியதன் மூலம் குடியரசுக் கட்சிக்கு ஆதரவான கென்டகியிலும் வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்.

ஏற்கெனவே, கலிபோர்னியா, மிச்சிகன், வெர்மான்ட் போன்ற பல மாகாணங்கள் கருக்கலைப்புக்கு ஆதரவான நிலையெடுத்திருக்கின்றன.

ஒஹையோ மாகாணத்தில் மட்டும்தான் இந்த ஆண்டு கருக்கலைப்பு உரிமை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இதேபோன்ற வாக்கெடுப்பு, அதிபர் தேர்தலில் முக்கியப் பங்களிக்கக் கூடிய அரிசோனா, நெவாடா மாகாணங்களிலும் நடைபெறவிருக்கிறது. ஒஹையோவில் குறிப்பிடத் தக்க அளவில் கருக்கலைப்புக்கு ஆதரவாக வாக்களித்திருப்பதன் மூலம் குடியரசுக் கட்சியினரிடையே பிளவு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒஹையோ, வர்ஜீனியா போன்ற மாகாணங்களில் கருக்கலைப்பு உரிமைகளுக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்ததும் ஆதரவளித்ததும் 2024 அதிபர் தேர்தலிலும், காங்கிரஸ் உள்பட பிற தேர்தல்களிலும் தங்களுக்கு சாதகமான ஒன்றாக மாறும் என்று ஜனநாயகக் கட்சி யினர் நம்புகின்றனர்.




## ஏன்? எதற்காக?

1973ல் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன், பெண்களுக்குக் கருக்கலைப்பு உரிமையை முதலில் வழங்கிய நாடுகளில் ஒன்று அமெரிக்கா.

ஐம்பது ஆண்டுகளாக இருந்த கருக்கலைப்பு உரிமையை பெண்களுக்கு அரசியல் சாசனம் வழங்கிவந்த அடிப்படை உரிமைகளில் ஒன்றைப் பறித்து இரத்து செய்வதெனக் கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் எடுத்த முடிவைத் தொடர்ந்து, அமெரிக்க கருக்கலைப்புக் கொள்கையில் மாற்றம் ஏற்பட, கருக்கலைப்பு தொடர்பான அதிகாரங்கள் தற்போது அந்தந்த மாகாணங்களுக்கு மடை மாற்றப்பட்டுவிட்டன. பாதிக்கும் மேற்பட்ட மாகாணங்கள் கருக்கலைப்புக்குத் தடை விதித்துவிட்டன அல்லது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றன. சட்ட வழியிலான போராட்டங்கள் காரணமாக அனைத்து மாநிலங்களாலும் அப்படியே கருக்கலைப்புக்கு எதிரான சட்டங்களை அமல்படுத்த இயலாத நிலை இருக்கிறது (**அமெரிக்காவில் ஒவ்வொரு மாகாணமும் குறிப்பிட்ட சில விஷயங்களைத் தவிர மற்றவை தொடர்பாகத் தங்கள் விருப்பப்படிச் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம், அமல்படுத்தலாம்**).

தற்போது ஒவ்வொரு மாகாணமாகத் தீர்மானித்து வருகின்றன. பெரும்பான்மையான மக்களின் மனநிலை கருக்கலைப்புக்கு ஆதரவானதாகவே இருக்கிறது. இந்தப் பிரச்சினை விசுவரூபம் கொள்ளும்; அதிபர் தேர்தலில் தீர்மானிக்கும் விஷயமாக மாறும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**கருக்கலைப்பு வரலாறு**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகில் ஏறத்தாழ அனைத்து நாடுகளிலுமே கருக்கலைப்பு தடை செய்யப்பட்டிருந்தது அல்லது சட்ட விரோதமென இருந்தது. பிரிட்டன், பிரான்ஸ், போர்த்துகல், ஸ்பெயின், இத்தாலி ஆகியவற்றின் காலனி நாடுகளாகவே எண்ணற்ற நாடுகள் இருந்ததால், அவர்களுடைய சட்டங்கள் அப்படியே பின்பற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கிய நூற்றாண்டுகளிலிருந்தே அதே நடைமுறை பின்பற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

1900-களில் தொடங்கிக் கருக்கலைப்புச் சட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழத் தொடங்கிவிட்டன.

நாகரிக வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த புதிய உலகில், கருக்கலைப்புச் சட்டத்தில் சீர்திருத்தம் செய்த முதல் நாடு, சோவியத் ஒன்றியம்தான்! பெண்ணிய செயற்பாட்டாளரான **அலெக்சாண்டரா கொலன்டாய்** அவர்களின் முன்முயற்சியில் 1920, அக்டோபரில் பெண்கள் நலன் தொடர்பான கருக்கலைப்புக்கு ஆதரவான சட்டம் இயற்றப்பட்டது.

தற்போது உலகம் முழுவதுமே பொதுவான போக்கு கருக்கலைப்புக்கு ஆதரவாகவே இருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் அறுபதுக்கும் அதிகமான நாடுகளில் கருக்கலைப்பு சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன.

அமெரிக்கா, நிகாரகுவா, எல்சால்வடார், போலந்து ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே தங்கள் நிலையை மாற்றிக்கொண்டு தற்போது கருக்கலைப்புக்கு எதிரான நிலையை எடுத்திருக்கின்றன.

2020-க்குப் பிறகு ஆர்ஜென்டீனா, தாய்லாந்து ஆகிய நாடுகள் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கியுள்ளன. தென் கொரியா குற்றமில்லை என்று அறிவித்துள்ளது. நியு சிலாந்து கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆதரவு பெருகிவர, கொலம்பியா சட்டப்படியாக்கியிருக்கிறது. மெக்சிகோவும் குற்றமில்லை என்றிருக்கிறது. அமெரிக்கா, ஹோண்டுராஸ் தவிர பல நாடுகள் கருக்கலைப்புக்கான தளங்களை விரிவுபடுத்திவருகின்றன.

இலத்தீன் அமெரிக்க கரீபியன் நாடுகளில் கருக்கலைப்பை அனுமதித்த முதல் நாடு கூபா (கியூபா) தான். 1965 முதல் அது நடைமுறையில் இருக்கிறது. 1979 ல் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தின்படி, கருவுற்ற பெண்ணின் சம்மதம் இல்லாத கருக்கலைப்பு சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட பயணத்தில் இன்று கருக்கலைப்பு,

கருத்தடை போன்ற விஷயத்தில் நிறைய ஆறுதலான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் இன்னமும் சில நாடுகள் மட்டும் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றன.

வலதுசாரிகள் வலுப்பெறும் நேரங்களில் சில நாடுகளில் கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களும் மாற்றம் பெறுகின்றன. சிலே(சிலி)யில் 1931 முதல் 1989 வரையிலும் கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்டது. ஆனால், 1989ல் அலெண்டே அரசைத் தூக்கியெறிந்து ஆட்சியைப் பிடித்த சர்வாதிகாரி பினோசே, கருக்கலைப்பைத் தடை செய்துவிட்டார். 2016 ல் மிச்செல் பேச்லெட்டின் அரசு மீண்டும் சில நிபந்தனைகளுடன் கருக்கலைப்பை மறுபடியும் அனுமதித்தது.

## ஆண்டுக்கு 7.3 கோடி கருக்கலைப்புகள்

உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 7.3 கோடி கருக்கலைப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் 61 சதவிகித கருக்கலைப்புகள், எதிர்பாராத, தேவையில்லா கருவுறுதல் காரணமாக நேரிடுகின்றன.

தேவையற்ற தருணங்களில் பெருஞ் சுமையாக மாறி விடக் கூடிய நிலையில், உலகம் முழுவதுமே தேவையற்ற கருவைக் கலைப்பதற்கான வழிவகைகள் எளிமைப்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னலிலிருந்து பெண்களை விடுவிக்கும் வகையில் கருக்கலைப்புச் சட்டங்கள் நெகிழ்வுத் தன்மை கொண்டவையாக மாற்றப்பட்டு வருகின்றன.

கடந்த 30 ஆண்டுகளில் இந்தியா உள்பட 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் கருக்கலைப்புச் சட்டங்கள் எளிதாக்கப்பட்டுள்ளன. அயர்லாந்திலிருந்து நேபாளம் வரையிலும் கருக்கலைப்பு உரிமையானது, அடிப்படையான மனித உரிமையாக மாறிக் கொண்டிருக்கிறது.

உலகில் 22 நாடுகளில் மட்டும்தான் இன்னமும் கருக்கலைப்பு உரிமை மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பெரும்பாலான நாடுகளில் ஏதோவொரு வகையில் கருக்கலைப்பு அனுமதிக்கப்படுகிறது. தொழில்மயமான நாடுகளில் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றியே கருக்கலைப்பு அனுமதிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அவையாலும் பல நாடுகளிலும் பாதுகாப்பான கருக்கலைப்பு என்பது அடிப்படை



மனித உரிமையென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகில் 60 சதவிகிதம் பேர் கருக்கலைப்புக்கு ஆதரவான நாடுகளிலும் 40 சதவிகிதம் பேர் கட்டுப்பாடுகள் கொண்ட மற்றும் எதிரான நாடுகளிலும் வாழ்கின்றனர்.

கருக்கலைப்புக்குத் தடை மற்றும் கட்டுப்பாடுகள் இருக்கும் நாடுகளில் 'சட்ட விரோதமாக' கருக்கலைப்புகள் நிகழ்கின்றன. கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்ட நாடுகளிலும்கூட மருத்துவ வசதிக் குறைவு, விழிப்புணர்வின்மை, வறுமை காரணமாக முறையற்ற பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் நடைபெறுகின்றன.

"பாதுகாப்பற்ற 97 சதவிகித கருக்கலைப்புகள் வளரும் நாடுகளில்தான் நடைபெறுகின்றன. பாதிக்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் அனைத்தும் ஆசியாவில், அதிலும் மத்திய, தெற்கு ஆசியாவில்தான் நடைபெறுகின்றன. அதேபோல ஆப்பிரிக்காவில் நடைபெறும் கருக்கலைப்புகளில் பாதி பாதுகாப்பற்ற முறையில்தான் நடைபெறுகின்றன" என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

## ஒரே பாதையில்

பல நாடுகள் கருக்கலைப்பு உரிமைகளைப் பரவலாக்கிவரும் நிலையில்தான் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானது. பெண் உலகைப் பொருத்தவரை இது மிகப் பெரிய பின்னடைவாகவே பார்க்கப்பட்டது.

இதனால், கருக்கலைப்புக்கு எதிரான பிற்போக்கு சக்திகள் ஊக்கம் பெறும் எனக் கருதப்பட்டது. அப்படியே நடந்துகொண்டுமிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில்தான் கருக்கலைப்பு விஷயத்தில் பழைய காலத்தைத் திரும்ப முயற்சி செய்துகொண்டிருக்கிறது விளாடிமிர் புடின் தலைமையிலான தற்போதைய இரசிய அரசு.

உலகில் முதன்முதலில் கருக்கலைப்பு உரிமையைப் பெண்களுக்கு வழங்கிப் பெருமைகொண்ட இரசியாவில் லெனினுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற ஜே.வி. ஸ்டாலின் காலத்தில், 1936ல், கருக்கலைப்பு சட்ட விரோதமாக்கப்பட்டது.

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு இரு ஆண்டுகள் கழித்து, 1953ல் ஆபத்தான சட்ட விரோதக் கருக்கலைப்புகளை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, கருக்கலைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1991ல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கெல்லாம் அதிபர் போரிஸ் யெல்த்சின் உதவினார். கருத்தடை சாதனங்கள் தொடர்பாகவும் மருத்துவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். 1990களின் பிற்பகுதியில்

பிற்போக்காளர்களின் எதிர்ப்புக் காரணமாக அரசு உதவிகள் குறைக்கப்பட்டன.

2003ல் கருக்கலைப்பு செய்துகொள்ளக் கூடுதலான நிபந்தனைகள் / கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. 2011 ல் மேலும் கட்டுப்பாடுகளைப் பிற்போக்கு மக்கள் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

புரட்சிகர சோவியத் ஒன்றியத்தின் சிதைந்த மிச்சமான தற்போதைய இரசியாவின் அதிபரான விளாடிமிர் புடின் ஆட்சியில் கருக்கலைப்புக்கு அனுமதி இருந்தாலும் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. 2016ல் கருக்கலைப்புக்கு எதிராகக் கடுமையான விதிகளுடன் சட்டமியற்ற புடின் அரசு முயன்றபோதிலும் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அந்த முன்வரைவு விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆனாலும், கருக்கலைப்புக்கு எதிரான அரசு நடவடிக்கைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன, இதைத் தொடர்ந்து, நாடு, பழைய காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இரசியாவில் இப்போதும் கருக்கலைப்பு சட்டப்படியானதே, பரவலாகக் கருக்கலைப்பு செய்துகொள்ள முடியும் என்றாலும் அண்மைக்காலமாகப் பிற்போக்கான ஒரு நாட்டைப் போல பல்வேறு நிலைகளில் கருக்கலைப்புகளைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

கருக்கலைப்புக்கு எதிரான முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் புகார்கள் செய்யுமாறும் இணையவழி மனுக்களை அளிக்குமாறும், சிறுசிறு ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறும் செயற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்; என்ற போதிலும் பெரிதாகப் பலன் எதுவுமில்லை.

இரசியாவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கருக்கலைப்புக்கான வசதிகள், வாய்ப்புகள் முடக்கப்படுகின்றன. இப்போதே பல இடங்களில் தனியார் மருத்துவமனைகள் கருக்கலைப்புகளை நிறுத்திவிட்டன. தேசிய அளவில் கருக்கலைப்புக்கு எதிரான மனநிலையைக் கருவுற்ற பெண்களிடம் உருவாக்குமாறு மருத்துவர்களை நல்வாழ்வுத் துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டிருக்கிறது. விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்படும் புதிய விதிகள் காரணமாக அவசர காலக் கருத்தடைக் கருக்கலைப்பு மருந்துகளுக்குப் பெரும் பற்றாக்குறையும் நேரிடலாம்.

இரசியாவிலும் படிப்படியாகக் கருக்கலைப்பு வசதிகள் இல்லாமலாக்கப்பட்டு விடும் என அஞ்சப்படுகிறது.

சோவியத் ஒன்றியத்தில் கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கப் பெறாத நிலையில், சட்டத்திலுள்ள வழிமுறை காரணமாக, பலமுறைகூட பெண்களால் கருக்கலைப்புகள் செய்துகொள்ள முடிந்தது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு, திட்டமிட்ட குடும்பம், குழந்தை பிறப்புக் கட்டுப்பாடு போன்றவற்றை அரசும் நலவாழ்வுத் துறையும் பிரசாரம் செய்ததால் கருக்கலைப்பு விகிதங்கள் குறைந்தன. அதேவேளை, எந்தவித நிபந்தனையுமின்றி 12 வாரங்கள் வரையிலும், விவாகரத்து, வேலையின்மை, வருவாய்ப் பற்றாக்குறை அல்லது வருவாய் இன்மை போன்ற 'சமுதாய காரணங்களால்' 22 வாரங்கள் வரையிலும்கூட கருவைக் கலைத்துக் கொள்ளப் பெண்களைச் சட்டங்கள் அனுமதித்தன.

## நிலை மாற்றம்

'பாரம்பரியமான விழுமியங்களை' மேம்படுத்துகிற, மக்கள்தொகை பெருக வேண்டும் என்கிற எண்ணம் கொண்ட இரசிய ஆர்த்தோடாக்ஸ் (பாரம்பரிய) சர்ச்சுடன் வலுவான கூட்டை ஏற்படுத்திக் கொண்ட இரசிய அதிபர் விளாடிமிர் புடின், அதிகாரத்துக்கு வந்த பிறகு நிலைமை மாறத் தொடங்கியது.

குழந்தை பெற்றுக்கொள்வதைவிட, கல்விக்கும் வாழ்க்கைக்கும் எதிர்கால வாழ்க்கைத் திட்டமிடலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாகப் பெண்களுக்கு இரசிய நல்வாழ்வுத் துறை அமைச்சர் மிகையீல் முராஷ்கோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

## காத்திருப்புக் காலம், கலந்தாலோசனை, பாதிரியாரின் அங்கீகாரம்

கடந்த இருபதாண்டுகளில் இரசியாவில் கருக்கலைப்புகளின் எண்ணிக்கை 1990ல் 41 இலட்சமாக இருந்தது 2021ல் 5.17 இலட்சமாக வெகுவாகக் குறைந்திருக்கிறது.

பாலியல் வன்கொடுமை காரணமாகக் கருவுற்றிருக்கும்பட்சத்தில் மட்டும் 12 வாரங்களிலிருந்து 22 வாரங்கள் வரையிலான கருவைக் கலைக்கச் சட்டப்படி அனுமதியளிக்கப்படுகிறது. சில பகுதிகளில் அரசு மருத்துவமனைகள் கண்டுகொள்ளாமல் அமைதியாக இருந்துவிடுகின்றன. கருவின் நிலைமையைப் பொருத்து, மருத்துவரைச் சந்தித்த பிறகு இரு நாள்களிலிருந்து ஒரு வாரம் வரையிலும்கூட, அதுவும் மருத்துவர்கள் ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், கருவைக் கலைக்கக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. தவிர, இதனிடையே, கருக்கலைப்பு எண்ணத்தைக் கைவிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட மனோரீதியிலான ஆலோசனைகளும் வழங்க முன்வருகின்றனர்.

இந்தக் காத்திருப்புக் காலம் என்பதே கருவுற்றுக் கலைக்க

நினைக்கும் பெண்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. கருத்தரித்த பெண்களுக்கான பிரச்சினைகளையெல்லாமும் சந்திக்க நேரிடுகிறது.

இரசியாவில் குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகள், கருக்கலைப்புக்கு முன்னர் கிறித்துவப் பாதிரியார் ஒருவருடன் கலந்தாலோசிக்குமாறு அறிவுறுத்துகின்றன. விருப்பத்தைப் பொருத்ததே இந்த ஆலோசனை என்று கூறப்பட்டாலும் கருக்கலைப்பை அனுமதித்து பாதிரியாரின் கையெழுத்தைப் பெற வேண்டியதாகத்தான சூழ்நிலை இருக்கிறது.

## கருக்கலைப்பு மாத்திரைகளுக்குக் கட்டுப்பாடு

உக்ரைன் போர், நிலையற்ற பொருளாதாரச் சூழல் போன்றவற்றின் காரணமாக மேலும் குழந்தைகள் பெற்றுக் கொள்வதில் இரசியப் பெண்களுக்கு ஆர்வம் இல்லாத தற்போதைய சூழ்நிலையில்தான் கருக்கலைப்புக்கு எதிரான சூழல் உருவாக்கப்படுகிறது.




2022ல் கருக்கலைப்பு மாத்திரைகளின் விற்பனை 60 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக மருந்து நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆண்டு 35 சதவிகிதம் குறைந்தாலும் 2022க்கு முன்னர் இருந்ததை விடவும் அதிகம்தான். கருத்தடை மருந்துகளின் விற்பனையும் 2022-23ல் அதிகரித்துள்ளன.

தொடக்க நிலையிலேயே கருவைக் கலைப்பதற்கான கருக்கலைப்பு மாத்திரைகளின் புழக்கத்துக்குக் கடும் கட்டுப்பாடுகளை நலவாழ்வுத் துறை அமைச்சகம் விதித்திருக்கிறது. கருக்கலைப்பு மாத்திரைகளில் பயன்படுத்தப்படும் சில குறிப்பிட்ட மருந்துகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்து, இவற்றுக்கான இருப்பு பயன்பாட்டுக்கான பதிவுகளை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

கருக்கலைப்பு மாத்திரைகள் வழங்கும் மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும் இதற்கான நடைமுறைகளைக் கடுமையாக்கியிருக்கின்றனர். ஆனால், இதனால் அவசர காலக் கருத்தடை மாத்திரைகள் கிடைப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். 2024 செப். 1 முதல் இந்த விதிகள் கடுமையாகப் பின்பற்றப்படும்போது பெருமளவில் பாதிப்புகள் ஏற்படும் நிலை உருவாகும்.

இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக அனைத்து மருந்தகங்களிலும்

கருத்தடை மாத்திரைகளை இருப்பு வைக்க முடியாத நிலையேற்படும். உறவுக்குப் பின் காலையில் எடுத்துக்கொள்ளக் கூடிய மாத்திரைகள் கிடைக்காத நிலையேற்படும். தேவையானபோது உடனுக்குடன் பயன்படுத்தக் கூடிய வகையில் கருத்தடை மாத்திரைகள் கிடைக்க வேண்டும். இதற்காக, மருத்துவரைச் சந்தித்து பரிந்துரைச் சீட்டுகளைப் பெறுவதென்பதெல்லாம் சிக்கலான நடைமுறையாக மாறிவிடும் என அஞ்சப்படுகிறது.

உறவுக்குப் பின் காலையில் எடுத்துக்கொள்ளக் கூடிய மாத்திரைகளுக்குப் புதிய உத்தரவில் விலக்கு அளிக்கப்படுமா? என்பது பற்றி நலவாழ்வுத் துறை அமைச்சகம் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த மாத்திரைகளைப் பொருத்தவரை பிரச்சினையில்லை என்று அலுவலர்கள் கூறியிருந்தாலும், ஏற்கெனவே சில மருந்தகங்கள் பரிந்துரைக் கடிதங்கள் இருந்தால் மட்டுமே இந்த மாத்திரைகள் விற்கப்படும் என்று தெரிவிக்கத் தொடங்கிவிட்டன.

கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிட, 2023 ஆகஸ்டு மாதத்தில், அவசரகாலக் கருத்தடை மாத்திரைகளின் விற்பனை 71 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. புதிய கட்டுப்பாடுகளால் கருத்தடை மாத்திரைகளின் விலைகளும் உயரும் ஆபத்து இருக்கிறது. குறிப்பிட்ட காலத்துக்குத் தட்டுப்பாடும்கூட நேரிடலாம்.

## தனியார் மருத்துவமனைகளுக்குத் தடை

விரைவில் நாடு தழுவிய அளவில் தனியார் மருத்துவமனைகளில் கருக்கலைப்புக்குத் தடை விதித்து சட்டம் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 20 சதவிகித கருக்கலைப்புகள் தனியார் மருத்துவமனைகளில்தான் நடைபெறுகின்றன. இத்தகைய தடையொன்றை ஏற்படுத்த இதற்குமுன் கன்சர்வேடிவ் பிரதி நிதிகளால் இயலவில்லை என்றாலும் தற்போது இதுபற்றிப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக நலவாழ்வுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அந்தந்தப் பிராந்திய அரசு நிர்வாகங்கள், தனியார் மருந்தகங்களை அணுகி கருக்கலைப்புகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வெற்றியும் பெற்றுவருகின்றன.

## குழந்தை பெற்றுக்கொள்ள அறிவுரை

மேலும், கருக்கலைப்புக்கு எதிரான முன்னோடித் திட்டமொன்றையும் ஏழு பிராந்தியங்களில் நலவாழ்வுத் துறை அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது. திட்டத்தின்படி கருக்கலைப்பு எண்ணத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மகப்பேறு மருத்துவர்கள் சம்பந்தப்பட்ட பெண்களுக்கு ஆலோசனை கூறுவார்கள்.

‘குழந்தைப் பேறு என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் இயற்கை அளித்துள்ள அழகிய வரம்’, ‘கருக்கலைப்பு என்பது உங்கள் உடல்நலனைக் கெடுக்கும், சிக்கல்களை ஏற்படுத்தும் ஆபத்தும் இருக்கிறது’ என்பது போன்று அறிவுரைக்குமாறு உள்ளூர் மருத்துவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இரசியாவின் கட்டுப்பாட்டிலுள்ள கிரீமியா பகுதியில் தனியார் மருத்துவமனைகள் தாங்களாகவே முன்வந்து கருக்கலைப்புகளை நிறுத்திக்கொண்டுவிட்டதாக அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு எதிரான கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு உலகம் முழுவதும் பெரும்பாலான நாடுகளில் பெண்கள் விடுதலை பெற்றுவரும் நிலையில், உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுவரும் நிலையில் தங்கள் உடல், தங்கள் உரிமை என்பதையெல்லாம் மறுத்துப் பெண்களைப் பின்னோக்கி இழுத்துக்கொண்டிருக்கிறது உலகில் ஒருகாலத்தில் பெரும் புரட்சியை நிகழ்த்திக்காட்டிய இரசியா! அடுத்தடுத்து என்னென்ன நடக்குமோ என்ற அதிர்ச்சியில் உறைந்திருக்கிறார்கள் இரசியப் பெண்கள்!

◆◆◆

ஆனாலும், உலகம் முழுவதும் சட்டப்படியோ, சட்ட விரோதமாகவோ, உயிரைப் பணயம் வைத்தும்கூட பெண்கள் கருக்கலைப்புகளைச் செய்துகொண்டுதானிருக்கிறார்கள். மூடத்தனமான போதனைகளும், முட்டாள்தனமான கட்டுப்பாடுகளும் கருக்கலைப்பு செய்துகொள்வதிலிருந்து பெண்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

கருவைச் சுமப்பதா, வேண்டாமா என்பதைச் சம்பந்தப்பட்ட பெண்ணைத் தவிர்த்து வேறு யாரோ ஒருவர் எவ்வாறு முடிவு செய்ய இயலும்? பெண், ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதையும், வேண்டாம் என நிராகரிப்பதையும் அவளைத் தவிர வேறு யார் முடிவு செய்வது? யார் செயற்படுத்துவது? யாருடைய அடிமை அவள்? அவள் உடல், அவள் உரிமை! அடுத்தவர்களுக்கு அங்கே என்ன வேலை?

❖❖❖

## காசா : பாலஸ்தீன மக்களின் இனக்கொலை பூமி.

யமுனா ராஜேந்திரன்

### இனக்கொலைக்கான மூன்று சாட்சிங்கள்

(1) காசாவுக்கு நீர், மின்சாரம், உணவு, எரிபொருள் என அனைத்தையும்; தடை செய்திருக்கிறோம். அவர்கள் மனித மிருகங்கள்.

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யாவு காலன்ட்.

(2) நமது இஸ்ரேலியக் குழந்தைகள் ஒளியின் குழந்தைகள்;. பாலஸ்தீனக் குழந்தைகள் இருளின் குழந்தைகள். இஸ்ரேலின் வரலாற்றில் பாலஸ்தீனத் தனிநாடு என்பதை நான் தடுத்து நிறுத்தியிருக்கிறேன் காசாசவில் எனன நடக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இஸ்ரேலிய பிரதமர் நத்தானியேவு.

(3) காசாவின் மீது அணுகுண்டு வீசுவதும் எம்மிடம் இருக்கும் ஒரு சாத்தியம்.

இஸ்ரேல் பாரம்பர்ய அமைச்சர் அமிச்சாவு எலியாவு

### பாலஸ்தீனஇஸ்ரேல் பிரச்சினையின் அடிப்படைகள்

இஸ்ரேல் 1948 ஆம் ஆண்டு பிரித்தானியக் காலனியத்தினால் பாலஸ்தீன நிலத்தில் உருவாக்கப்பட்டது. இந்த விட்டுக்கொடுப்பே பாலஸ்தீன மக்களின் பெருந்தன்மைதான். 1967 ஆம் ஆண்டு சர்வதேச ஒப்புதலை மீறி இஸ்ரேல் மேற்குக்கரை, காசா பிரதேசங்களை ஆக்கிரமித்து அங்கு சட்டவிரோதக் குடியேற்றங்களை அமைத்தது. 1974-ஆம் ஆண்டு இஸ்ரேல்



பாலஸ்தீனம் எனும் இரண்டு நாடுகள் கோட்பாடு ஐநாவினால் ஒப்பப்பட்டது. 1967 ஆக்கிரமிப்புக்கு முன்னான நிலைகளுக்கு இஸ்ரேல் திரும்பவேண்டும் என்பது நியதி. இஸ்ரேல் இப்போது அமெரிக்க பிரித்தானிய மேற்கத்திய நலன்களின் மத்தியக் கிழக்கு வேட்டை நாயாக, அணு ஆயுத வல்லமையாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளன். பாலஸ்தீனம் நிலமீட்டுப்புக்காகப் போராடும் நாடு. பைபிளில் வருகிற வாக்களிக்கப்பட்ட பூமி என்கிற மத ஐதீகத்தை நவீனத்துவ அரசதிகாரமாக மாற்ற முயலும் யூத அடிப்படைவாத நாடுதான் இஸ்ரேல்.



பதாஹமாஸ் முரணைப் புரிந்துகொள்வது பாலஸ்தீனப் பிரச்சினையில் இன்னொரு முக்கியமான அடிப்படை. **ஓஸ்லோ ஒப்பந்தம்(1993)**தான் இதில் மையமானது. இந்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மட்டுமல்ல, மஹ்முத் தர்வீஷ் எட்வர்ட் சைத் போன்றவர்களும் நிராகரித்தார்கள். என்ன காரணம்? அந்த ஒப்பந்தம் பதாவுக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் இடையிலானது. ஹமாசுக்கு அதில் இடமில்லை. அந்த ஒப்பந்தத்தின்படி பரஸ்பரம் பாலஸ்தீன இஸ்ரேல் நாடுகளின் இருத்தலை இருவரும் ஒப்பவேண்டும். ஆக்கிரமிப்புக்கு உள்ளான பகுதிகளிலிருந்து 1967-க்கு முன்பான நிலைகளுக்கு இஸ்ரேல் திரும்பவேண்டும். காசாமேற்குக் கரையில் பதாவின் இடைக்கால நிர்வாகம் இருக்கும். இடைக்கால நிர்வாகத்தின் கால அளவு நிர்ணயிக்கப்படவில்லை. ஜெருசலேம் பிரச்சினை பிற்பாடு அணுகப்படும். எல்லைகள், பிரதேசங்கள், இடைக்கால நிர்வாகம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவது குறித்த காலஅளவு என எதுவுமே திட்டவட்டமாக ஓஸ்லோ ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை.

பதா அமைப்பை பாலஸ்தீன நிர்வாகத்திற்குத் திணித்ததன் வழி பாலஸ்தீன எதிர்ப்பைச் சமாளிக்க அமெரிக்காவும் மேற்குலகும் இஸ்ரேலும் பாவித்தன. இப்போதும் பிளிங்கன் அப்பாஸ் சந்திப்பில் ஹமாசை அழித்தொழித்த பின் ஒரு வகையிலான காசா நிர்வாகத்தைப் பதாவின் தலைமையின் கீழ் அங்கு ஏற்படுத்துவது பற்றிப் பேசப்பட்டிருக்கிறது.

ஹமாசுக்கு பாலஸ்தீன மக்களிடம் கணிசமான சொல்வாக்கு இருக்கிறது. ஹமாஸ் ஒரு போராளி அமைப்பு மட்டுமல்ல. அது காசா நிர்வாகத்தைக் கவனிக்கும் அமைப்பு. மக்கள் சேவையை

முன்வைக்கும் அமைப்பு. பதா தன் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக் கரையில் கூட தன் நிர்வாகத்தை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளரிடம் தந்துவிட்டு நிற்கிறது. காசா நெருக்கடியின் பின் மேற்குக்கரையில் 275 பாலஸ்தீனர் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டு, 3000 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டவிரோதக் குடியேறிகள் பாலஸ்தீனப் பூர்வகுடி மக்களைத் தமது வீடுகளில் இருந்து விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய இஸ்ரேலிய அரசு முழுமையாக ஒஸ்லோ ஒப்பந்தத்தைக் கூட மறுக்கிற யூத மதஇனவாதிகளால் ஆளப்படுகிறது. ஹமாசின் அரசியலை இதிலிருந்து புரிந்து கொள்ள முயலலாம். அது ஒரு விதமான எதிர்மறைபிரதிபலிப்பு அரசியல். ஹமாஸ் இயக்கத்தை காசாவின் 23 இலட்சம் மக்கள் வாக்களித்துத் தமது பிரநிதிகளாக வைத்திருக்கிறார்கள். ஹமாஸின் சில நடவடிக்கைகளை **பாலஸ்தீனக் கவிஞரான மக்முத் தர்வீஷ், கோட்பாட்டாளரான எட்வர்ட் சைத்** போன்றவர்கள் கண்டித்தது உண்டு என்றாலும், இதற்கான காரணம் இஸ்ரேலின் தவறான நடவடிக்கை என்பதை அவர்கள் சுட்டிக் காட்டாமல் இருந்ததில்லை.

பிரெஞ்சு இதழான லெமான்டே டிப்ளமெடிக் பாலஸ்தீனப் பிரச்சினை பற்றி இரு சிறப்பிதழ்கள் வெளியிட்டிக்கிறது. ஹமாஸ் ஏன் இவ்வாறு சிந்திக்கிறது என்பது முதல் இன்றைய இஸ்ரேலிய அரசியல் புவியியல் யதார்த்தம் வரை ஆதாரங்களுடன் கூடிய ஆழமான ஆறு கட்டுரைகளையும் முழுமையாகப் படித்த அளவில் நான் வந்து அடைந்த புரிதல் பின்வருமாறு -

அங்கு இரண்டு நாடுகளுக்கான அடிப்படை இல்லை. இரண்டு நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் என்பன இல்லை. மேற்குக் கரையும் காசாவும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள். இரண்டு பிரதேங்களும் இஸ்ரேலியப் படையினரின் கீழ், குடியேறிகளின் கீழ் இருக்கின்றன. தொடர்ந்து குடியேற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. காசாவையும் மேற்குக் கரையையும் தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் எனப் பெரும்பான்மை யூதர்கள் கருதுகிறார்கள். இன்றைய இஸ்ரேலிய அரசின் திட்டவட்டமான கொள்கையும் அதுதான்.

பாலஸ்தீனர்களுக்குத் தமது வாழ்வாதாரங்களின் மீது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. நீர், உணவு, மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை எப்போது வேண்டுமானலும் இஸ்ரேல் நிறுத்தலாம். பாலஸ்தீனத்திற்கு பொருளியல், வேலை வாய்ப்பு, உற்பத்தி, விநியோகக் கட்டமைப்பு இல்லை. இவை அனைத்தும் இஸ்ரேலிடமேயுள்ளது. காசா, மேற்குக் கரையில் இருந்து தொழிலாளர் வேலைக்கு இஸ்ரேலுக்குள்தான் செல்லவேண்டும்.

உண்மையில் தென்ஆப்ரிக்கா போல் இனஒதுக்கல்(சுவர்) கொண்ட ஒற்றை நிர்வாகப் பொருளியல் அரசியல் அலகாகத்தான் அந்த நிலம் இருக்கிறது.

மேற்குக் கரையை இஸ்ரேலிய அரசின் கைப்பாவையாக இருந்து இயக்கும் பாதாவின் முகமது அப்பாசின் மீது மேற்குக்கரை, காசா என இரு பகுதி மக்களுக்கும் எந்த நம்பிக்கையும் இல்லை. அது ஊழல் ஆட்சி என மக்கள் கருதுகிறார்கள். அண்மையில் நடந்த ஒரு வாக்கெடுப்பில் இருநாட்டுத் தீர்வை 30 சத மேற்குக் கரைமக்கள் மட்டுமே ஆதரித்திருக்கிறார்கள். பெரும்பான்மை மக்கள் அது நிகழும் என நம்பவில்லை. காசா, மேற்குக்கரை என இரு பகுதிகளிலும் ஹமாசை மக்கள் விரும்புகிறார்கள்.

மேற்குக்கரை, காசா இரண்டையும் இஸ்ரேலிய அரசு தன்னுடன் இணைத்துக்கொள்ளும் என ஹமாஸ் இயக்கம் கருதுகிறது. ஆக்கிரமிப்பு, காலனியம், அரசியல் தீர்வு, இனஒதுக்கல் போன்ற விவாதங்களைத் தூண்ட அது தனது அண்மைத் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. டெரர் எனப்படும பயங்கரவாத நடவடிக்கைகள் தென்னாப்பிரிக்கா முதல் சகல விடுதலை இயக்க நடவடிக்கைளிலும் இருந்து வருகிறது. அசமத்துவமான ஆயுத வலிமை, போர்முறைகளின் பகுதியாக அது இருந்துவருகிறது. திட்டவட்டமாக இஸ்ரேலிய அரசு, அமெரிக்கமேற்குல காலனியத் தர்க்கத்தின் நீட்சி. **இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு இன ஒதுக்கல் இனக்கொலை அரசு.**

## காசாவில் என்ன நடக்கிறது?

வியட்நாமுக்கு அடுத்து மனிதகுலத்தை விரக்தியில் தள்ளும் நிகழ்வு காசா. குழந்தைகள், அகதி, மருத்துவர், பத்திரிக்கையாளர் போன்றவர்களை உலகம் பாதுகாக்கவேண்டும். வீடும் மருத்துமனைகளும் வழிபாட்டிடத்தை ஒத்தவை. இவர்களற்ற இவைகளற்ற உலகம் ஒரு பாழ்வெளி. காசா நம் காலத்தின் பாழ்வெளி.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி கான்கிரீட் வேலியைத் தகர்த்துக் கொண்டு இஸ்ரேலுக்கு நுழைந்த ஹமாஸ் இயக்கத்தின்ர் 1200 இஸ்ரேலியர்களையும் 50 இஸ்ரேலியக் குழந்தைகளையும் தொகையாகக் கழுத்தை அறுத்துக் கொன்றார்கள் என்பது இஸ்ரேல் சுமத்தும் குற்றம். கூடுதலாக 250 பேரை பிணைக்கைதிகளாக ஹமாசினர் கடத்திச் சென்றார்கள். பெண்கள் வல்லுறுவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என இன்னொரு செய்தி. 1200 பேர் கொல்லப்பட்டதையும் பிணைக் கைதிகளைப் பிடித்துச் சென்றதையும் ஹமாஸ் ஒப்புக்கொண்டது. வல்லுறவு, குழந்தைகள் கழுத்தறுப்பு போன்றவற்றை ஹமாஸ் மறுத்துவிட்டது. இவற்றுக்கு

ஆதாரங்களும் முன்வைக்கப்படவில்லை. பார்வையாளரின் உணர்ச்சியை இதன்வழி உசுப்பிவிடுகிறார்கள்.

அடிப்படையான விஷயம் யாதெனில், ஹமாஸ் இயக்கத்தினர் இருநூறு பேர்கள் வரை பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றிருக்கிறார்கள். (நிற்க.) இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து தினந்தோறும் பாலஸ்தீனப் பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் கைதுசெய்யப்பட்டு இஸ்ரேலியச் சிறைகளில் ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். இது எப்படிச் சட்டபூர்வமானது? 'அவர்களை விடுதலை செய், இவர்களை விடுகிறோம்' என்கிறது ஹமாஸ். யுத்தம் இப்போது இரு பகுதிகளாக நடைபெறுகிறது. ஆயுதங்களால ஆனது முதலாவது. ஊடகங்கங்களால் ஆனது இரண்டாவது. வெள்ளையின ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் இன்று ஊடகங்களின் வழி தமது வன்முறைக்கு மக்களிடம் கருத்திணக்கத்தை உருவாக்குகிறது.

இஸ்ரேலிடம் அசல் ரிசர்வ் இராணுவம் என 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஹமாஸ் இயக்கத்தின் தொகை 30 ஆயிரம் என்கிறது ஆய்வுகள். இன்று 5 இலட்சம் இஸ்ரேலிய்ப படையினர் காசாவில் உள்ளனர். நீர், மருந்து, மின்சாரம், எரிபொருள் அனைத்தையும் இஸ்ரேல் காசா பகுதியின் 22 இலட்சம் மக்களுக்கு மறுத்திருப்பது சர்வதேசச் சட்டங்களுக்கு முரணானது என்கிறார் ஐநா பேச்சாளர்.

ஆயுத ஏற்றுமதியை தொழில்துறையாகக் கொண்ட வணிக அரசுகளாக இன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் திகழ்கின்றன. இதில் பல இலட்சம் விஞ்ஞானிகளும் தொழிலாளிகளும் படைத்துறை யினரும் பணிபுரிகிறார்கள். அமெரிக்காவுக்கு உலகின் 80 நாடுகளில் 750 இராணுவ தளங்கள் உள்ளன. ஒவ்வொரு யுத்தத்தின் போதும் அமெரிக்கா புதியரக ஆயுதங்களை அறிமுகம்செய்து உலகில் அவற்றை மார்க்கெட்டிங் செய்கிறது. இன்று இஸ்ரேல் நாட்டின் மிகப்பெரும் ஆயுத வாடிக்கையாளர் இந்திய அரசு. புல்டோசர் இடிப்புக் கலாச்சாரத்தை அது இஸ்ரேலிய அரசிடம் இருந்தே கற்றுக்கொண்டது. இராணுவத் தொழில்துறை வணிக உற்பத்தி நாடான இஸ்ரேல் தனது புதியரக உற்பத்தி ஆயுதங்களைக் காசாவில் பரிசோதித்துக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலுக்கான அமெரிக்க உதவி என்பது அதனது இராணுவத் தொழில்துறை உற்பத்திவிநியோகத்தின் ஓர் அங்கம்.

10 இலட்சம் மக்கள் வட காசாவில் இருந்து வெளியேற வேண்டும் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்தது. ஆப்கானில் ஆண்டு முழுதும் போட்ட குண்டுகளின் தொகையை ஒரு வாரத்தில் காசாவில் இஸ்ரேல் இராணுவம் போட்டது. இடம் பெயரும் மக்களின் வாகனங்கள் மீது குண்டுபோட்டு 400 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அகதி முகாம்



மீது குண்டு போட்டு 400 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான மக்கள் வரிசையில் நிற்கும் பேக்கரியின் மீது குண்டு போடப்பட்டிருக்கிறது. எகிப்து எல்லையில் நிற்கும் மக்கள் மீதும் குண்டு போடப்பட்டிருக்கிறது. ராய்ட்டர் பத்திரிகையாளர் இருவர் உள்ளிட்டு 87 பாலஸ்தீன ஊடகவியலாளர்கள் குண்டு வீச்சில் கொல்லப் பட்டிருக்கிறார்கள். 6,000 மக்கள் இருக்கும் அகதி முகாம் மீது இஸ்ரேல் இரண்டு குண்டுகளை வீசியிருக்கிறது. குண்டுகள், முகாமின் பகுதியான மருத்துவமனையைக் குறி வைத்ததில் 500 நோயாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்கக் காங்கிரசிடம் உக்ரேன் இஸ்ரேலுக்குப் பில்லியன் கணக்கில் உதவிக்கோரிக்கை வைத்த பிடனின் வார்த்தைகள் இவை. ‘இதை இப்போது இன்வெஸ்ட் செய்தால் நமக்குப் பிற்;பாடு நல்ல டிவிடன்ட் கிடைக்கும். அது நம் பொருளாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் நல்லது’. இது வால்ஸ்ட்ரீட் பங்குச்சந்தைச் செய்தி. இஸ்ரேல்காசா போரினால் அமெரிக்க ஆயுத உற்பத்தியின் உயர்வால் அமெரிக்கப் பொருளாதாரம் 7 சதம் வளர்ச்சி.

ஹமாசை அழித்தபின் காலவரையறையின்றி காசாவில் இஸ்ரேலிய இராணுவம் இருக்கும் என நத்தானியேவு அறிவித்திருக்கிறார். அப்போதும் பதாவின் அப்பாஸ் தம்மை ஆள காசா மக்கள் விரும்பவில்லை என அல்ஜஜீரா கட்டுரை வெளியிட்டிருக்கிறது. ஹமாசை அழிப்பதன் மூலம் வடக்கு காசாவிலிருந்து தெற்குக்கு மக்களை இடம்பெயரச் சொன்ன இஸ்ரேலிய அரசு இப்போது தெற்கிலும் குண்டுபோடுகிறது.

இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் சொல்கிறார் : ‘எங்களைப் பொறுத்து இருபத்து இரண்டு இலட்சம் காசாவினரும் ஹமாஸ்தான்’. **காசா, மேற்குக்கரை, ஜெருசலேம்** என மூன்று இடங்களிலும் இஸ்ரேல தாக்கிக் கொண்டிருக்கிறது. கொடூரமான இனக்கொலை. இன்னும் தீவிரவாதம்தான் வளரும் என ஐ.நா. அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

முதலாளித்துவம், சோசலிசம் போல அரசியல் இஸ்லாமும் ஓர் அரசியல் திட்டமாகவே தொடங்கியது எகிப்தின் சகோதரத்துவ இஸ்லாம், இதன் பாதிப்பில் உருவான ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்றன மக்கள்மய இஸ்லாமியக் குடியரசை விழைந்தன.

தலிபானியம் மக்கள் மயமானதற்கு மாறான கும்பல் ஆதிக்கக் கனவு. ஈராக், லிபியா போன்றன சோசலிசத் திட்டங்களை முன்வைத்தாலும் அது குடும்ப அதிகாரமாகவே நிலைத்தது. துருக்கி ஒரு தாராளவாத முதலாளித்துவ இஸ்லாமியத் திட்டத்தைக் கைக்கொள்கிறது.

ஜனநாயகம், மக்கள் வாக்குரிமை, அவர்களது அழுத்தத்திற்கு இடம் தரும் நிலையற்ற மன்னர்களால் இன்றும் பல நாடுகள் ஆளப்படுவதுதான் அரபு நாடுகளின் பெரும்துயர். ஈரான் தவிரக் குறைந்தபட்ச ஜனநாயகம் இல்லாத நாடுகளாகவே அரபுலகு இருக்கிறது. எகிப்து தனது இராணுவத்துக்குச் சம்பளம் தரக்கூட அமெரிக்காவை நம்பியிருக்கிறது. ஜோர்டான், கத்தார், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் அமெரிக்காவுடன் நல்லுறவு பேணும் மன்னராட்சிகள்.

அரபு நாடுகளில் நடைபெறும் மக்கள் எழுச்சிகள் அவர்கள் பாலஸ்தீனத்தின் பக்கம் என்பதற்கான சாட்சி. அரசுகள்? இஸ்ரேலுக்கான ஆதரவு என்பது அமெரிக்கமேற்குலகின் ஆயுத, பொருளியல், இராஜீய ஆதரவு. அரபுலக அரசுகளால் பாலஸ்தீனத்திற்கு ஒரு பயனும் இல்லை. உண்மையில் அரசு எனும் நவீன நிறுவனம், மன்னராட்சிகள், இஸ்லாமிய அரசியல் திட்டம் என்பதற்கு இடையில் தாலிபானியம், ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்றன சிக்கித் தவிக்கின்றன. இந்தச் சிக்கலைத் தீர்த்தால் மட்டுமே அரசியல் இஸ்லாம் என்பது ஒரு சமூகத் திட்டமாகக் குறைந்தபட்சமாவது பொருள் பொதிந்ததாகலாம்.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் காசா நிவாரணத்திற்கான தமது உதவியைப் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. இது போரின் போதும் பின்னரும் காசாவின் அடிப்படைக் கட்டுமானத்திற்காகத் தரப்படுகின்றன.

2023 நவம்பர் டிசம்பர் மாதங்களின் எட்டு வாரங்களில் மட்டும் கொல்லப்பட்ட 20,000 பேரில் குழந்தைகள் மட்டும் 12,500 பேர். பெண்கள் 6,200 பேர். பிறர் ஆண்கள். இவர்கள் அனைவரும் பொதுமக்கள். இந்தக் குரூர நிலை குறித்து ஒரு காசா மருத்துவர் சொல்கிறார் : ‘இடைக்காலத்தில் உணவும், மின்சாரமும் மருந்தும் கொடுக்கிறோம். மனிதர்களைத் தயார் செய்து வையுங்கள். நாங்கள் பிற்பாடு குண்டுபோட்டுக் கொல்கிறோம் என்பதுதான் இஸ்ரேலின் வாதம். நாங்கள் இதற்குள்தான் பணிபுரிந்து கொண்டிருக்கிறோம்’.

மருத்துவமனை குண்டு வீச்சைத் தொடர்ந்து, அரபு நாடுகள் அனைத்திலும் மக்கள் எழுச்சி நடந்து வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி பிடனைச் சந்திக்கவிருந்த ஜோர்டான், எகிப்து, பாலஸ்தீனத் தலைவர்கள் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டனர்.

"நாங்கள் மண்டியிட மாட்டோம், சரணடைய மாட்டோம், நிமிர்ந்து எழுவோம்' என பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அறிவித்திருக்கிறார்.

நத்தானியேவு என்ன சொன்னாரோ அதை அப்படியே வழிமொழிந்திருக்கிறார் பிடன். 'வேறு ஏதோ குழுதான் மருத்துமனை குண்டு வீச்சுக்குக் காரணம், நீங்கள் அல்ல'. இதே நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான ஜார்ஜ் புஸ் ஈராக்கில் பாரிய அழிவு ஆயுதங்கள் உள்ளன என்றார். பிற்பாடு தமது உளவுத்துறை பிழை செய்துவிட்டது என்றது அமெரிக்க அரசு. இந்தப் பிழையின் விலை 6 இலட்சம் ஈராக்கிய உயிர்கள். நத்தானியேவு ஹமாஸ் பயங்கரவாதிகள் குழந்தைகள் தலையை வெட்டுகிறார்கள் என்று சொன்னதை அப்படியே வழிமொழிந்தார் பிடன். அப்படி எந்த பிம்பத்தையும் நாங்கள் பார்க்கவில்லை என அறிவித்தது அமெரிக்க அரசு.

அல்ஜஜீரா பெண் ஊடகவியலாளரைக் கொன்றுவிட்டு அதை இன்னொரு குழு செய்ததாக அறிவித்த இஸ்ரேல் முன்னாள் ஜனாதிபதி பிற்பாடு ஆமாம் நாங்கள்தான் சுட்டோம் என்று ஒப்புக் கொண்டார். அமெரிக்க இஸ்ரேல் ஜனாதிபதிகள் உண்மையில் பெரும் உண்மை விளம்பிகள். லேசர் கைடட் குண்டுகளைத்தான் இஸ்ரேல் போடுகிறது. காசா அதன் கட்டுப்பாட்டில் உள்ளது. எனில், சேட்டிலைட் இமேஜை வைத்து குண்டு எங்கிருந்து ஏவப்பட்டது எனக் கையும் களவுமாக அந்த வேறொரு குறுங்குழுவைப் பிடிக்கலாமே? சரி. இடம் பெயரும் மக்களது வாகனங்கள் மீது சரியாகக் குறிபார்த்து குண்டுபோட்டு 200 பேரைக் கொன்றது யார்?

நாஜிகளை எதிர்த்துப் போராடிய போராளிகளை அவர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் கீழ்தளத்தில் அத்தனை வழிகளையும் அடைத்துத் தண்ணீரை நிரப்புவதன் வழி உயிருடன் மூழ்கடித்துக் கொன்றொழித்தார்கள் பாசிஸ்ட்டுகள். இது பற்றி 10 திரைப்படங்களாவது இருக்கின்றன. இப்போது ஹமாஸ் போராளிகளின் நிலத்தடி மறைவிடங்களை பாசிஸ்ட்டுகளின் வழியில் கடல்நீரை நிரப்பி இஸ்ரேல் அவர்களை உயிருடன் முழுமையாகக் கொன்றொழிக்கவிருப்பதாகச் செய்திகள் சொல்கின்றன. ஐரோப்பியஅமெரிக்க இஸ்லாமிய வெறுப்பு நியோ நாஜிகள் இப்போது இஸ்ரேலை ஆதரிக்கிறார்கள். வரலாறு மறுமுறை புரண்டு படுக்கிறது.

இஸ்ரேலுக்கும் ஏகாதிபத்திய வெள்ளையின நாடுகளுக்கும் ஹமாஸ் தாக்குதல் என்பது ஒரு முகாந்திரம். பாலஸ்தீனர்களை நிரந்தர அடிமைகள் போல அடக்கி வைப்பதே இவர்களது அரசியல். இந்த நாடுகளின் பெரும் தேவையான(உலகின் பிரதான

நுகர்வாளர்கள் இவர்கள்தான்) மத்திய கிழக்கு எண்ணெய் வளத்தின் மீதான வேட்கைக்கு இஸ்ரேல் அப்பிராந்தியத்தின் வேட்டை நாய். இஸ்ரேலுக்கு இது பழிவாங்குதல். அமெரிக்காவுக்கு இது ('நாகரிகமற்ற' வெள்ளையரல்லாத) பாலஸ்தீனர்க்குப் பாடம் புகட்டுதல்.

பாலஸ்தீனப் பிரதேசத்திலுள்ள அகதி முகாம்கள், மருத்துவமனைகள், சிவில் சமூக நிறுவனங்கள், சர்வதேசத் தொண்டுநிறுவனச் செயல்பாடுகள் என அனைத்தையும் தமது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இஸ்ரேல் திட்டமிட்டு வேலை செய்கிறது. மேற்குக் கரையில் ஓர் அகதிமுகாமைத் தாக்கியதோடு இப்போது ஒரு மருத்துவமனையையும் சுற்றிவளைத்திருக்கிறார்கள். யாசர் அராபத்தின் நினைவிடத்தை புல்டோசர் கொண்டு தகர்த்திருக்கிறார்கள்.

உலகின் 18 ஆவது ஆயுத வலிமையுள்ள நாடு இஸ்ரேல் என ஆயுத வல்லரசு நாடுகள் குறித்த ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. இந்தப் பதினெட்டு நாடுகளில் இஸ்ரேலுக்கு முன்பாக ஆயுத வல்லமை கொண்ட வரிசை நாடுகளில் ஐந்து இஸ்லாமிய நாடுகள். இவைகள் பார்த்துக் கொண்டிருக்கத்தான் காசாவில் இஸ்லாமிய மக்கள் மீதான இனக்கொலை நடந்துகொண்டிருக்கிறது.

## அறிவுஜீகளின் நிலைபாடு

ஜெர்மனியின் தாராளவாதத் தத்துவவாதியான ஹேபர்மாஸ் துவங்கி நியோ நாஜி வரைக்கும் யூதர்கள் விஷயத்தில் ஜெர்மானியர்களிடம் வரலாறு தழுவிய குற்றவுணர்வு இருக்கிறது. அதற்கு நியாயம் உண்டு. அறுபது இலட்சம் யூதர்கள் ஜெர்மன் ஆட்சியாளன் ஹிட்லரால் கொல்லப்பட்டார்கள். வரலாற்றின் துயராக எந்த மதஇன அடையாளத்தை வைத்து ஹிட்லர் இனப்படுகொலை செய்தானோ அதே இனமத அடையாளம் இன்று இஸ்ரேல் எனும் நாட்டின் அரசியல் அடிப்படையாக ஆகிவிட்டிருக்கிறது. வரலாறு எவருக்காகவும் தயங்கிக் காத்திருப்பதில்லை. இஸ்ரேல் இன்று ஓர் ஆக்கிரமிப்பாளன். குடியேற்றத்தினால் மேலாண்மை பெற்ற இனம் மதம் அது. அது இன்று இன ஒதுக்கலைச் செய்கிறது; பிறிதொரு இனத்தை மதத்தைத் துடைத்தழிக்க நினைக்கிறது என்பதெல்லாம் சமூகவியல், சர்வதேசச் சட்டப் பிரச்சினைகள் தானே?

யுவல் நோவ ஹராரி லிபரல்களால் கொண்டாடப்படும் ஒரு யூத அறிவாளி. அடிப்படையில் அவர் ஒரு வரலாற்றாசிரியர். இலண்டன் சேனல் நான்கில் அவரை நேர்காணல் செய்பவர் ஹராரியிடம்; ஒரு கேள்வியை முன்வைக்கிறார் : "இப்போது இதற்கு என்ன செய்யலாம்?" ஹராரி சொல்கிறார் : முதலில் ஹமாஸ் பிணைக்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும். அவரிடம் அடுத்த

கேள்வி கேட்கப்படுகிறது : எனில், இஸ்ரேல் இப்போது காசா மீது செய்யும் போர்க்குற்றங்களை நிறுத்திக் கொள்ளுமா? இதற்கு ஹராரி இப்படிப் பதில் சொல்கிறார் : இப்போது இஸ்ரேலியர்கள் தங்கள் வலி குறித்துத்தான் அக்கறைப்படுவார்களேயொழிய, பிறரது வலி குறித்து அக்கறைப்படுகிற நிலையில் இல்லை.

உலக அறிஞராகக் கருதப்படும் யூதரான யுவல் நோவ ஹராரி கடைசியில் வந்து சேரவேண்டிய இடத்திற்கு வந்திருக்கிறார். பாலஸ்தீனப் பிரச்சினையை 'ஹமாஸ்இஸ்ரேல்' எனக் குறுக்குவதை மறுக்கும், பிரச்சினையை வரலாற்றின் பின்னணியில் 'பாலஸ்தீனம்இஸ்ரேல்' எனப் பார்க்கும் இடதுசாரிகளை எதிர்த்து யூத அகடமிக்குகள் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் ஹராரி கையெழுத்திட்டிருக்கிறார். தாராளவாதிகளின் கடைசிப் புகலிடம் இடதுசாரி எதிர்ப்புதான். உண்மையில் அமைப்புசார் வன்முறைக்கு-ஸ்டிரக்சுரல் வயலன்ஸ்-எதிர்வினையாகத் தான் எதிர்வன்முறை தோன்றுகிறது என்பது இடதுசாரிகளின் பார்வை. போராளிகளின் வன்முறையைப் பேசுபவர்கள் அரசின் அமைப்புசார் வன்முறையைப் பேசுவதில்லை. வன்முறை எனும் பிரச்சினையை அறத்தின் அடிப்படைக்குள் கொண்டுவந்து விவாதிப்பதானால், அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட செலக்டிவ் அறக் கண்டனத்துக்கு என்ன இடமிருக்க முடியும்? இதனால் குறிப்பிட்ட பிரச்சினைக்கு எவ்வாறு அரசியல் தீர்வுகாண முடியும்?



பிரான்சில் மிக மோசமான யூத வெறுப்புக் கட்சியான பாசிச தேசியக் கட்சி இன்று காசா பிரச்சினையில் இஸ்ரேலை ஆதரிக்கிறது. இது அவர்களது இஸ்லாமிய வெறுப்பில் இருந்து வருகிறது. கிரிட்டிகல் தியரிஸ்ட்டுகள் இன்று இன ஒதுக்கல், இஸ்லாமிய இனமத வெறுப்பு, பௌதீகரீதியிலான தமது பூர்வீக நிலத்தின் மீதான பாலஸ்தீனரது உரிமை போன்றவை குறித்துப் பேசாமல் இருக்கிறார்கள்.

பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினையில் சொல்லணிகள் வகிக்கும் பாத்திரம் குறித்து பாலஸ்தீன அறிஞர் ஹனான் ஹஸ்ராவி பல தசாப்தங்களுக்கு முன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இஸ்ரேல் இப்போதும் அதே தந்திரத்தில்தான் இருக்கிறது. ‘ஏன்ட்டி செமைட்’ எனப்படும் கருத்தாக்கம், யூதர்களை ஓர் ‘இனமாகவும் மதமாகவும் முன்வைத்து’ எதிர்த்துச் செய்யப்படுவது. இது தவறு என்பதில்

எந்த விதமான ஐயத்திற்கும் இடமில்லை. ஆனால் இதே யூதத்தை மதமாகவும்இனமாகவும் முன்வைத்து அதனை ‘ஜியோனிசம்’ எனும் கருத்தியலாகப் ‘புனிதப்படுத்துவதை’ எவ்வாறு ஏற்கவியலும்? எவ்வாறு அந்தப் புனிதத்தின் பெயரால் ஓர் அரசு ‘பிறிதொரு’ இனத்தின் மீது ‘ஏவும் வன்முறை’யை ஏற்கவியலும்? இஸ்ரேலை எதிர்ப்பது யூதவெறுப்பு பாலஸ்தீனம் என்பது ஹமாஸ் இயக்கம் என்பது என்னவிதமான தர்க்கத்திற்குள் வரும்? தற்பாதுகாப்பு உரிமை பற்றி மட்டும் தேர்ந்தெடுத்துப் பேச முடியாது.

உணர்ச்சிவயப்படுவதைக் கடந்து அறிவுபூர்வமாக, நிதானமாகச் சிந்திப்பவர்கள் இடதுசாரிகள்தான். பாலஸ்தீனர்இஸ்ரேல் பிரச்சினை(ஆம்,இது ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் அரசு பிரச்சினை அல்ல) குறித்து கிரேக்கப் பொருளாதார அறிஞர் யானிஸ் வருபாகிஸ், அமெரிக்கக் கோட்பாட்டாளார் ஜூடித் பட்லர், அமெரிக்க யூத இடதுசாரிச் செயல்பாட்டாளர் ஜொசுவா பைபர், அமெரிக்க பாலஸ்தீனச் செயல்பாட்டாளர் அஹமத் மூர் போன்றவர்கள் பாலஸ்தீனத்தை, இஸ்ரேலை ஆதரிக்கிறார்கள். வருபாகிஸ் இஸ்ரேலிய அரசு இனவாத, மதவாத, காலனியஅரசு என்கிறார். இவற்றை ஆதரிக்கும் அமெரிக்கமேற்கத்திய அரசுகள் நவ ஏகாதிபத்திய அரசுகள் என்கிறார்.

வெள்ளையர் அல்லாத பிற மக்களை விலங்குகள், காட்டுமிராண்டிகள், நாகரிகமற்றவர்கள், தீமை என வரையறுத்து, அவர்களை அழிப்பது நியாயம் எனக் கருதுவது காலனிய உளவியல் எனும் வருபாகிஸ், இஸ்ரேல் மேற்கத்தியத் தலைவர்கள் நடக்காத, பொய்யான வல்லுறவு, குழந்தைகளின் தலையை வெட்டுதல் போன்றவற்றை முன்வைத்து இத்தகைய சொல்லாடல்களுடன் பிரச்சாரங்களில் ஈடுபடுகிறார்கள் என்கிறார். விடுதலைப் போராட்டங்களில் எதிர்வன்முறை அனுமதிக்கப்பட்டது எனவும் அவர் வாதிடுகிறார்.

வருபாகிசும் ஜூடித் பட்லரும் உடன்படும் ஓர் இடம், தேர்ந்தெடுக்கப்பட்ட அறவுணர்வுடன், ஒரு பக்கச்சார்புடன் வாதிடுவது அறமல்ல என்பது. இன்றைய இஸ்ரேல் படுகொலைகளை 40களின் ஹலோகாஸ்டுடன் ஒப்பிட்டுப் பேசமுடியுமானால், ஏன் 75 ஆண்டுகால பாலஸ்தீனர் படுகொலைகளைப் பின்னணியுடன் பேசமுடியாது என்கிறார்கள் அவர்கள். இருவரும் வரலாற்றுப் பின்னணி உள்ளடக்கத்துடன் பேசுவது எந்த வகையிலும் நடந்த படுகொலைகளை ஒப்பிட்டு, நியாயப்படுத்துவது அல்ல என்கிறார்கள்.

ஸ்லோவாய் ஜிசாக் பிராங்பர்ட் புத்தகக் கண்காட்சியில் வரலாற்றுப் பின்னணியுடன் பிரச்சினையைப் பேசியபோது, அங்கு

இடைமறித்த இஸ்ரேலியர்கள் ஜிசாக், கொலைகளை ஒப்பிட்டு இஸ்ரேல் மக்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்துகிறார் எனக் குற்றம் சாட்டினார்கள்.

ஜூடித் பட்லர் உத்தேசமாக நடக்கும் பேச்சு வார்த்தைகளில் வன்முறையாளர்களான ஹமாசை ஒதுக்கி அகிம்சைவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனச் சொல்ல, விடுதலைப் போராட்டத்தில் எதிர்வன்முறை இருக்கும் என்கிறார் வருபாகிஸ்.

இடதுசாரிப் பார்வை என ஒன்று இருக்கிறது. அது அமெரிக்க ஐரோப்பிய நேட்டோ நாடுகளின் வெளியுறவுக் கொள்கை குறித்த தெளிவு கொண்டது. அது உக்ரைன் பிரச்சினையை விடுதலைப் போராட்டம் எனக் கருதாது. நேட்டோவின் பரவலாக்கம் எனவே கருதும். நேட்டோவை தனது எல்லையில் பரவலாக்கக் கூடாது என புடின் இப்பொழுது அமெரிக்காவுக்கு எழுதிய கடிதமும், அமெரிக்கா அதை மறுத்ததும், இதன் பின்பே இரசியா உக்ரைன் மீது யுத்தம் தொடுத்ததும் பகிரங்கமான உண்மையாக இருக்கிறது. அமெரிக்காவின் அருகில் இறையாண்மை பெற்ற நாடான கியூபாவில் இரசியா அணு ஏவுகணை நிறுவியபோது எதன்பொருட்டு அமெரிக்கா பதறியது? இத்தனைக்கும் அமெரிக்கா கியூப அரசைக் கவிழ்க்கப் பலமுறை முயன்றதே?

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலை தன் மீதான இரசியத் தாக்குதல் போன்றது என திருவாய் மலர்ந்தார் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்க்கி. இவர் தேசிய விடுதலைப் போராட்ட வீரரா அல்லது ஏகாதிபத்தியத்தின் காதலரா? இந்தத் தெளிவுகள் இல்லாமல் உக்ரைன் பாலஸ்தீன ஒப்பீட்டை இடதுசாரி என்பவர் நிகழ்த்தமுடியாது.

ஹமாசின் இரண்டு நிலைபாடுகள் பற்றிச் சொல்ல வேண்டும். இஸ்ரேல் அந்தப் பிரதேசத்திலேயே இருக்கக் கூடாது என்பது அவர்களது கருத்தியல் நிலைபாடு. இது சாத்தியமற்ற அரசியல். இரண்டாவது உள்இயக்க முரண்பாடுகள். ஹமாஸ் பதா போராளிகளைக் கொன்றும் சிறைபிடித்தும்தான் காசாசவில் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியது. மேற்குக்கரைப் பகுதியில் இன்றும் ஹமாஸ் ஆதரவாளர்கள் உண்டு. பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய பதாவினரை ஓரங்கட்ட நதானியேவு ஹமாசின் இருத்தலைப் பயன்படுத்திவந்தார். இத்தனைக்குப் பிறகும் பதா அமைப்பின் சிந்தனையாளர் ஹனன் ஹஸ்ராவி ஹமாசின் அண்மைய தாக்குதல் நடவடிக்கை ஒரு எதிர்ப்பு நடவடிக்கை என்கிறார். இதுதான் ஒரு விடுதலைச் சிந்தனையாளரின் பகுப்பாய்வு நிலைபாடு.

மேற்குலகும் அமெரிக்காவும் நதானியேவும் முரண் ஹமாஸ் யூத முரண் என்கிறார்கள். அல்ல, அது பாலஸ்தீன, இஸ்ரேல்

இன்றைய முரண் என்பது என்கிறோம் நாம். அத்தனை அரசியல் தவறுகளுடனும் ஹமாஸ் இயக்கத்தினர் போராளிகள். பேரினவாத எதிர்ப்புப் போராளிகள்.

உலக அளவில் இலண்டன், பாரிஸ், நியூயார்க் நகர்களில் இஸ்ரேல் அரசுக்கு ஆதரவான ‘பேரணி’களில் நூற்றுக் கணக்கானோர் திரள்கிறார்கள். இவற்றில் ஆளும் அரசின் தலைவர்கள் பேசுகிறார்கள். காசாவில் போர்நிறுத்தம் கோரும் மனிதாபிமான யூதர்களின் ‘பேரணி’களில் ஆயிரக் கணக்கில் திரள்கிறார்கள். பாலஸ்தீனர் ஆதரவாளர்களும் யூத இடதுசாரிகளும் பங்குபெறும் ‘பேரணி’களில் மக்கள் இலட்சக்கணக்கில் திரள்கிறார்கள். அரசுகள் கொடுங்கோல் இஸ்ரேலிய அரசின் பக்கம். உலகின் வெகுமக்கள் பாலஸ்தீனர் பக்கம்.

## உலக நாடுகள் சொல்லும் தீர்வு

பாலஸ்தீன நிலத்தில் இஸ்ரேல் என ஒரு நாடு 'உருவாக்கப்படுவதை' மகாத்மா காந்தி கண்டித்து எழுதினார். ஒரு நிலப்பரப்பினால் குறிப்பிட்ட மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் எனில், அவர்கள் அந்நாட்டில் முழு உரிமையுடன் வாழ உலக நாடுகள் முயலவேண்டும், அதுதான் தீர்வு என்கிறார் மகாத்மா காந்தி. இன்றும் தொகையாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் யூதர்கள் வாழ்கிறார்கள். இன்று வாய்கிழியப் பேசுகிற இட்லரது நாடான ஜெர்மனி ஏன் இரண்டாம் உலகப் போரின் பின் ஒரு பாதுகாப்பான உத்திரவாதத்தை யூதர்களுக்குத் தர முயலவில்லை?

பாலஸ்தீனப் பிரச்சினையில் உலகக் கம்யூனிஸ்டு கட்சிகளின் நிலைபாடு என்ன? இதனை வெறுமனே ஏகாதிபத்தியம், காலனியம் சார்ந்தது என மட்டுமே பார்ப்பதா அல்லது பிரிந்துசெல்லும் உரிமை உள்ளிட்ட லெனினிய தேசிய இனப்பிரச்சினையாகவும் பார்ப்பதா?

பாலஸ்தீன மக்கள் கவிஞனான **மஹ்முத் தர்வீஷ்** ஒரு நிலப்பரப்பாகப் பாலஸ்தீனத்தில் அன்று இயங்கிய ஒன்றுபட்ட அரபுயூதக் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினராக இருந்து பிற்பாடு அதிலிருந்து வெளியேறி பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இணைந்தவர். இன்று அரபு மக்களையும் யூத மக்களையும் இணைக்கிற ஒன்றுபட்ட கம்யூனிஸ்டுக் கட்சி என்பது இல்லை. வெகுஜன அரசியலில் அதிகம் செல்வாக்கற்ற இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள் இன்று உள்ளன. ஒன்றுபட்ட கம்யூனிஸ்டுக் கட்சி உடைந்து இன்று பாலஸ்தீனக் கம்யூனிஸ்டுக் கட்சி, இஸ்ரேலியக் இகமயூனிஸ்ட் கட்சி எனத் தனித்தனியே இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள் உள்ளன.

ஏன் பிளவு ஏற்பட்டது? அரபுக்கள் யூதர்களை ஒரு சிறுபான்மை யினராக அங்கீகரித்தார்களேயல்லாது ஒரு தேசிய இனமாக

அங்கீகரிக்கவில்லை. ஒன்றுபட்ட அரபு பாலஸ்தீன நிலத்தில் யூதர்களுக்குச் சிறுபான்மையின உரிமைகள் மட்டுமே உண்டு என்பது அவர்களது நிலைபாடு. யூதக் கம்யூனிஸ்ட்டுகள் தொடக்கத்தில் பாலஸ்தீன நிலத்தில் ஐரோப்பிய யூதக் குடியேற்றங்களை ஆதரிக்கவில்லை என்றாலும், தாம் ஒரு தேசிய இனம் எனக் கருதப்பட வேண்டும் எனும் நிலைபாடு எடுத்தார்கள்.

அன்றைய உலகக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் அனைத்தும் சோவியத் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் வழிகாட்டுதலின்படியே நிலைபாடுகளை எடுத்தன. இரண்டு தேசியங்கள் கொண்ட, இருவருக்கும் சம உரிமை கொண்ட ஒரு ஜனநாயக அமைப்பாக பாலஸ்தீனம் இருக்க வேண்டும் என்பதே சோவியத் நிலைபாடு.



ஜெர்மனியை அடுத்து கிழக்கு ஐரோப்பிய முகாம்களில் சித்திரவதைக்கு உள்ளான யூதர்களின் குடியேற்றத்தைப் பிற்பாடு யூதக் கம்யூனிஸ்ட்டுகள் ஆதரித்தார்கள். அரபுக் குடியரசில் தேசிய இனம் எனும் உரிமை கோரக்கூடாத சிறுபான்மையினர் யூதர்கள் எனும் நிலைபாட்டை அரபு கம்யூனிஸ்ட்டுகள் எடுத்தார்கள். இப்போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, அரபுக்கள், யூதர்கள் எனத் தனித்தனியே பாலஸ்தீனம் இஸ்ரேல் எனும் இரண்டு நாடுகள் நிலைபாட்டுக்கு வந்துள்ளது.

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில்; இரசியா, சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல பெரும்பாலான உலக நாடுகள் பாலஸ்தீனம் இஸ்ரேல் எனும் இரு நாடுகள் என்பதையே தீர்வாக முன்வைக்கிறார்கள்.

நத்தானியேவு தலைமையிலான இஸ்ரேலிய அரசு இருநாட்டுத் தீர்வை ஏற்கவில்லை. தமது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் முழு பாலஸ்தீன நிலம் என்பதே அவர்களது நிலைபாடு. இதன் பிரதிபலிப்பு போல ஹமாசும் பாலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேலின் இருப்பை ஒப்பவில்லை.

அரசியல் நிறுவனங்கள், இராணுவம், தொழில்துறை, பொருளியல் உற்பத்தி, விநியோகம் எனும் அளவில் பாலஸ்தீன நிலம் என்பது இன்று இஸ்ரேலிய அரசின் ஆக்கிரமிப்பில் கட்டுப்பாட்டில் உள்ளன. இருபுறமும் சந்தேகமும் வெறுப்பும் இரு இனங்களிடமும் இருக்கின்றன.

இச்சூழலில் ஒன்றுபட்ட பாலஸ்தீன நிலம், இருதேசிய இனங்கள்,

இருவருக்கும் அனைத்து விதங்களிலும் சமக் குடியுரிமை எனும் வாதம் இன்று ஆய்வாளர்களிடம் மேலோங்கி வருகிறது.

இன்று பாலஸ்தீன மக்களில் பெரும்பான்மையினர் விரும்புகிற ஹமாசை ஒரு பேச்சுவார்த்தைத் தரப்பாக ஏற்பதன் மூலம் மட்டுமே எந்த வகையிலான தீர்வும் சாத்தியம். காரணம் ஹமாஸ் என்பது ஒரு குழுவலல. அது ஒரு கருத்தியல் கொண்ட எதிர்ப்பியக்கம். இன்றைய மேற்குக்கரை பதா பாலஸ்தீன நிர்வாகமும் அதனை ஒப்புக்கொள்கிறது.

எதற்குமே இடம் தராத யூத மதஇனவெறியர்களின் அரசாக, நியோ நாஜிக் கருத்தியல் அரசாக, இன்றைய இஸ்ரேலிய அரசு இருக்கிறது. ஹமாசின் அக்டோபர் தாக்குதலை முகாந்திரமாகக் கொண்டு அவர்கள் முழு பாலஸ்தீன நிலத்தையும் யூத நிலமாக ஆக்க விளைகிறார்கள்.

பாலஸ்தீனத்தை வழமையாக ஆதரிக்கிற நாடுகள் அன்றைய இன்றைய சோசலிச நாடுகள்தான். உலக இடதுசாரிகள் அவர்களை ஆதரிக்கிறார்கள். இஸ்லாமிய நாடுகள், ஷியா என்றும் சன்னி என்றும், மன்னராட்சி என்றும், அமெரிக்க ஏகாதிபத்திய நாட்டின் ஆதரவாளர்கள் என்றும் பிளவுண்டு மௌனமாக இருக்கிறார்கள். அரபுலகில் உள்ள முஸ்லீம் மக்களால் தமது அரசுகளின் கொள்கைகளை மாற்றமுடியவில்லை.

மறுபுறம், அமெரிக்கமேற்கத்திய நாடுகள் ஒன்று திரண்டு இஸ்ரேல் பக்கம் நிற்கிறார்கள்.

ஐரோப்பிய நகர்களெங்கும் பாலஸ்தீன ஆதரவுப் பேரணிகள் நடக்கின்றன. இஸ்ரேலினுள்ளும் பாலஸ்தீனஇடதுசாரி யூதர்கள் இணைந்து பல நகர்களில் பேரணிகள் நடத்துகிறார்கள்.

இவர்களைப் பாலஸ்தீன மக்களுடன் பிணைப்பது மதமல்ல, மானுட விடுதலை அறம்..

இரண்டு தரவுகளை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அமெரிக்க, மேற்கத்திய அரசுகள் நெல்சன் மண்டேலாவை பயங்கரவாதி எனச் சொல்லிவந்தன. பிற்பாடு அவருடனான பேச்சுவார்த்தை மூலமே தென் ஆப்ரிக்கச் சமரசம் ஏற்பட்டது. அடுத்து, இன்றைய இஸ்ரேலிய அரசு ஹமாஸ் தலைமை தாங்கும் காசாவில் மட்டுமல்ல. அகிம்சைவாதியான மஹ்மூத் அப்பாஸ் தலைமை தாங்கும் மேற்குக் கரையிலும் குண்டுபோட்டு வருகிறது. அங்கு ஆயுதமயப்படுத்தப்பட்ட இஸ்ரேலியக் குடியேறிகள் பாலஸ்தீனர்களைத் தாக்குகிறார்கள். இஸ்ரேலிய அரசு பாலஸ்தீனரைக் கொல்கிறது. நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்குக் கரையில் அகிம்சைவாதிகளையும் இஸ்ரேலிய அரசு இன்று அழித்து

வருகிறது. இது ஹமாஸ் குறித்த பிரச்சினை மட்டுமல்ல, பாலஸ்தீன இனக்கொலைகுறித்த பிரச்சினை.

இஸ்ரேலுக்கு பாலஸ்தீனப் பிரதேசத்தில் இடமேயில்லை எனும் ஹமாஸின் நிலைபாடு இன்று சாத்தியமற்றது. இன்று பாலஸ்தீன் இஸ்ரேல் தீர்வு பற்றிப் பேசுபவர்கள் இரண்டுவிதமான தீர்வுகளை முன்மொழிகிறார்கள். இரண்டு தனித்தனி நாடுகள் அல்லது இரண்டு இனங்களும் வாழும் ஒரு ஒன்றுபட்ட நாடு. பாலஸ்தீனர் என இப்பிரதேசத்தில் எவரும் இல்லை எனச் சொன்ன கோல்டா மேயரும், அதையே இன்று செய்யும் நதானியேவும் பொருத்தமற்ற அரசியல்வாதிகள். இஸ்ரேல் அந்தப் பிரதேசத்தில் இருக்கவே முடியாது எனும் ஹமாஸின் நிலைபாடு (இஸ்ரேல் நிறுவப்பட்;டு எழுபது ஆண்டுகளின் பின்) உலக யதார்த்தத்தில் நிலைகொள்ள முடியாதது.

;இஸ்ரேல் இனவாத அரசு. இஸ்ரேல் இனக்கொலை அரசு. இஸ்ரேல் இன ஒதுக்கல் அரசு. இஸ்ரேல் ஆக்கிரமிப்பு அரசு. இஸ்ரேல் சர்வதேசப் போர்க்குற்ற அரசு.இப்படிச் சொல்வது யூத இனவெறுப்பு அல்ல.யூத மதஇனவெறிக் கருத்தியல் மறுப்பு என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

தென் ஆப்பிரிக்க அரசு உலக குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேலின் மீது இனக்கொலைக் குற்றச்சாட்டை அதிகாரபூர்வமாகச் சுமத்தி ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்கிறது. தென்னாப்பிரிக்க அரசு ஆதரவு காங்கோவில் கியூப அரசு பெற்ற ஆயுதப்படையின் வெற்றி தமக்குப் பெரும் பயனுள்ளதாக இருந்தது என்கிறார் நெல்சன் மண்டேலா. **நெல்சன் மண்டேலா, யாசர் அராபத்** இருவரையும் அமெரிக்கமேற்குலகு முதலில் பயங்கரவாதிகள் என்றது. பிற்பாடு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இன்று ஹமாஸ் இயக்கத்தை பேச்சுவார்த்தைகளில் ஒரு தரப்பாக அங்கீகரிப்பதன் மூலமே பாலஸ்தீனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் எட்டமுடியும். ஹமாசை அழிப்பது என்பது சாத்தியமில்;லை. காரணம், அது பாலஸ்தீனத்தின் பெரும்பான்மை மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஒரு வலிமையான தேசிய விடுதலைக் கருத்தியல்.

❖❖❖

# தமிழீழத்தின் காதல் மற்றும் போர் எந்திரங்கள்

# - தேவகாந்தனின் "கலிங்கு"

ஜமாலன்

"தமிழ் சண்டைக் கதை இப்பொழுது முள்ளிவாய்க்காலில் முடிந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு சோகமான முடிவு இது! கால் நூற்றாண்டுப் போராட்டத்தில் எதுவுமே மிஞ்சவில்லையென்பது வரலாற்றுச் சோகமல்லவா? சகல தேசிய இனப் போராட்டங்களின் வரலாற்றிலும் இது ஒரு அழுந்தப் படிந்த கறை. இவ்வாறாக, ஒரு யுத்தம் எங்குமே தோற்கக் கொடுக்கப்பட்டதில்லை."

"அது தோற்காமல் கொடுக்கப்பட்டதென்கிறாய்...?"

"ஆம். அவர்கள் ஒரு வெற்றியை... ஓரளவு வெற்றியை... அடைந்தே இருந்தார்கள். அரசியலில் சரியான தந்திரமின்மையால் அதை தோல்விக்குக் கொடுத்தார்கள்."

தேவகாந்தனின் "கலிங்கு" நாவலில் பக். 404-ல் நிகழும் உரையாடல்.

"மதமேதான். இங்கே மதம்கூட இல்லை. பௌத்த மடங்கள். அபயகிரி, ஜேத்தவன ஆகிய இரண்டு மத நிறுவனங்களின் ஒற்றை அமைப்பு. அதுவே ஸ்ரீலங்காவின் அதிகார மய்யம். வரலாற்றினை மாற்றி இயக்கிக் கொண்டிருக்கின்ற மகாசக்தி அதுவேதான்." பக்.407, கலிங்கு

இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் இடையிலான உறவு மிகவும் நுட்பமானது. இலக்கியம் வரலாற்றின் ஓர் சாட்சியமாக மட்டும் இருப்பதில்லை. வரலாற்றின் உணர்வார்ந்த பக்கத்தை அந்தக் காலத்திற்குக் கொண்டு சென்று உணரவைக்கும் ஒரு ஆற்றல் புனைவு இலக்கியங்களுக்கு உண்டு. ஒருவகையில் வரலாறாக அறியப்படுவது இலக்கியங்களின் துணைகொண்டும், இலக்கியமாக அறியப்படுவது வரலாற்றிற்குள் வைத்தும் வாசிக்கப்படுகிறது. வரலாறு வென்றவர்களின் கதை மட்டுமல்ல, வீழ்ந்தவர்களின் கதையும்கூட. புதுவரலாற்றுவாதம், வரலாறும் இலக்கியமும் தன்னளவில் இரண்டு பிரதிகள். அவை ஒன்றை ஒன்று நிறைவு செய்துக் கொள்ளக்கூடிய பிரதிகள் என்கிறது. இலக்கியம் வரலாற்றை உணர்த்தும், வரலாறே இலக்கியமாகவும் உணரப்படும். வரலாறு அந்தந்தக் கால அதிகார வர்க்கம் மற்றும் ஆளும் வர்க்கம் தனக்காக உருவாக்கிக் கொள்ளும் ஒரு பிரதியாக்கம். அப்பிரதியாக்கத்தினை நிகழ்கால அரசியலில் வாசிக்கும் போது,



**நூலாசிரியர் தேவகாந்தன்**

அவ்வரலாறு நிகழ்கால அரசியல் பிரதியாக மாற்றம் கொள்கிறது. அப்படியான ஒரு நாவல் பிரதியே தேவகாந்தன் அவர்களின் "கலிங்கு". 2003 முதல் 2015 வரையிலான இலங்கை, தமிழீழப் பகுதிகளைக் களமாகக் கொண்ட, தமிழீழப் போராட்டம் நிகழ்ந்த அச்சமூகத்தின் சாமான்ய மக்களின் வாழ்வியல் போராட்டம் வழியாக அந்த வரலாறு குறித்த ஒரு பிரதியாக்கமே இந் நாவல். 644 பக்கங்களைக் கொண்ட இந்நாவல் ஈழப்போரின் ரத்தமும் சதையுமான 12 ஆண்டுகளை நமது கண்முன் கொண்டுவந்து நிறுத்த முனைகிறது. ஒரு பெரிய கேன்வாஸில் தீட்டப் பட்டுள்ள அகமும், புறமும் உருவாக்கிய காதல் மற்றும் போர் எந்திரங்களின் உயிர்ப்புள்ள ஒரு வாழ்வே "கலிங்கு".

2003 யுத்த நிறுத்த காலத்தில் தொடங்கும் இந்நாவல் 5 காலப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு நகர்கிறது. இந்த நாவலின் அடிப்படைப் படிமம் "கலிங்கு". கலிங்கு என்பதை மதகு, 'shutters' என்று கூறலாம். அதாவது, கண்மாய், ஏரி, ஆறு போன்ற நீர்நிலைகளில் நீரை முறைப்படுத்தி வெளியேற்றுவதற்குக் கற்களை அல்லது பலகைகளை அல்லது மணல் மூட்டைகளைக் கொண்டு ஏற்படுத்தப்படும் ஒரு தடுப்புக் கட்டுமானம் ஆகும். இதன் மூலம் நீரின் போக்கைக் கட்டுப்படுத்தி அதனை ஒழுங்கமைக்க முடியும். பாய்ந்து வரும் நீரை அல்லது தேக்கி வைக்கப்பட்ட நீரை தேவைக்கு ஏற்பத் திருப்பிவிடவும், பயன்படுத்தவுமான ஓர் அமைப்பு. நீரை ஒழுங்குபடுத்தும் கலிங்கு, தமிழீழ வரலாற்றில் ஒரு படிமமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது இந்நாவலில். அதாவது, தமீழீழப் போராட்டம் என்ற பெருகி வந்த ஒரு காட்டாற்று வெள்ளத்தை எப்படி அரசியல் கலிங்குகள் மடைமாற்றின என்பதே இந்நாவல். போரின் அரசியல் பற்றியது அல்ல, அரசியல் நிகழ்த்திய போர் பற்றியது.

நாவலில் அப்படியான ஐந்து கலிங்குகள், அதாவது மடைதிறப்புகள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(1) 2003 யுத்த நிறுத்த காலம்

(2) 2006 புலிகளிடமிருந்து கருணா பிரிந்து சென்றது


(3) 2009 யுத்தம் தொடக்கம் கிழக்கின் வீழ்ச்சி,

முள்ளிவாய்க்கால் படுகொலைகள், யுத்த முடிவு

(4) 2012 யுத்தத்திற்கு பிந்தைய காலம், முகாம் வாழ்க்கை

(5) 2015 மீள் குடியேற்றம் புலம்பெயர்தல்

இக்காலங்கள் மூன்று மூன்று ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், தமிழீழ யுத்தத்தின் வாழ்வியல், சமூகம், அரசியல், வரலாறு சார்ந்த அனைத்து பரிமாணங்களையும் இந்நாவலின் உள்ளார்ந்த தர்க்கத்திற்கு ஏற்பக் காட்டிச் செல்கிறது. எந்த ஒரு யுத்தத்தையும் சந்திக்காத தமிழ்நாட்டுத் தமிழர்களான நமக்கு, ஒரு யுத்தம் சார்ந்த நிலத்தின் வாழ்வியலை அதன் யதார்த்தத்துடன் மிக நுட்பமான கதையாடல்கள், உள்ளார்ந்த பல புரிதலை உருவாக்கும் உரையாடல்கள் வழி நாவலை விறுவிறுப்பாக நடத்திச் செல்கிறார் தேவகாந்தன். அவரது அரசியல், மெய்யியல், வரலாறு, மொழியறிவு ஆகியவை இந்நாவலில் மிகச் சிறப்பாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்து சைவக் கடவுள் கதைகள், நாட்டார் நம்பிக்கைகள், சிங்கள பௌத்தக் கதைகள், புராணங்கள் எனப் பல பரிமாணங்களை ஆங்காங்கே மிகவும் தனது பரந்த அறிவாற்றலைப் பயன்படுத்தி நாவலின் வாசிப்பின்பத்தைக் கூட்டுகிறார். இந்நாவலின் தனித்துவம் என்னவென்றால், சிங்களர்களிடம் உருவான மார்க்சிய சேகுவேரா பாணியிலான ஜேவிபி இயக்கம் எப்படி அழிக்கப்பட்டு அது சிங்களப் பேரினவாத அமைப்பாக மாறியது என்பதும், பௌத்த தலைமைக் குருமார்கள், சிங்களர்கள் இடையே நிகழ்ந்த பல வரலாற்றுக் குறிப்புகளை, சில கதைப் பாத்திரங்களை உருவாக்கி ஈழப்பிரச்சனையின் பின்னணியில் உள்ள பெருந்தேசிய வெறிக்கும் பௌத்த பேரினவாதத்திற்கும் உள்ள உறவும் ஆராயப்பட்டுள்ளது. உலகளாவிய கம்யுனிச புரட்சிகளின் வீழ்ச்சிக்கு மாற்றாக உருவாக்கப்பட்ட தேசிய விழிப்புணர்வு கதையாடல்கள், இன, மதவாதச் சொல்லாடல்களின் அரசியல் பின்புலம் மக்களை வீழ்த்தி அதிகார, ஆளும் வர்க்கத்தைக் காத்த இலங்கை நிலப்பரப்பின் ஒரு கால வெளிப் புனைவே “கலிங்கு”.




நாவலின் ஒரு பகுதி சிங்களப் பகுதியில் நிகழ்கிறது. அங்குள்ள சிங்கள தமிழ் உறவும் அதில் உள்ள இணக்கமும், கொஞ்சம் கொஞ் சமாக விஷமாக்கப்படுவதும் வாசித்த பின்னும் மனதில் காட்சிகளாக

உறையும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. சிங்கள ஜேவிபியின் வரலாறும், தமிழீழ வரலாறும் குறித்த பின்னணியில் அமைந்த ஆளும் வர்க்கப் பொருளியில் நலன் என்பதை ஒரு மார்க்சியப் பார்வையில் அணுகும் முயற்சியை இந்நாவலில் காண முடிகிறது. வன்னிப் பகுதிக்கும், அல்வாய் என்ற பகுதிக்கும் இடையிலான வேறுபாட்டை நாவலின் முக்கியமான பாத்திரங்களான சாமியும், நிலாவும் உரையாடும் பகுதியில் சாமி சொல்கிறார் “ நீ சொல்றது ஓரளவுக்குத்தான் சரி. அங்க போனவுடன் அந்த வெளிக்கேத்த விடுதலைத் தன்மை அவைக்கு மெல்லமெல்லமாய் வரத் துவங்கியிடும். வெளியை எண்டைக்கும் மனிசன் மாத்தினதில்லை. வெளிதான மனிசனை மாத்தியிருக்கு.” (ப.75). மார்க்ஸ் தனது 'அரசியல் பொருளாதாரத்திற்கான விமர்சனப் பங்களிப்பு' என்ற நூலின் முன்னுரையில் கூறும் வாசகம்-வாழ்நிலைதான் உணர்வுகளைத் தீர்மானிக்கிறது, மாறாக, உணர்வுகள் வாழ்நிலையை நிர்ணயிப்பதில்லை என்பது இந்தக் கூற்றைப் பிரதிபலிக்கிறது மேற்கண்ட உரையாடல். இந்நாவல் யதார்த்த சூழல், மனிதர்களை எப்படி மாற்றியமைக்கிறது அதிலும் ஒரு யுத்தச் சூழல் உருவாக்கும் உணர்வுகளின் அலைக்கழிப்பு, மெய் யியல் சார்ந்த விகசிப்பு ஆகியவை நாவலின் உள்ளார்ந்துள்ள ஒரு பொருள்முதல்வாதப் பார்வையை முன்வைப்பதாக உள்ளது.

ஒரு பெருவெள்ளம் பற்றிய வருணனையுடன் தொடங்கி, கலிங்குகள் திறந்து தற்காலிக வெள்ள நிவாரண தங்கு முகாமிலிருந்து திரும்பி வந்த 1973ஆம் ஆண்டுக் கதையுடன் தொடங்கும் நாவல், அதை ஒரு முன்னோட்டமாக, வெள்ளம், கலிங்கு, நீரை ஒழுங்கமைத்தல், அகதி முகாம் என்பதற்கான அறிமுகக் குறிப்பாகத் தந்துவிட்டு 2003-ல் தொடங்குகிறது. யுத்த நிறுத்தக் காலத்திலும் ஈழத்தமிழ் பெண்கள் இராணுவத்தினரால் வன் பாலுறவிற்கு உட்படுத்தும் நிகழ்வுகள், அதுகுறித்த பெண்களின் பேச்சுகள் என துயரத்தின் வலியை உணர்த்தியபடி உள்ளது. ஓர் ஆமிக்காரனிடம் தான் விட்டுக் கொடுத்துவிட்டேன் என்று கூறும் ஒரு பெண், விரும்பிக் கொடுத்தலுக்கும் விட்டுக் கொடுத்தலுக்கும் உள்ள தூரத்தைப் பேசுகிறாள். இந்நாவலின் ஒரு சில பாத்திரங்கள் முழுவதுமாக வந்து போனாலும், எண்ணற்ற பாத்திரங்கள் கதைநெடுகிலும் உலவுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துயரத்தைச் சுமந்தவர்களாக உள்ளனர். ஒரு நிலப்பரப்பில் நிகழ்ந்த எண்ணற்ற காட்சிகளின் கலவையாக இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. தனிமனிதர்களின் துயரமாக இந்நாவல் வடிக்கப்படவில்லை. ஒரு சமூகத்தின் துயரமாக விரிகிறது.

இது வெறும் தமிழீழம் குறித்த நாவல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த

இலங்கையின் அரசியல், அதிகாரம், மதம், இனம், மொழி குறித்துப் பேசும் நாவல். யுத்தத்தின் கண்ணீர் மட்டுமல்ல, அதற்குக் காரணமாக அமைந்த அரசியல் உள்ளோட்டங்களை உணரவைக்கும் பல கதைக் கூறுகளால் கட்டப்பட்டுள்ளது. அதில் முக்கியமானது சிங்கள சமூகத்தின் முற்போக்கு இயக்கமாக உருவான ரோஹன விஜயவீராவின் ‘‘ஜனதா விமுக்தி பெரமுனா’’ எப்படிச் சிங்கள ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டு, விஜயவீராவைப் படுகொலை செய்து அந்த இயக்கத்தைப் பௌத்த ஆதரவு அமைப்புகள் கைப்பற்றி, இனவெறி அமைப்பாக மாற்றியது என்பதைச் சொல்லும் பகுதிகள் முற்றிலும் சிங்கள அரசியலின் ஒரு பகுதியை உணர்த்துவதாக அமைந்துள்ளது. சிங்களப் பாத்திரங்கள், இளம் புத்த துறவிகள் என மனிதநேயமிக்கவர்கள் சூழலால், அதன் சதி விளையாட்டால் சிக்கி இனவெறியர்களாக மாறுகிறார்கள். உண்மையில் சிங்கள முற்போக்கு இயக்கங்களின் குரல் வெற்றியடைவதை வீழ்த்த பௌத்த மகாசக்திகளைத் தூண்டிவிட்ட ஆளும் வர்க்கம், இனப்போராக அதனை மடைமாற்றியது இனவெறிக் கலிங்கைத் திறந்து. இங்கு கலிங்கு என்பது வரலாற்றின் ஒரு திறப்பு, ஒரு திசைவழி. இது ஒரு படுகொலையாக இருக்கலாம், கலவரமாக இருக்கலாம், ஒரு பாலியல் வன்புணர்வாக இருக்கலாம், ஒரு தெருச்சண்டையாக இருக்கலாம். இதுதான் நாவலின் குறியீட்டுத் தன்மையாக வெளிப்படும் முக்கிய இடங்கள்.

‘‘உயர்ந்த ஒரு லட்சியத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருந்தவனுக்கு மேல், உடனடியாகக் கிளர்ந்தெழுந்து உந்துதலில் புரட்சியின் ஆதரவாளானாகியவன் நடத்தும் யுத்தமென்பது, ஒரு சூதில் நிகழ்த்தப்படுகிறது. அது ஒரு துரோகத்திலோ, காட்டிக் கொடுப்பிலோதான் முடிய எப்போதும் சாத்தியம் கொண்டிருக்கிறது.’’ (ப. 114) என்று ஜேவிபியின் தோல்வியைக் கூறும் கதைக்குரல், அதைத் தொடர்ந்து நிகழந்த நிகழ்வுகளைக் தனது புனைவுப் பாத்திரங்கள் வழி வெளிப்படுத்திக் காட்டுகிறது. இது ஜேவிபிக்குச் சொல்லப்பட்டாலும், தமிழீழ விடுதலைப் போரிலும் இதுதான் நிகழ்ந்தது. ஒரு துரோகம், ஒரு காட்டிக் கொடுத்தல், ஒரு தனிமனித சாகசம், காலநிலைக்கு ஒவ்வாத சாகசப்போர் என ஓர் இனம் மீளாத் துயருக்குள் சிக்கிக் கொண்டுவிட்டதை இந்நாவல் வாசிப்பு உணர்த்துவதாக உள்ளது. அதன் உள்ளார்ந்த உளவியல் பரிமாணங்கள், அதில் சிக்கித் தவித்த மக்களின் மனமாற்றங்கள், வாழ்வை இழந்துவிட்ட நிலை என அனைத்தும் புனைவாக பதிவாகியுள்ளது.

நாவல் வெறும் யுத்தத்தின் விளைவான போர்ச்சூழலை மட்டும் பேசவில்லை. அதன் அக, புற மாற்றங்களால் உருவான

மனிதர்களின் தன்னிலைச் சிதைவுகளை, உடற்சிதைவுகளை, காதல், உடலீர்ப்பு, இயக்கத்திற்குள் உருவாகும் நெருக்கம், நெருக்கடிகள் எனப் புனைவின் பல அடுக்குகள் இதில் ஊடுபாவாகப் பின்னப்பட்டுள்ளது. இதன் உள்ளார்ந்து வெளிப்படும் உளவியல் தளம் தனியாகப் பேசப்பட வேண்டிய ஒன்று.

நாவல் பல கிளைக்கதைகளையும், நிகழ்வுகளையும் புனைந்தபடி நகர்கிறது. "நான் இருக்குற கதையைச் சொல்லுளவளில்லை. சொல்லுற கதையை இருக்க வைக்கிறவ." (ப. 158) என்று அக்கதைகளில் ஒன்று முள்ளிக் கிழவி சொல்லும் வன்னி குறித்த பழங்கதை. கதையை இருக்க வைக்கிற தன்மை என்பது, வரலாற்றின் கதைகூறலாக மாறிவிட்ட இனப்பெருமையை பற்றியதாகவும் இருப்பதை நாவல் தனது ஆழ்தளப் புரிதலாகக் கொண்டுள்ளது. அதாவது கதைகளால் கட்டப்படுவதே தேசங்கள். அக்கதைகள் வரலாறுகளாக பெயர்மாற்றம் பெறுவது இன்றைய அரசியல் சொல்லாடல் புலத்தில்தான். அதில் ஒன்று இனவாதக் கதையாடலுக்கான அடிப்படையை உருவாக்கிய துட்டகெம்னு கதை. அது நாவலுக்குள் வைத்துக் கதையாடப்படுகிறது. இந்தக் கதையை எழுதியவர் ஒரு தேரர். மகாவம்சம், இந்திய சமூகத்தில் இராமாயணம், மகாபாரதத்தைப் போல ஒரு முக்கியமான அரசியல் பிரதியாக இருப்பதை நாவல் உரையாடலுக்கு உட்படுத்துகிறது. எப்படி பௌத்த மதத்தை மடம் கட்டுப்படுத்தி, மகாசக்தியாக மாறுகிறது என்பதையும், அதற்கான கதையாடலையும் நாவல் விவரிக்கும் பகுதிகள் முக்கியமானவை.

பண்டார நாயகாவின் கொலைக்குப் பின் உள்ள புத்த பிக்குகள், அதன் சதியில் மடத்தின் பங்கு ஆகியவை விவாதத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இக்கதையைச் சொல்லும் பிக்கு சுது, அந்த மடத்தை விட்டு வெளியேறி விடுகிறார். யாழ்ப்பாணத்தில் சிங்கள கொடிகளைப் பறக்கவிடும் தூண்கள் அமைக்கப்படாமல் புத்த விகாரைகள் அமைக்கப்படுவதன் பின்னுள்ள மதவாத அரசியல் குறித்தும் விரிவாகப் பேசுகிறார். மதம் இந்த போரில் ஒரு முக்கியமான பங்கை ஆற்றியதாக நாவல் ஒரு நீண்ட உரையாடலை முன்வைக்கிறது. ஆனால், இப்பகுதிகள் ஏற்புடைய கருத்தாக இல்லை என்பதைப் பதிவது அவசியம். ஒருபுறம் ஜேவிபி வர்க்கப் போரை திசை திருப்ப தமிழீழப் பிரச்சனை இனவாதமாகத் தூண்டப்பட்டது என்ற பார்வை முன்வைக்கப்படுகிறது. மற்றொருபுறம் மதமே மூலகாரணம் என்றும், இந்து, புத்த மதப்போராக தமிழீழப் போராட்டம் மாறி யிருந்தால் தமிழ் இளைஞர்களுக்கு வலுச் சேர்த்திருக்கும் என்று சிங்கள மனசாட்சியாக உள்ள பிக்கு சுதுவின் நீண்டவாதம்

முன்வைக்கப்படுகிறது. கிறித்துவ ஜனாதிபதிகள்கூட புத்தராக மாறியபின்னே அதிபராக அமர முடிந்தது (ஜெயவர்த்தனே) என்பதையும் பேசுகிறார் சுது. இப்படி போரின் பலவேறு அரசியல். நிலைபாடுகள், குரல்கள் இந்நாவலின் குறுக்கு மறுக்குமாக வெளிப்படுகிறது.

நாவலின் கதையாடல் வெளி போர்க்காலத்தினதும், இறுதிப்போரின் பேரழிவின் பின்னைய காலத்துடனும் மட்டும் இணைக்கப்படவில்லை, பல்வேறு வரலாற்று நினைவுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள், பழங் கதைகள் ஆகியவற்றுடன் பிணைந்து இரசிய கோட்பாட்டாளரான மிக்கைல் பக்தின் கூறும் "க்ரோனோடோப்" (Chronotope), என்கிற காலவெளிக்குள் (time-space) மாறும் ஒரு புனைவாக்க வெளியாக அமைந்துள்ளது. பக்தினின் கோட்பாடு நாவல்களின் காலமும், வெளியும் ஒன்றிணைந்து உருவாக்கப்படும் கதையாடல்களை ஆராய்கிறது. ஒரு நாவலுக்குள் காலமும் வெளியும் எப்படிக் கட்டமைக்கப்படுகிறது என்பதை அதன் கதையாடல் வழியாக வெளிப்படுத்தும் ஒரு கருத்தாக்கம் "க்ரோனோடோப்" என்பது. இந்நாவலே காலத்தை குறிப்பாக போர்க்காலத்தையும் அது உருவாக்கிய இலங்கை என்கிற வெளியையும் மிக மிக நுட்பமாகக் கட்டமைத்துச் செல்கிறது. தமிழீழத்தின், இலங்கையின் இயற்கைச் சூழல்களை விவரிப்பதாக இருக்கட்டும், அதன் திணைகளாக நெய்தல், மருதம் உள்ளிட்டவற்றைக் காட்சிப் படுத்துவதாகட்டும், பிற்காலத்தில் போரால் திணை திரிந்து பாலையாக மாறுவதாகட்டும், ஆசிரியர் தேவகாந்தனின் நுட்பமான பார்வை மட்டுமின்றி, அந்த கால \ வெளி பற்றிய அவரது அறிவாற்றல் பிரம்மிப்பைத் தருவதாக உள்ளது.

நாவல் பக்தினின் மற்றொரு கோட்பாடான பல்குரல் தன்மை (poly-phonic voices) கொண்டதாக அமைந்துள்ளதால், ஒரு குறிப்பிட்ட கோட்பாடு, அரசியல் சார்பு இல்லை. பல்வேறு நியாயங்கள், அரசியல் முரண்கள், பழங்கதைகள், சார்புநிலைகள், வெவ்வேறு தலைமுறையின் பார்வை நிலைகள் எனப் பல குரல்களைப் பதிவு செய்வதாக உள்ளது. இடையில் விவிலியக் கதைகள் உருவாக்கிய முதல் புலப்பெயர்வு குறித்தும், அதற்கு ஈடானதொரு இலங்கைப் புலப்பெயர்வு நிகழ்ந்ததையும் குறிப்பிட்டுக் காட்டும் இடங்கள் ஒரு பெருந்துயர், வரலாற்றில் மாறாமல் நிகழ்ந்து வருவதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. மனித புலப்பெயர்வுகள் வாழ்வைத் தேடிச் செல்வதற்கு மாறாக, வாழமுடியாத சூழலால் நிகழ்த்தப்படுவதும், அதிகாரத்தினால் அடித்து விரட்டப்படுவதுமான நிலை இன்றுவரை மாறவில்லை என்பதைச் சொல்வதாக அமைந்துள்ளது.

"நவீன வரலாற்றின் அணிகலன்களெல்லாம் குலுங்கிச் சிதறின.

நான்கு புறமும் சூழ்ந்த யுத்தத்தின் மத்தியில் அகப்படுத்தப்பட்ட இனக்குழுவொன்று, தன் முன்னோர்க் கடல் கோள்களிலும் கண்டிராத மகா அழிவுகளை சந்தித்தது. மரணம், வேதனை, துன்பம், பசி, குளிர், பிரிவு, இழப்பு, அங்கஹீனம், வலி... காலம் கண்மூடி இட்ட சாபம் அது.'' (ப.413)

இங்கு காலத்தின் சாபம் என்பதான ஒரு குரலும், மேலே காட்டிய பல அரசியல், வரலாறு, இறையியல், மெய்யியல் சார்ந்த குரல்களும் என நாவலின் பாத்திரங்களின் பல குரல்கள் மட்டுமின்றி, கதைசொல்லியின் குரலும் பல்வேறு கால வெளிச் சூழலால் கட்டப்பட்டதாக அமைந்துள்ளது. 2009 என்ற பகுதியில் 10வது அத்தியாயம் நவம்பர் 12, 1989 ரோஹண விஜயவீர கொடூரமாகக் கொல்லப்பட்டதும், மே, 19, 2009 வேலுப்பிள்ளை பிரபாகரன் கொடூரமாகக் கொல்லப்பட்டதுமான காட்சிகளை ஒப்பிட்டு எண்ணிப் பாரக்கிறாள் ரோஹணாவின் தீவிரப் பற்றாளரான குசுவமதி என்கிற சிங்களப் பெண். அந்த அத்தியாயம் முழுக்க ஒரு வரலாற்றின் சோகத்தை முகத்தில் அறைவதாக உள்ளது. இறக்கும் முன் தமிழீழக் குழுக்களுக்குத் தான் உதவியதை ஒத்துக் கொள்கிறார் ரோஹன விஜயவீரா. நாவல் வரலாறும், புனைவும் இணைந்தும், பிணைந்தும் செல்வதாக அமைந்துள்ளது. ஒரு வரலாற்று ஆவணமாக மாறிவிடாமல், புனைவும் கதையுருக்களும் தங்கள் வாழ்வின் பதிவுகளை இலக்கிய ஆவணமாகத் தரமுயன்றுள்ளது நாவல்.

நாவல் வாசிக்கப்படும்போது நேரடியாகப் போரில் ஈடுபட்ட இயக்கம், இயக்கத் தலைவர்கள், சான்றாக, கருணா, அம்மான், அன்ரன் பாலசிங்கம் என உண்மைச் சம்பவங்களின் வரலாற்றையும் கலந்து எடுத்துரைக்கிறது. நாவலின் வரலாற்று அடுக்கில் உண்மை நிகழ்வுகளும், புனைவடுக்கில் அது குறித்து விமர்னரீதியாக, ஏற்புடமையுடன், அரசியலை மறுத்தும், ஏற்றும் விவாதிக்கும் பாத்திரங்கள் என ஒரு வரலாறாகவும், அதே நேரத்தில் ஒரு புனைவிலக்கியமாகவும் நாவல் அமைக்கப்பட்டுள்ளது.

மனித உடல்கள் போர் எந்திர உடல்களாக மாற்றப்பட்டபின் அதன் அகம் எப்படி எந்திரமாக மாறுகிறது என்பதைச் சங்கவி என்ற பெண் போராளியை வைத்து நாவல் எழுதிச் செல்லும் விதம் போரின் உடலரசியலை விளக்குவதாக அமைந்துள்ளது. இன்றைக்கான உடல்கள் தமிழின் அகப்பாடல் கட்டமைக்கும் காதல் எந்திரங்களாகவும், புறப்பாடல்கள் கட்டமைக்கும் போர் எந்திரங்களாகவும் மாற்றப்படும் விதம் குறித்து அறிய இந்நாவலின் பல போராளிக் குழுக்களின் கதை உருக்களை வாசிப்பது அவசியம். அது குறித்தே ஒரு தனிக்கட்டுரை எழுதலாம். ஒரே ஒரு காட்சி

சங்கவி என்கிற இயக்கப் போராளி தனது திருமணத்தையும், முதலிரவையும் அணுகும் விதம், அவளது போர்ப்பயிற்சி துவக்குகளுடன் ஆன ஓர்மையோடு கலந்து நிற்பதைக் காட்டுகிறார் ஆசிரியர்.

விடுதலைப் புலிகளின் இயக்கங்கள் அதில் ஈடுபடும் போராளிகள் குறித்த காட்சிகள் இந்நாவலில் குறிப்பிடத்தக்கவை. அதேபோல் சிங்களர்கள் மத்தியில் நிகழும் இந்தபோரின் விளைவுகள் குறித்தும் இணையாகக் காட்சிப் படுத்தியுள்ளார். இரண்டு முக்கியமான வரலாற்று இயக்கங்கள் இந்நாவலின் முக்கியப் பின்புலமாக அமைந்துள்ளன. ஒன்று நிகழ்காலப் புலிகள் இயக்கம். மற்றது நினைவு கூறப்படும் ஜேவிபி. இரண்டு தலைவர்களும் எப்படி ஆளும் வர்க்கத்தால் கையாளப்பட்டார்கள் என்பதும் இதில் இணையாக வைத்து பேசப்பட்டுள்ளது. நாவல் யாருக்கும் ஒருதலைப்பட்சமாக நிற்காமல், எல்லோரது நியாயங்களையும். அனைவரது குரலையும் முன்வைக்கிறது. சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்ட பிள்ளையை இழந்த தாயின் துயரமும், புலிகளால் கொல்லப்பட்ட சிங்கள இராணுவ வீரனது தாயின் துயரமும் ஒருமித்த மனித அவலம் எனபதைக் காட்டுவதன் மூலம், இந் நாவல் போருக்கு எதிரான ஒரு நாவலாக வெளிப்பட்டுள்ளது.

2012 என்ற பகுதி, முகாம்களின் வாதைகளும், புலிகளில் இருந்தவர்கள், அதற்கு உதவியவர்கள் விசாரணையில் படும் அவலங்களும் என விவரிக்கப்பட்டுள்ளது. இடைத் தங்கல் முகாம், மறுவாழ்வு முகாம் ஆகியவற்றிற்குள் நிகழும் கதைகள், காட்சிகள் ஒரு புதிய சூழலைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அதேபோல், 2015 பகுதியில், புலம்பெயர் தலைமுறை தனது தாய் மண்ணிற்கு வந்து அதனை அணுகும் முறை, அதன் புதிய பண்பாட்டுப் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் ஆகியவை ஒரு விரிந்த பரப்பில் நாவலை அணுகுவதற்கான தளத்தைக் கொண்டுள்ளது. இதில் பரவலாக மௌனிக்கப்படும் ஒரு குரலை மிகவும் துணிச்சலுடன் முன்வைக்கிறது நாவல். அது யுத்தம் என்றவுடன் புலம்பெயர்ந்து போனவர்கள், இந்தப் போரை அங்கிருந்து தொடர்ந்து உசுப்பேத்தி விட்டார்கள் என்பது. அதாவது ஈழ யுத்தத்திற்கு ஒருவகையில் புலம்பெயர் ஈழத் தமிழர்களின் சுயநலமும் காரணமாக அமைந்தது. அவர்கள் தொடர்ந்து தாய் மண்ணில் நடந்த யுத்தத்தை ஒருவகையில் உசுப்பேத்தி விட்டார்கள் என்று தாய் மண்ணில் உள்ள ஒருவர் புலம்பெயர்ந்து தாய் மண்ணை பார்க்க வந்த ஒருவரிடம் கூறுகிறார் (ப.563). இந்நாவலின் இரண்டு பாத்திரங்கள் இளையவளான நிலா மற்றும் முதிய நாடோடியான சாமி இருவரும் யுத்தம்

தொடங்கி இறுதிவரை வந்து போகக் கூடியவர்களாக உள்ளனர். அந்த நிலாதான் புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வந்த கஜந்தனிடம் கேட்கிறாள் "நீங்கள் உசுப்பேத்திவிட்ட யுத்தம்தானே அது?" என்று. கஜந்தனுக்கும் நிலாவிற்கும் இடையில் ஒரு காதல் எந்திர உறவும் இந்த யுத்தத்திற்கு இடையில் 2003-ல் துவங்கி இறுதிவரை தொடர்கிறது. அவன் புலம் பெயர்ந்த பின்னும், இறுதியில் அவளைத் தேடி வருகிறான். ஆனால், அவளுக்கு ஒரு கால் யுத்தத்தால் போய்விடுகிறது. அதோடு அவளை ஏற்கத் தயாராகிறான்.

அவளுக்கு இறுதியில் ஒரு கனவு வருகிறது. "முறிந்த ஒரு ரோஜாச் செடி மறுபடி கிளைவிட்டு செழித்து பூப்பூத்ததுபோல் அவளுக்கு ஒரு கால் முளைத்திருந்தது. ரோஜாப்பூ நிற கால். அவள் காலை அசைத்துப் பார்க்கிறாள்." என்று தமிழீழத்தின் ஒரு குறியீடாக கால் முறிந்த நிலாவிற்கு அழகான கால் முளைக்கிறது. அது இன்று கனவு என்றாலும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் முடிவதாக உள்ளது.

❖❖❖

# தமிழ்வழிக் கல்வி-சிக்கல்களும் தீர்வுகளும்

கண. குறிஞ்சி

"ஒரு குழந்தைக்குப் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க முடியும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

**உளவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால்,** புரிந்து கொள்வதற்கும், வெளிப் படுத்துவதற்கும், அறிவியல் இயல்பாகச் செயல்படுவதற்குரிய பொருள் மிக்க சமிக்ஞைகளைக் கொண்ட கட்டமைப்பாகத் தாய் மொழி உள்ளது.

**சமூகவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால்,**

தாம் சார்ந்துள்ள சமூகத்தில் உறுப்பினர்கள் இடையேயான அடையாளத்தை அறியும் வழியாகத் தாய்மொழி உள்ளது.

**கல்வியியல் கண்ணோட்டத்தில் பார்த்தால்,** அறிமுகம் இல்லாத மொழி வழியாகக் கற்பதைக்காட்டிலும், தாய்மொழி வழியாக மிகவும் விரைவாகக் கற்றுக் கொள்ள முடியும்"

( UNESCO 1953 ) என ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் குறிப்பிடுகிறது.

இத்தகைய கருத்தையே 1968 / 2004 / 2008 எனப் பல்வேறு ஆண்டுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனது ஆய்வு அறிக்கைகள் மூலமாகத் தொடர்ந்து அது வலியுறுத்துகிறது. தாய்மொழிக் கல்வியை எந்த அளவிற்கு நீட்டிக்க முடியுமோ, அந்த அளவிற்கு நீட்டித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அது பரிந்துரைக்கிறது.

மேலும் தாய் மொழியை முதல் மொழியாகக் கொண்டு தொடக்கக் கல்வி முழுவதையும் கற்று, இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்ற மாணவர்கள், ஆங்கில வழியில் மட்டுமே கல்வி பயின்ற மாணவர்களைக் காட்டிலும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றதாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அறிக்கை

( United Nations Development Programme ) குறிப்பிடுகிறது. தாய் மொழியில் வலிமையான அடித்தளத்தைக் கட்டி அமைப்பதே கூடுதல் மொழிகளைக் கற்க ஏதுவாக இருக்கும் என்பதே அதன் பொருள்.

தவறுகள் நேர்ந்துவிடும் என்ற அச்சம் இல்லாத காரணத்தால், தனது சொந்த மொழியில் தன்னை எளிதாக மாணவர்களால் வெளிப்படுத்திக் கொள்ள முடிகிறது. வகுப்பறையில் என்ன

விவாதிக்கப்படுகிறது, அவர்களிடம் என்ன கேட்கப்படுகிறது என்பதை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்கிறார்கள். மேலும் தங்களது எண்ணங்களை எளிதாக வெளிப்படுத்தி அவர்களுக்கு முன்பே தெரிந்திருப்பவைகளோடு புதிய கருத்துக்களைச் சேர்க்கின்றனர். உள்ளூர் மொழியில் மிக எளிதாகவும் திறமையோடும் மாணவர்களால் பேச முடியும் என்பதால், மாணவர்கள் எதைக் கற்றுக் கொண்டார்கள் என்பதையும், எந்தெந்தப் பகுதியில் அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவைப்படுகிறது என்பதையும் மிகத் துல்லியமாக ஆசிரியர்களால் மதிப்பிட முடிகிறது. தவிரவும், தங்களின் சொந்த மொழியில் குழந்தைகளின் கல்வி இருப்பதால், பெற்றோர்களும் தங்களது குழந்தைகளின் கல்வி குறித்துத் தீவிர அக்கறையும் கவனமும் கொள்கின்றனர் எனப் பல்வேறு களஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

## மூன்று மாயைகள்

"அந்நிய மொழி ஒன்றைக் கற்பதற்குச் சிறந்த வழி அதே அந்நிய மொழியைப் பயிற்சி மொழியாகப் பயன்படுத்துவதுதான் என்பது முதல் மாயை. அந்நிய மொழியைப் பயில அதை முன்னதாகவே கற்கத் தொடங்கி விட வேண்டும் என்பது இரண்டாவது மாயை. மூன்றாவது மாயை என்னவென்றால், அந்நிய மொழியைக் கற்பதற்குத் தாய்மொழி ஒரு தடையாக இருக்கும் என்பதாகும். தெளிவாகக் கூறினால் இத்தகைய மாயைகள் உண்மை என்பதைவிடப் பொய் என்றே குறிப்பிடலாம்." (UNESCO 2008 ) இது ஏதோ போகிற போக்கில் கூறும் கூற்று அல்ல. இது பல்வேறு பரிசோதனைகளுக்குப் பிறகு கண்டறிந்த பேருண்மையாகும். உலகிலுள்ள எல்லாக் கண்டங்களிலும் பரவலாக விரவிக் கிடக்கும் 12 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்தான் இந்த அறிவிப்புக்கு அடிப்படையாகும்.

## தாய்மொழியும் ஆங்கிலமும்

தாய்மொழி வழிக்கல்வி-தமிழ்வழிக் கல்வி-குறித்த மற்றுமோர் தவறான புரிதல், தமிழ் வழிக் கல்வி ஆங்கிலத்தை நிராகரிக்கிறது என்பதுதான். இது திட்டமிட்டுப் பரப்பப்படும் பொய்யுரையாகும். **ஆங்கிலவழிக் கல்வி வேறு, ஆங்கில மொழிக் கல்வி வேறு** என்பது மக்களிடம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ளக் கூடாது எனக் கூறுபவர்கள் யாரும் இல்லை. குறிப்பாகக் கூற வேண்டுமானால், இன்றைய சூழலில் ஆங்கிலத்தின் தேவையைத் தமிழ்வழிக் கல்வி நிறுவனங்கள் அழுத்தமாக வலியுறுத்துகின்றன.

மேலும் ஆங்கில வழியில் படிப்பதால் மட்டுமே, ஒரு மாணவன் அம்மொழியில் ஆளுமை பெறுகிறான் என்பதை மொழியியல் வல்லுநர்கள் ஏற்பதில்லை. உலகில் வளர்ந்த நாடுகளாகக் கருதப்படும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் தாய் மொழிதான் கல்வி மொழியாக இருக்கிறது. பொதுவாக ஐரோப்பாவிலுள்ள 20 தனித்தனி நாடுகளில் அவரவர் தாய் மொழி வழியேதான் எல்லாத்துறைக் கல்வியையும் பெறுகின்றனர்.

தென்னிந்தியாவைப் பொருத்தவரை கர்நாடகத்தில் 1994 95 ஆம் ஆண்டு முதலே ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் தாய் மொழி அல்லது மாநில மொழியான கன்னடம் மட்டுமே பயிற்சி மொழியாக இருக்கிறது. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டும் ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி வழங்கப்பட்டது. ஐந்தாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தத்தம் விருப்பம் போல ஆங்கிலம் அல்லது எந்தப் பயிற்று மொழிக்கும் மாற்றம் பெற்றுக் கொள்ளலாம். அரசின் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாத அனைத்து அங்கீகரிக்கப் படாத பள்ளிகள் மூடப்படும் என அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. கர்நாடகத்தைப் பொருத்தவரைக்கும் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், தாய்மொழிக் கல்வி எனும் நிலைப்பாடு மாறுவதே இல்லை. இது தமிழகத்துக்கு ஒரு படிப்பினையாகும்.

காந்தியடிகள், இரவீந்தரநாத் தாகூர், பாரதியார் போன்ற அறிஞர்கள் தாய் மொழிக் கல்வியைத்தான் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். "நான் சர்வாதிகாரியாக இருந்தால், தாய் மொழிக் கல்வியைத்தான் முதலில் நடைமுறைப் படுத்துவேன்" எனக் காந்தியடிகள் கூறியது குறிப்பிடத் தக்கது.

## தமிழ்வழிக் கல்வி கடந்து வந்த வரலாறு.

**19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்** மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஆட்சியினரும், கல்வியாளர்களும், கிருத்துவ சமய அமைப்பினரும் நம் நாட்டின் கல்வி நிலையை அறிந்து தாய்மொழி மூலம் கல்வி புகட்டப் பெற்றால் மக்களின் அறிவு விரிவாக வளரும் என எண்ணினர்.1830 ஆம் ஆண்டில்தான் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் பயிற்சி மொழி ஆக்கப்பட்டது. ஆனால் தமிழ் வழிக் கல்வி அப்பொழுது கட்டாயமாக்கப்படவில்லை.

**1835 ஆம் ஆண்டில்** மெக்காலே கல்வித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, ஆங்கிலவழிக் கல்வி மிக வேகமாகப் பரவத் தொடங்கியது. ஆனால், தாய்மொழி வழிக் கல்வி தடை செய்யப்

படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பிறகு 1938 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள், உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் தவிர, பிற பாடங்கள் அனைத்தும் தாய் மொழியிலேயே நடத்தப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்.

**இருபதாம் நூற்றாண்டில்** உயர்நிலைப்பள்ளி வரை பாடமொழி தமிழாக்கப்பட்ட பின்பே அறிவியல் பாட நூல்கள் பலவும் தமிழில் வெளியிடப் பட்டன. இந்தியா விடுதலை பெற்ற பிறகு, 1948 49 ஆம் ஆண்டில் டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையிலான கல்விக் குழு, உயர்கல்வியில் தாய்மொழி அல்லது மாநில மொழியே பயிற்சி மொழியாக அமைய வேண்டியதன் தேவையை வலியுறுத்தியது.1956 ஆம் ஆண்டு மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின், பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த ப.ஜீவானந்தம், பி.இராமமூர்த்தி போன்றோர் சட்டமன்றத்தில் தமிழ் வழிக் கல்வியை முழுமையாகச் செயல்படுத்துமாறு மிகவும் வலியுறுத்தினர்.

**இந்திய விடுதலைக்குப் பிறகு,** 1962ஆம் ஆண்டில் இடைநிலைக் கல்வியில் ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிக்கல்வி தொடங்கச் சில பள்ளிகளுக்கு இசைவு அளிக்கப் பட்டது. 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கோத்தாரி ஆணையம், பள்ளி மற்றும் கல்லூரிகளில் தாய் மொழியைப் பயிற்று மொழியாக்குமாறு வலியுறுத்தியது.

1975 ஆம் ஆண்டில் நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி சனநாயக நெறிமுறைகளுக்கு எதிராக கல்வி, மாநிலப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப் பட்டது. இக்கால கட்டத்தில் மெட்ரிக் பள்ளிகள் பரவலாக அதிகரித்தன. தமிழகத்தில் 1978 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப் பெற்று, தமிழ்வழியில் பாடங்கள் நடத்தப் படுகின்றன.

**1997 ஆம் ஆண்டில்** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைச்சர் தமிழ்க்குடிமகன். அவர்கள் பொறியியல் கல்லூரியில் தமிழ் வழிக் கல்வியைச் செயல் படுத்த முயன்றார்.ஆனால் அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழு ( AICTE ) அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பாக 100 தமிழறிஞர்கள் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை அறிவித்தனர். ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும். மற்றும் பொறி யியல், மருத்துவம், சட்டம் போன்ற அனைத்து உயர் கல்வித்

துறைகளிலும் தமிழ் வழிக் கல்வி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள் தமிழறிஞர்கள் சார்பாக வலியுறுத்தப் பட்டன. இக்கோரிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அரசு சார்பாக உறுதிமொழி அளிக்கப் பட்டது. இதற்காக நீதிபதி மோகன் குழுவும் அமைக்கப் பட்டது. அக்குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொண்டு தி.மு.க. அரசு மழலையர் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் திட்டத்தை அறிவித்தது. ஆனால் தமிழக அரசின் திட்டத்தை எதிர்த்து மெட்ரிக் பள்ளிகளின் சார்பாக. உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இறுதியில் தமிழக அரசின் ஆணைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டதுதான் பெரும் சோகம்.

1990 காலகட்டத்தில் மோலோங்கிய தாராளமயம்-தனியார்மயம் = உலகமயம் இந்தியாவில் தீவிரமான மாற்றங்களைக் கல்வியில் உண்டாக்கியது. அதற்கு வாய்ப்பாக "காட்" ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்து இட்டதன் காரணமாக மக்கள்நலத் திட்டங்களுக்கான அரசின் பங்களிப்புத் தொடர்ந்து குறைக்கப் பட்டது. இது கல்வியில் பாரதூரமான எதிர் விளைவுகளை உண்டாக்கியது. இன்று இந்தியாவில் கல்வியில் தனியார் மூலதனம் குவிந்துள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. விளைவாகக் கல்வியில் வணிகமயம் கொடிகட்டிப் பறக்கிறது. இதற்குப் பெரிதும் பலியானது தமிழ்வழிக் கல்வியே!

## கவனிக்கப்படாத தாய்த்தமிழ்ப் பள்ளிகள்

**பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மகள் இறை. பொற்கொடி** அவர்களால் தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டில் முதன் முதலாகத் திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளி, தனிப்பட்ட முறையில் சென்னை மேடவாக்கத்தில் தொடங்கப் பட்டது. அதன் பிறகு அம்பத்தூரில் **தோழர் தியாகு** அவர்களால் 1993 ஆம் ஆண்டில் தாய்த் தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி தொடங்கப் பட்டது. பிறகு ஆங்காங்கு தமிழ் ஆர்வலர்களால் தமிழகம் எங்கும் பரவலாக ஏறக்குறைய 100 பள்ளிகள் பல்வேறு நிலைகளில் தொடங்கப் பட்டன. ஆனால், பொருளாதாரத் தட்டுப்பாடு , அரசின் ஆதரவின்மை போன்ற பல்வேறு சிக்கல்களால் பல பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டன. **இப்பொழுது 18 தாய்த் தமிழ்ப் பள்ளிகள்** மட்டுமே தட்டுத்தடுமாறி நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் மழலையர் பள்ளி மற்றும்



திருப்பூர் சிங்கனூர் தாய்த்தமிழ் உயர்நிலைப்பள்ளி

ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கற்பிக்கக் கூடிய பள்ளிகளாக அவை உள்ளன. **திண்டிவனத்தில் பேராசிரியர் பிரபா கல்விமணி** அவர்களின் முன்னெடுப்பில் உருவாக்கபட்ட தாய்த்தமிழ் நடுநிலைப் பள்ளி (எட்டாம் வகுப்பு வரை) மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. **திருப்பூர் மாவட்டம் சிங்கனூர்** எனும் பகுதியில் பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கக் கூடிய ஒரே ஒரு தாய்த்தமிழ் உயர்நிலைப் பள்ளி அனைத்துக் கட்டமைப்புகளுடனும் சிறப்பாக நடத்தி வருகிறார் அதன் **தாளாளர் எழில் சுப்ரமணியம்** அவர்கள். திருப்பூரில மட்டும் மூன்று தாய்த் தமிழ்ப் பள்ளிகள் செயல்பட்டு வருவது பெரும் சிறப்பாகும். திருப்பூர் வள்ளலார் நகரில் **தாளாளர் தங்கராசு** அவர்கள் தாய்த்தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியை 1995 ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாக நடத்தி வருகிறார். திருப்பூரிலுள்ள மூன்றாவது தாய்த்தமிழ்த் தொடக்கப் பள்ளியை **மருத்துவர் முத்துசாமி** அவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார்.

## தாய்த்தமிழ்ப் பள்ளிகளின் சவால்கள்

தாய்த்தமிழ்ப் பள்ளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் நெஞ்சை உலுக்கக் கூடியவை. குறிப்பாகத் தாய்த்தமிழ்ப் பள்ளிகள், நகர ஊரமைப்புத் துறையின் அனுமதியைப் பெறுவதுதான் பெரும் சவாலாக உள்ளது. நகர ஊரமைப்புத் துறையின் அனுமதி பெற்ற பிறகுதான் கல்வித்துறையின் ஏற்பிசைவு பள்ளிகளுக்குக் கிடைக்கும். பெரிய விளையாட்டு மைதானம், சுற்றுச்சுவர், விரிவான வகுப்பறைகள் போன்ற நிபந்தனைகளை நிறைவேற்றப் பெரும்தொகை தேவைப்படுகிறது. ஆங்கில வழிப் பள்ளிகள் என்றால், நம்ப முடியாத அளவுக்கு மிகப்பெரும் தொகையைக் கட்டணம் / நன்கொடை எனும் பெயர்களில் மாணவர்களிடமிருந்து வசூலித்து விடுகிறார்கள். எதை வேண்டுமானாலும் அடமானம் வைத்துப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கல்விக்காகப் பணத்தை ஆங்கிலவழிப் பள்ளிகளுக்குத் தர ஆயத்தமாக உள்ளனர். அதை வைத்து ஆங்கில வழிப் பள்ளிகள் எத்தகைய தேவையை வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

ஆனால், தாய்த்தமிழ்ப் பள்ளிகளின் கட்டண நிலையோ மிகவும் பரிதாபகரமானது. சில தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் மிகமிகச் சொற்பான கட்டணம் மட்டுமே மாணவர்களிடமிருந்து பெறப்படுகிறது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்கள் அதிலும் முதல் தலைமுறையாகப் பள்ளிக்கு வரும் மாணவர்கள்தான் தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்றனர். அவர்களிடம் நன்கொடை பெறுவதற்கான வாய்ப்பே இல்லை. எனவே பள்ளிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. அதிலும் மற்றுமோர்

அநியாயம் நடக்கிறது. ஆங்கிலவழிக் கல்வி நிறுவனங்களில் ஒரு மாணவனிடமிருந்து பெறப்படும் கட்டணத்தை விட ஏறக்குறைய 20% முதல் 30% வரை குறைவான கட்டணத்தைத்தான் தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் வசூலிக்க வேண்டும் என அரசே நிர்ணயித்திருப்பது கொடுமையிலும் கொடுமை. எனவே இதை ஈடுகட்டத் தாய்த்தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழக அரசு உதவித் தொகை வழங்க வேண்டும் எனும் கோரிக்கை எழுந்துள்ளது. கல்வித் துறை மூலம் இப்படிப்பட்ட உதவித் தொகை தர முடியாது என்பதால், தமிழ் வளர்ச்சித் துறை மூலம் இதை நிறைவேற்றித் தர வேண்டும் எனும் பரிந்துரை முன்வைக்கப் படுகிறது. தமிழக அரசு இதைக் கருத்தில் கொண்டு தமிழைக் காக்க உதவிட வேண்டும்.

மேலும், ஏறக்குறைய 17 வகையான இலவசப் பொருள்கள் அரசுப் பள்ளிகளுக்குத் தமிழக அரசால் வழங்கப் படுகிறது. ஆனால் தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு ஒரு சில பொருள்கள் மட்டுமே அரசால் வழங்கப் படுகிறது. அதிலும் குறிப்பாகப் பெரும்பாலும் கிராமப் புறங்களில் அமைந்துள்ள தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் சத்துணவு வழங்கப் படாதது பெரும் பின்னடைவாக உள்ளது. எனவே ஏழ்மை நிலையில் வாடும் தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்குத் தமிழக அரசு சிறப்புச் சலுகை வழங்கி அப்பள்ளி மாணாக்கர்களின் பசிப்பிணியைப் போக்கிட முன்வரவேண்டும்.

இவை மட்டுமல்ல. தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் கற்ற மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு வழங்கும் சிறப்பான திட்டம் தமிழக அரசால் வழங்கப் படுகிறது. ஆனால் முற்றிலும் அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் கற்கும் மாணாக்கர்களுக்கு மட்டும் அந்த ஒதுக்கீடு வழங்கப் படுவதால், தாய்த்தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கு அச்சலுகை இல்லை என்பது வருத்தத்திற்குரியது. அதே போல் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் மூலம் தரப்படும் ரூ.1000 தமிழிலேயே கல்வி கற்கும் தாய்த் தமிழ்ப்பள்ளி மாணவிகளுக்கு வழங்கப் படுவதில்லை என்பதும் வருத்தத்திற்குரியது. தமிழின் தலைமைப் பண்பை உயர்த்திப் பிடிக்கும் தமிழக அரசு, இத்தகைய சிக்கல்களிலிருந்து தாய்த் தமிழ்ப் பள்ளிகளை மீட்கச் சிறப்புச் சலுகைகளை அறிவிக்க வேண்டும்.


தாய்த்தமிழ் நடுநிலைப் பள்ளி, ரோசணை, திண்டிவனம்

பொருளாதாரம் அதிகம் தேவைப்படாத உதவிகளைத்

தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்குத் தமிழக அரசு உடனடியாகச் செய்யலாமே? எடுத்துக் காட்டாக, அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அவ்வப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தாய்த்தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களை அத்தகைய பயிற்சியில் பங்கேற்க அழைப்பதில்லை. மேலும், கல்வி தொடர்பான இதழ்கள், அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் இலவசமாக வழங்கப் படுகிறது. அவற்றைத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கும் வழங்கலாம்.

தாய்த்தமிழ்ப் பள்ளிகளை அரசு உதவி பெறும் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. அரசு அது பற்றிய கொள்கை முடிவை எடுக்க வேண்டும்.

அதற்கிடையில் வருமானம் மிக்க தனியார் பள்ளிகளைப் போலத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளைக் கருதாமல், தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கென சிறப்புத் திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். அடிப்படைக் கட்டுமானங்களை நிறுவ அரசு மானியம் வழங்குவது உதவிகரமாக இருக்கும். ஏற்பிசைவு வழங்குவதில் சலுகை தரலாம். குறிப்பாகத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை ஏதிலியாகக் கருதாமல், உரிய முக்கியத்துவம் அளித்துத் தமிழக அரசு பேண வேண்டும் என்பது தமிழ் ஆர்வலர்களின் பணிவான வேண்டுகோளாக உள்ளது.

### சிக்கல்களுக்கான தீர்வுகள்

எல்லாப் பெற்றோர்களும் தங்களது பிள்ளையின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டுமானால், அவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். இது மிகவும் இயல்பானது, இதைத் தவறு என யாரும் குறை சொல்ல முடியாது. இதன் காரணமாகத்தான் எதை விற்றாவது தங்களது பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைத் தரப் பெற்றோர்கள் ஆயத்தமாக உள்ளனர். எனவே வேலை உத்தரவாதம்தான் வாழ்க்கையில் அவர்களின் முதல் தேர்வாக இருக்கும். இந்த நம்பிக்கையை அரசு வழங்கினால், மக்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைவார்கள்.

எனவே தமிழ் வழியில் கற்றவர்களுக்கு அரசுப்பணியில் தற்பொழுது வழங்கப்படும் 20% இடஒதுக்கீட்டைக் குறைந்தபட்சம் 80% என உயர்த்த வேண்டும்.படிப்படியாக இதைத் தனியார் நிறுவனங்களிலும் செயல்படுத்தும் பற்றுறுதி அரசுக்குத் தேவை. இதற்கு உதவிடத் **தமிழ் மட்டுமே ஆட்சி மொழி** எனும் நிலைபாட்டை அரசு உருவாக்க வேண்டும். இந்த முயற்சியை முதலில் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்க வேண்டும்.

பொதுவாகத் தமிழை மொழிப் பாடமாக, பயிற்சி மொழியாக ஆக்க அரசு முன்முயற்சி எடுத்தாலும், தமிழ்வழிப் பயின்றோருக்கு

வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கினாலும் கல்வி வணிகர்கள் அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை செல்வது வழக்கமாக உள்ளது. எனவே இப்படிப்பட்ட சனநாயக விரோதமான, தமிழின் இறையாண்மைக்கு எதிரான சட்ட முயற்சிகளை முறியடிக்கத் தமிழகத்திலும், இந்தியாவிலும் மிகச் சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்துச் சட்டப் போராட்டத்தை அர்ப்பணிப்புடன் தொடர வேண்டும். தடைகளைத் தகர்க்க வேண்டும்.

சட்டப் போராட்டத்தின் மூலம் சமத்துவக் கல்வியை வென்றது தமிழ்நாடு என்பதை இத்தருணத்தில் நினைவுகூர வேண்டும்.

பெற்றோர்களின் அடுத்த எதிர்பார்ப்பு, தங்களது பிள்ளைகள் படிக்கக் கூடிய கல்வி நிறுவனத்தில் போதிய ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்பது. பெரும்பாலும் தமிழ்வழிக் கல்வி உள்ள அரசுப் பள்ளிகளில் ஆயிரக் கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் பல ஆண்டுகளாகக் காலியாக உள்ளன. அரசு இதற்கு முன்னுரிமை தந்து ஆசிரியர் பற்றாக் குறையைப் போர்க்கால அடிப்படையில் சரிசெய்ய வேண்டும்.

கழிப்பறை கூட இல்லாத, அதற்கான தூய்மைப் பணியாளர்கள் இல்லாத அரசுப்பள்ளியில் தனது பெண் குழந்தையை எந்தப் பெற்றோர்தான் படிக்க வைப்பார்கள்? தவிரவும், இடிந்து விழும் நிலையில் உள்ள தமிழ்வழிப் பள்ளிக்கூடத்தைப் பெற்றோர்கள் விரும்புவார்களா? இவையெல்லாம் அரசுப் பள்ளியும், தமிழ் வழிக் கல்வியும் வரவேற்புப் பெறாததற்கு முக்கியக் காரணங்களாக உள்ளன. இவற்றை அரசுதான் மேம்படுத்த வேண்டும்.

அடுத்து, ஆங்கிலத்தின் மீது மக்களுக்குள்ள அளவற்ற மோகம் என்பது நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நிலவிய காலனிய ஆட்சியின் மிகப்பெரும் சாபக்கேடாகும். இதை மாற்றி அமைப்பது அவ்வளவு எளிதானதல்ல! ஆங்கிலத்தில் படித்தால்தான் தனது பிள்ளைக்கு வேலை கிடைக்கும் என்றும், ஆங்கில அறிவு மட்டுந்தான் தனது பிள்ளைக்குச் சமுதாயத்தில் பெரும் கௌரவத்தைக் கொடுக்கும் எனவும் பெற்றோர்கள் நம்புகின்றனர். இதைப் படிப்படியாகத்தான் மாற்ற வேண்டும்.

அதன் முதற்படியாக, அரசுப் பள்ளிகளில் ஆங்கிலப் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். பள்ளிகளில் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும். இதற்குப் பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்பின் உதவியை அரசு நாடலாம்.

தவிரவும் ஆங்கில வகுப்புகளை நடத்த ஆங்கிலப் பட்டதாரிகளைத்தான் பயன்படுத்த வேண்டும். அத்துடன் ஆங்கிலவழிக் கல்வி மட்டுமே ஆங்கிலத்தில் பேச, எழுத உதவியாக

இருக்கும் எனப் பெற்றோரிடம் நிலவும் தவறான கருத்தைப் போக்க வேண்டும். **ஆங்கிலத்தைக் கற்பதற்கும், ஆங்கில வழியில் கற்பதற்கும் வேறுபாடு உள்ளதைத் தெளிவு படுத்த வேண்டும்.** ஏனெனில் தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்திப் பேசுபவர்கள், ஆங்கிலத்திற்கு எதிரிகள் எனவும், ஆங்கிலமே வேண்டாம் எனப் பிதற்றித் திரிபவர்கள் எனவும் திட்டமிட்டுச் சிலசுயநலமிகள் பொய்ப் பரப்புரை செய்து வருவதை அம்பலப் படுத்த வேண்டும்.

இது மட்டுமல்ல, **தமிழகத்தில் தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கூடப் பயிலாமல், உயர் கல்வி வரை செல்லக் கூடிய கொடுமை** எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு இங்கு வளர்ந்துள்ளது. இதைத் தவிர்க்கப் பள்ளிக் கல்வியை முடிக்கும்வரை தமிழை ஒரு மொழிப் பாடமாக அனைத்துப் பள்ளி மாணாக்கரும் கட்டாயமாகப் பயிலவேண்டும் எனும் சட்டம் இயற்றப்பட வேண்டும். அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து வகையான பள்ளிகளிலும் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயம் கற்பிக்க வேண்டும் எனும் அரசாணையைப் பிறப்பித்தது பெரிதும் போற்றத் தக்கதாகும். ஆனால், இது சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கத் தமிழறிஞர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு உடனடியாக அமைப்பது நல்லது.

மிக முக்கியமாக **ஆங்கில வழி மழலையர் பள்ளிகளைத் தனியார் நடத்த எக்காரணம் கொண்டும் அரசு அனுமதிக்கக் கூடாது.** அதே போல் குறைந்த அளவு ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வியை அரசு தடை செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி தொடங்குவதை அரசு தவிர்க்க வேண்டும். ஆங்கிலத்தை மொழிப்பாடமாகக் கற்பிப்பதை எதிர்ப்போர் யாருமில்லை என்பதை இத்தருணத்தில் மனதிற் கொள்ள வேண்டும்.

அதே போல் உயர் கல்வியிலும் தமிழ் வழிக் கல்வி புறக்கணிக்கப் படுகிறது. சான்றாக, சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் தமிழ் வழியில் பொறியியல் வகுப்புகள் நடத்தப் படுகின்றன. அங்கு ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கு அனுபவம் மிக்க



தாய்த் தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி,
வள்ளலார் நகர் கிழக்கு, திருப்பூர்.

திறமையான பேராசிரியர்கள் பாடம் நடத்துகின்றனர். அவர்களுக்குத் தாமான பாடநூல்கள் வழங்கப் படுகின்றன. ஆனால் அதே வளாகத்திலுள்ள தமிழ் வழிப் பொறியியல் வகுப்புகளை நடத்த அனுபவம் மிக்க பேராசிரியர்கள் வருவதில்லை. மேலும் தமிழில் போதிய அளவு பாடநூல்களும் இல்லை. அதிக மதிப்பெண் பெற்ற திறமை மிக்க மாணாக்கர்கள், தமிழ் மீதுள்ள ஆர்வத்தினால் தமிழ்வழிப் பொறியியலைத் தேர்வு செய்து படிக்க வருகின்றனர். ஆனால் அதற்காகவே அவர்களைத் தண்டிப்பது ஏற்கத் தக்கதல்ல! கல்லூரிகளில் தமிழ் வழிப் பொறியியல் 2010 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டு, 13 ஆண்டுகள் கழிந்த பிறகும், குறைகள் களையப்படாதது வருத்தத்திற்கு உரியது. இந்த அணுகுமுறை உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இறுதியாக, இன்றைய நிலையில் கல்வியின் அடிப்படைச் சிக்கல்களாகவுள்ள வணிகமயம் / ஒற்றைமயம் ஆகியவை தமிழ்வழிக் கல்வியை முற்றிலும் நாசப்படுத்தி வருகின்றன. இவற்றைத் தவிர்க்கக் **கல்வி, ஒத்திசைவுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் மாற்றப்பட வேண்டும்**. கல்வியின் இறையாண்மையைக் காத்திட இது மிகமிக முக்கியமானது. மேலும் ஆங்கிலவழிக் கல்வி நிறுவனங்கள் மேட்டிமை மிக்கதாகக் கருதப்படும் நிலையில், தமிழ்வழிக் கல்வி நிறுவனங்கள் ஏழ்மை மிக்கதாக மாறி வருவது கல்வியில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கும். இது மேல்/ கீழ் எனும் சாதியச் சமூகத்தின் பிரதிபலிப்பாக மாறிவிடும் ஆபத்து உள்ளது. இது சனநாயக விழுமியங்களுக்கு முற்றிலும் எதிரானதாகும். எனவே இதற்கு மாற்றாக அனைவரும் சேர்ந்து பயிலும் பொதுப்பள்ளி முறையும், அண்மைப் பள்ளி முறையும் ( Neighbourhood Schools ) நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். கல்வியே, விடுதலைக்கான சாவி என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட்டால் இன்னல்கள் தீரும்.

❖❖❖

# பிரதேச நவீனத்துவமும் தமிழ் சனாதன உருத்திரிபும்

**இந்திரன்**

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருந்து புறப்பட்ட நவீனத்துவம் என்பது சர்வதேச அளவில் மாபெரும் பண்பாட்டுப் பாதிப்புகளை உருவாக்கியது.

மனிதனின் அன்றாட வாழ்க்கையை பகுத்தறிவு ரீதியாக அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு நவீனத்துவம் பிரதான பங்கு வகித்தது.

மேற்கிலிருந்து வீசிய நவீனத்துவத்தின் காற்று இந்தியாவுக்குள் வீசத் தொடங்குவதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்தது பிரிட்டிஷ் பிரெஞ்சு காலனித்துவ ஆட்சிகளாகும்.

இந்தியாவுக்குள் புழங்கிய சமூக மதிப்பீடுகள், சமூக நடவடிக்கைகள், மதம் சார்ந்த நம்பிக்கைகள் என்று இந்தியாவின் பண்பாட்டு முகம் மாபெரும் மாற்றங்களைஅடைந்தது.

இந்தியாவின் வரலாறுகளை எழுதத் தொடங்கிய பிரிட்டிஷ்காரர்கள் தாங்கள் நுழைந்த பிறகுதான் வரலாறு என்பதே எழுதப்படுவதாகக் கருத வைத்தார்கள். பிரிட்டிஷ்காரர்கள் நுழைவதற்கு முன்னால் இருந்த கலைகள் கைவினைகள் ஆகியவற்றை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தவை ( prehistoric ) என்று இந்தியர்களை நம்ப வைத்தார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவிலேயே முதல் முதலாகத் தொடங்கிய ஓவிய சிற்ப பள்ளியை "மதராஸ் கலை கைவினைப்பள்ளி" என்று பெயர் சூட்டினார்கள். இந்தியாவின் கலை மரபை, **நுண்கலை** ( Fine art), **கைவினை** ( Craft ) என்று இரண்டாகப் பிரித்தார்கள். இதற்கு முன்னால் இந்தியாவில் கைவினை மரபுதான் இந்த மண்ணின் கலை மரபாக இருந்தது.

பிரிட்டிஷ்காரர்கள் நிறுவிய ஓவிய கலைப் பள்ளிகளில் இந்தியாவில் முன்னரே பழக்கத்தில் இருந்த கலைப் படைப்பு மரபுகளை **கைவினை** மரபுகள் என்று சொன்னார்கள். பிரிட்டனில் இருந்து இந்திய மண்ணிற்கு கொண்டுவரப்பட்டு ராயல் ஸ்கூல் ஆஃப் ஆர்ட் சொல்லிக் கொடுத்த ஓவியர் சிற்பக் கலை நுட்பங்களைப் பயன்படுத்திச் செய்வதற்கு **நுண்கலை** என்று பெயர் கொடுத்தார்கள்.

இப்படி இரண்டாகப் பிரித்தது மட்டுமல்லாமல், நுண் கலை என்பதை மேலே வைத்து , கைவினை மரபு என்பதைக் கீழே வைத்தார்கள். இதன் காரணமாக தமிழ்நாட்டுக்குள் இருந்த கலையிலும் இலக்கியத்திலும் மேலைநாட்டில் இருந்து வந்தவை அனைத்தையும் உயர்வானவை என்றும், இந்த மண்ணிற்கு உரித்தான பண்புக் கூறுகள் இரண்டாம் தரமானவை என்றும் மக்கள் நம்பத் தொடங்கினார்கள்.

இன்றைய நாளில் நாம் சந்திக்கும் நரகமயமாதலின் ஆரம்பப் புள்ளியாக நவீனத்துவம் என்பது இந்தியாவிலிருந்து பல்வேறு பிரதேசங்களில் இருந்த பண்பாட்டுகளுக்குள்ளும் ஊடுருவி மேலை மயப்படுதலே நாகரிக மயப்படுத்துதல் என்று நம்ப வைத்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் பல்வேறு பிரதேசங்களும் பிரிட்டிஷ்காரர்களின் புதிய புதிய பண்பாட்டு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன.

ராஜாராம் மோகன் ராய், மகாத்மா ஃபுலே போன்ற பல்வேறு சீர்திருத்தக்காரர்கள் இந்திய மண்ணில் இருந்த பல்வேறு சரியை கிரியைகளை பகுத்தறிவின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து அவற்றை மாற்றி அமைக்க முயன்றார்கள். ஓர் எடுத்துக்காட்டாக கணவன் இறந்தவுடன் அவனைச் சிதையில் ஏற்றிய நெருப்பில் விதவையான அவனது மனைவியும் விழுந்து தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள வேண்டும் என்கிற சடங்கு கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. இந்தப் பழக்கம் மாபெரும் உயிர்க் கொலைக்கு அழைத்துச் செல்கிறது என்ற காரணத்தினால் இந்தியாவுக்குள் நுழைந்த நவீன சிந்தனையின் பெயரால் பிரிட்டிஷ் காரர்களால் சட்டத்தின் மூலமாக நிறுத்தப்பட்டது.

உலகம் முழுவதும் ஒரே மாதிரியான தீவிரத்துடன் சுதந்திரம் சமத்துவம்-சகோதரத்துவம் ஆகியவை விவாதிக்கப்பட்டன.

இந்தியாவின் தெற்குப் பகுதியில் இருந்த தொன்மையான பண்பாட்டுக்குச் சொந்தமான தமிழ்ப் பண்பாட்டிலும் கூடப் பல்வேறு விவாத தீப்பொறிகளை நவீனத்துவ காற்று பலமாக வீசி பகுத்தறிவு ரீதியான விவாதங்களைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

பிரிட்டிஷ்காரர்கள் மெக்காலே கல்வி முறையின் மூலமாகவும், மதராஸ் ராஜதானியில் முதல் முதலாக நிறுவிய கலை மற்றும் கைவினைப் பள்ளி போன்றவற்றின் மூலமாகவும் மாபெரும் பண்பாட்டு மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள்.

தமிழின் தொன்மையான திருக்குறள் போன்ற பல்வேறு நூல்கள் சுவடிகளிலிருந்து அச்சு வாகனம் ஏறின. சுவடிகளும், கல்வி அறிவும் மேட்டுக்குடி மக்களின் கையில் இருந்த ஒரு காலகட்டத்தில் அச்சுப் புத்தகங்கள் அறிவைச் சகலருக்கும் கிடைக்கும் வழியில்

பரவலாக்கின.

இந்தியா முழுவதும் பரவிய கிறித்துவ மதம் கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினருக்குக் கிடைக்காமல் இருக்குமாறு செய்யப்பட்ட ஏற்பாட்டை முறியடித்தது. இந்து மதத்தில் இருந்து கிருத்துவ மதத்துக்கு மாறிய அனைவருக்கும் கல்வி அறிவு புகட்டப்பட்டதின் காரணமாக தமிழ்நாட்டின்பல்வேறு கலைகளும் இலக்கியங்களும் மாபெரும் சவால்களைச் சந்தித்தன.

தமிழகத்தில் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சி, தந்தை பெரியாரின் தலைமையில் வளர்ந்த திராவிடக் கட்சி ஆகியவை நவீனத்துவம் முன்னெடுத்த பகுத்தறிவின் பெயரால் வாதுக்கு அழைத்தன.

இந்தக் காலகட்டத்தில்தான் இந்தியா முழுவதுமிருந்த எந்த பல்வேறு மொழி சார்ந்த மக்களும் அவரவர்களின் பண்பாட்டு அடையாளங்களுக்கு அதிகமான சேதம் வந்து விடாதபடிக்கு மேலை நாகரிகத்தின் நவீனத்துவ சிந்தனையை அவரவர்களுக்கு ஏற்ற மாதிரி வடிவமைத்துக் கொண்டார்கள்.

எனவே உலகம் முழுவதும் பரவி இருந்த சர்வதேச நவீன சிந்தனை என்பது இந்தியாவுக்குள் நுழைந்த போது இந்தியாவின் ஒவ்வொரு பிரதேசமும் அந்த நவீனச் சிந்தனையை அதற்கு ஏற்ற மாதிரி மாற்றி வடிவமைத்துக் கொண்டது.

எனவேதான் உலகம் முழுவதும் ஒரே மாதிரியாக இருந்த நவீன சிந்தனை, இந்தியாவில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஏற்ற மாதிரியான ஒரு நவீனத்துவச் சிந்தனையாக மாறியது. இதைத்தான் நான் **"பிரதேச நவீனத்துவம்"** ( Regional Modernism) என்று குறிப்பிடுகிறேன்.

பிரதேச நவீனத்தும் என்பது தமிழ்நாட்டுக்குள் ஒரு விந்தையான வடிவத்தை எடுத்தது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவம் எப்படி நுழைந்தது என்பதைக் கொஞ்சம் ஆராயலாம்.

மேலைநாட்டில் இருந்த டி.எஸ். எலியட், எஸ்ரா பவுண்ட் போன்ற கவிஞர்களும், அறிவுஜீவிகளும் இந்தியாவின் தத்துவ சிந்தனையின் மீது சற்று ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் கவிதைகளிலும் இலக்கிய படைப்புகளிலும் நவீனத்துவம் என்ற பெயரில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

எடுத்துக்காட்டாக, ஓசை ஒழுங்கோடு கூடிய, இலக்கணச் சுத்தமான, மரபு கவிதைகள் மிகவும் பிற்போக்கானவை என்று தமிழ்நாட்டின் நவீனவாதிகளாக தன்னைச் சொல்லிக் கொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

இலக்கியத்தில், குறிப்பாகக் கவிதையில் அமெரிக்காவின் வால்ட்

விட்மன் போல தாங்கள் எழுதுவதாகச் சொல்லி வசன கவிதை என்பதை முன் வைத்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சி வைத்த சீர்திருத்தச் சிந்தனைகளையும், திராவிடர் கழகம் முன்வைத்த அரசியல் கருத்துக்களையும் அரசியல் தளத்தில் எதிர்கொள்ள முடியாத உயர்சாதி இந்துக்களான பிராமணர்கள் இலக்கியக் களத்தில் வேறு விதமாக எதிர்கொண்டார்கள்.

நா. பிச்சமூர்த்தி, சி .சு.செல்லப்பா, க. நா. சு போன்ற பலரும் "எழுத்து" போன்ற இலக்கிய இதழ்களின் மூலமாக ‘‘தமிழ் மரபார்ந்த இலக்கியங்கள் அவற்றின் ஓசை ஒழுங்கின் காரணமாகக் கலைத்தன்மை குறைந்து விடுகிறது’’ என்று விமர்சனம் செய்தார்கள்.

திராவிடச் சிந்தனையாளர்கள், மற்றும் அயோத்திதாசர் பண்டிதர் போன்றவர்கள் தமிழன் என்ற அடையாளத்தை அரசியல் காரணத்திற்காக மகத்துவப்படுத்திக் கட்டமைத்தார்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெரும் காப்பியங்களை மகத்துவப்படுத்தி கம்பராமாயணம் பெரியபுராணம் போன்றவற்றை பின்னுக்குத் தள்ளினார்கள். திராவிட, தலித் சிந்தனையாளர்கள் தமிழ்ப் பாரம்பரியத்தை மகத்துவப்படுத்துவதை ஓர் அரசியல் செயல் திட்டமாக மேற்கொண்டார்கள். இத்தகைய போக்கினால் இந்து மதம் முன்வைத்த சனாதன சிந்தனைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இந்தப் போக்கிலிருந்து பொது சிந்தனையை விடுவிப்பதற்குப் பிற்போக்கு சக்திகள் நவீனத்துவம் என்பதைக் கையில் எடுத்துக் கொண்டன.

புதுக்கவிதை என்பதின் பெயரால் ஒரு நவீனப் போக்கு போல முன்வைத்தவர்கள், வேதாந்த விசாரங்களையே தங்களுடைய, நவீனக் கவிதைகளாக எழுதினார்கள். முதுகெலும்பில்லாத தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் இதற்கு ஈடு கொடுக்க முடியாமல் "கலை, கலைக்காக " எனும் கருத்தை ஏற்கத் தொடங்கி விட்டார்கள்.

ஆனால் தமிழ் மரபின்படி ஆதி அழகியல்வாதியான தொல்காப்பியர் " இழும் எனும் மொழியால் விழுமியது நுவலல் " எனும் கருத்தைத்தான் முன் வைத்திருந்தார்.

கவிதையில், ஓவியத்தில் கலைத்தன்மைதான் பிரதானமானதே தவிர, அதில் அரசியல் கலப்பது என்பது கலைத் தன்மையை அழித்துவிடும் என்கிற கருத்து முன்வைக்கப்பட்டது. கவிதைகள் அரசியல் கருத்துக்களைப் பேசத் தொடங்கினால் அது தன்னுடைய கலை தன்மையை இழந்து விடுகிறது என்று பேசப்பட்டது.

இவ்வாறாகத் தமிழ்நாட்டில் திரண்டு எழுந்த பகுத்தறிவு சிந்தனை இயக்கமான திராவிடச் சிந்தனையை நவீனத்தின் பெயரால் பிராமணர்கள் எதிர்கொண்டார்கள்.

எனவே தமிழ் இலக்கியப் பரப்பில் நவீனத்துவம் தமிழ் மண்ணில் இருந்த பண்பாட்டு அடையாளங்களுக்கு ஏற்ப திரிபுகளை அடைந்து தமிழ்நாட்டுக்கு மட்டுமே பிரத்தியேகமான ஒரு நவீனத்துவம் இங்கே கட்டமைக்கப்பட்டது.

இதனைத் தான் நான் **“பிரதேச நவீனத்துவம்”** என்று குறிப்பிடுகிறேன்.

இதற்கு முன்னால் 1930,40-களில் பிரிட்டிஷ்காரர்களும் பிரெஞ்சுகாரர்களும் தங்களுடைய காலனித்துவ பலத்தைக் கூட்டுவதற்காக பல்வேறு சமூகப் பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். சமூக முன்னேற்றம் என்பதின் பெயரால் பிரிட்டிஷ்காரர்கள் இந்திய மண்ணில் இருந்த பல்வேறு பிரிட்டிஷ் எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்கத் தொடங்கினார்கள். நவீனத்துவம் என்பது மனிதகுல முன்னேற்றத்திற்கானது என்பது முன்வைக்கப்பட்ட போது,

இந்தியாவிலிருந்த பல்வேறு பிரதேசங்களிலும் நவீனத்துவம் என்பது மேல்நாட்டுத்தனம் என்று புரிந்து கொள்ளப்பட்டது.

மேல்நாட்டவர்களைப் போல உடை உடுத்துவது, மேல் நாட்டவர்கள் போன்ற உணவுப் பழக்கத்தை மேற்கொள்வது போன்ற போக்குகள் முன்னேற்றத்தோடு தொடர்பு படுத்தி புரிந்து கொள்ளப்பட்டன.

இவற்றுக்கு மாற்று கொண்டு வருகிறோம் என்ற பெயரில் இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களில் அவரவர்களின் பண்பாட்டுக் கூறுகளுக்கு மறுபடி திரும்பிச் செல்லும் ஒரு போக்கும் உருவா யிற்று.

திராவிடச் சிந்தனையாளர்கள் சேர சோழ பாண்டிய மன்னர்களை மகத்துவப் படுத்தத் தொடங்கினார்கள். இதே நேரத்தில் பழமையை மகத்துவப்படுத்துகிறோம் என்ற பெயரில் இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களில் சனாதனம் மேலும் பலமாக மறு கட்டமைப்பு செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக மகாத்மா காந்தி அகிம்சை என்பதைத் தனது தேச விடுதலைக்கான ஆயுதமாக ஏந்திய அதே நேரத்தில், தன்னுடைய சொந்தப் பங்காளி சகோதரர்களையே போரில் கொல்வதில் எவ்விதத் தவறும் இல்லை என்று வன்முறைக்கு வாதாடும் பகவத் கீதையையும் தனது ஆதார நூலாகக் கைக்கொண்டார் என்பதைக் கவனிக்க வேண்டும். இதனை வன்மையாக எதிர்கொண்ட டாக்டர் பி ஆர் அம்பேத்கர் போன்றவர்கள்தான் சர்வதேச அளவில் முன்னெடுத்து வைக்கப்பட்ட நவீன சிந்தனைகளை பேசினார்கள் என்பதை நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். இதனால்தான் இன்றைக்கு டாக்டர் பி ஆர் அம்பேத்கர் நிஜமான ஒரு நவீன இந்தியாவைக்

கனவு கண்ட நவீன இந்தியாவின் சிற்பி என்று பாராட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டில் தோன்றிய நவீனத்துவம் என்பது சர்வதேச அளவில் கொண்டுவரப்பட்ட உலகத் தழுவிய ஒரு நவீனச் சிந்தனையின் திருத்தப்பட்ட ஒரு வடிவம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய போக்கினைத்தான் பிரதேச நவீனத்துவம் என்று குறிப்பிடுகிறேன்.

❖❖❖

# நாவல் எழுதுதல்

**சுப்ரபாரதிமணியன்**

நாவல் பற்றி நான் மாணவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பயிற்சி எடுக்கிற போது ஓர் உதாரணத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வேன்.

ஒரு நாவல் என்பது ஒரு வீட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்ப்பது. ஜன்னல் வழியே பார்க்கும் பார்வையில் வானமும் வாகனங்களும் மனிதர்களும் நிலப்பரப்பும் பல மனிதர்கள் வாழ்வும் என்று தென்படும் .அப்படி விரிவான பார்வையில் பார்க்கப்பட வேண்டியது நாவல். அதுவே சிறுகதையாக இருந்தால் அறையின் வெளியே இருந்து கொண்டு ஜன்னல் வழியாக உள்ளே நடப்பதைப் பார்ப்பது என்றும் எளிதாகச் சொல்லி வைப்பேன். அப்படித்தான் நாவல் வடிவத்தை நாம் எளிமையாகப் புரிந்து கொள்ளலாம்

அல்லது ராஜாஜி அவர்கள் சொன்னது போலச் சிறுகதை என்பது வானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் பனைமரத்தை போல, ஒரு மையத்தை நோக்கிச் செல்வது. நாவல் என்பது ஒரு புளிய மரத்தை போல பல கிளைகளும் பருமனும் என்று வித்தியாசப்படுவது.

என் அனுபவத்தில் நான் நாவல் எழுதுகிற அனுபவத்தை கனவாகத்தான் நினைத்திருந்தேன் ஆனால் நிறையச் சிறுகதைகள் எழுதுகிற போது நாவல் எழுதுகிற எண்ணமும் வந்தது ஆனால் ஒரு நாவலுக்கான விரிந்த காலமும், பரந்த அனுபவமும் இல்லாமல் இருந்தது .ஒரு எழுத்தாளர், தான் வாழ்ந்த அனுபவங்களை மட்டும் தான் எழுத வேண்டும். வசீகரித்த அனுபவங்களையும் எழுதலாம்.

அப்படித்தான் நான் சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தபோது ஹைதராபாத்தில் இருந்தேன். அந்தப் பின்னணியில் ஒரு நாவல் எழுத வேண்டும் என்று தோன்றிய போது அங்கு வந்து குடியேறி இருந்த சின்னாளப்பட்டியைச் சேர்ந்த ஒரு 50 குடும்பங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அவர்களின் வாழ்க்கை முறையைக் கவனித்தேன் அதை ஒரு நாவலாக எழுத ஆரம்பித்தேன் ஹைதராபாத்தில் இருந்தபோது நான் எழுதிய மூன்று நாவல்களில் **முதல் நாவல் “மற்றும் சிலர் “ .இரண்டாவது “சுடுமணல்”** என்ற நாவல் நதிநீர் பிரச்சனையில் கர்நாடக போன்ற மாநிலத்தில் வாழும் தமிழர்கள் பாதிக்கப்படுவதை ஹைதராபாத் சூழ்நிலையில் வைத்து எழுதினேன். ஏனென்றால் எனக்குக் கர்நாடகம் பெங்களூர்

சூழல்கள் அந்நியமாக இருந்தது காரணம்.

பிறகு அங்கு நடைபெற்ற ஒரு அரசியல் சூழ்ச்சி காரணமாக ஆட்சிக் கவிழ்ப்பும் அதை ஒட்டிய மக்களுடைய பலிகளும் பற்றி **“நகரம் 90”** என்ற நாவலில் எழுதினேன்.

ஆகவே இந்த நாவல் அம்சங்களை நான் எங்கும் தேடிப் போகவில்லை. அது என்னைச் சுற்றியுள்ள நிகழ்வுகளாக இருந்தன. அப்படித்தான் சமகாலத்திய அனுபவங்களை இப்படி நாவலுக்குள் கடத்திக் கொண்டு போகலாம் என்பது விளங்கியது. அதற்காக நெடுகாலம் காத்திருப்பதோ, பெரும் ஆய்வு செய்வதோ இயலாத நிலையில், நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைக் கவனித்து எழுதுவது ஒரு நாவலுக்கான சாதாரண இயல்பாகிவிட்டது எனக்கு. அப்படித்தான் நான் திருப்பூர் வந்தபோது திருப்பூர் மக்களின் வாழ்க்கையைக் கவனித்து பத்துக்கு மேற்பட்ட நாவல்கள் எழுதினேன் அதில் திருப்பூர் மக்களுடைய வாழ்க்கைக் குறிப்பாக பனியன் தொழிலாளர்களும் பெண்களும் என்னுடைய கவனத்துக்கு வருபவராக இருந்தார்கள்

நான் தொலைபேசித் தொடர்புத் துறையில் பொறியாளராக இருந்தேன். அந்தக் கடுமையான வேலை மற்றும் நான் சார்ந்த உடைமை இயக்கச் சிந்தனைகள் போன்றவை பல ஆய்வுக்குச் செல்லத் தடையாக இருந்தன. ஆகவே என்னை வந்து அடையும் அனுபவங்களை நாவலாக்கினேன். இதற்காக நான் வெளியில் எங்கும் அலையவில்லை ஆய்வு செய்ய முடியவில்லை. என்னை சுற்றியுள்ள மக்களைப் பார்த்து, அவர்களது அனுபவங்களைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமாக அவற்றை எழுதினேன். இப்படி மலேசியா சார்ந்த நாவல் அனுபவங்களும், பயணம் சார்ந்த சில நாவல் அனுபவங்களும் என்று சொல்லிக் கொண்டே போகலாம்

ஆகவே இந்த நாவலுக்கான களம் என்பது நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையைக் கூர்ந்து கவனிப்பதன் மூலம் கிடைக்கிறது. நல்ல தரவுகளைச் சேகரிப்பதும் ஆய்வுகள் செய்வதும் தேவையாக இருந்தால் கூட என் வாழ்க்கை சூழலில் அதற்கான வாய்ப்புகள் அமையவில்லை.

எந்தப் பிரதேசம் சார்ந்து எழுதுகிறோமோ அந்தப் பிரதேச மொழி, கதாபாத்திரங்களின் பேச்சு மூலமும் வழக்குகள் மூலமும் கொண்டுவரப்பட வேண்டும். பொது மொழியாக இல்லாமல் இப்படிப் பிரதேசம் சார்ந்த பிரத்யேக மொழியைக் கையாளுதல் முக்கியம். இன்றைய பிரச்சனைகள் நாளைய சரித்திரப் பதிவுகளாக மாறும். ஆகவே எழுத்தாளர் அவற்றைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அப்படித்தான் நான் என்னைச் சுற்றியுள்ள மக்களுடைய வாழ்க்கையையும் குறிப்பாக திருப்பூர் மக்களின்

வாழ்க்கையையும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளையும் நாவல்களுக்குள் கொண்டு வந்தேன்.

ஆகவே என்ன வகையான மையங்களை நாவலுக்குள் கொண்டு வருவது என்பதில் நம் வாசிப்பும் மற்றும் கூர்ந்து சமூகத்தை பார்க்கும் அனுபவமும் இணைந்து வழிகாட்டும். நாவல் வடிவத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்று வருகிற போது நேர்கோட்டு தன்மையிலான கதை சொல்லும் விதி முதலில் ஆரம்பத்தில் எழுதுபவர்களுக்குக் கை கொடுக்கும். சிறுகதை பலவற்றை கோர்த்து நாவலாக்குவது போல நேர்கோட்டுத் தன்மையில் எதார்த்தமாகக் கதாபாத்திரங்களைக் கொண்டு அவற்றை உருவாக்கலாம். பின்னால் அந்த வடிவங்களை நான் பின்நவீனத்துவம் முதற்கொண்டு பல்வேறு வகையான விஷயங்களைக் கொண்டு நாவல்களை எழுதி இருக்கிறேன் ஆகவே வடிவம் சார்ந்த விஷயங்களின் கூட கவனம் தேவையாக இருக்கிறது.

மொழியும் வடிவமும் வாழ்க்கை அனுபவங்களும் இப்படி நாவல்களை எழுதிக் கொண்டு போக உதவும். நீண்ட கால வாழ்க்கை, அதேபோல நீண்ட கால அனுபவங்கள் இவை எல்லாம் எல்லோருக்கும் வாய்க்காது, வாய்க்கும் அனுபவங்களை இப்படி நாவலாக்குவது என்பது சிறந்தது, அப்படி வாய்க்கும் அனுபவங்களைப் பதிவாக்குவது இன்னும் சிறந்தது பெரிய நாவல்கள் எழுத வேண்டும் என்ற ஆசை வந்த போது அதற்கான ஆய்வுகளும், பல மனிதர்களுடன் சந்திப்பும் தேவையாகிறது. அப்படித்தான் ஆயிரம் பக்க நாவல் சிலுவையை நான் எழுதினேன் ஆகவே நாவல் என்ற வடிவத்தை நாம் கையாளர்கிறபோது வடிவம் சார்ந்தும், அதில் பயன்படுத்தும் மொழி சார்ந்தும், மக்களின் அனுபவம் சார்ந்தும் நம்முடைய அவதானிப்புகளை அங்கு பதிவு செய்யலாம். நாவல் போன்ற பெரிய வடிவத்தில் வாழ்க்கையைச் சொல்வதும், வாழ்க்கையைச் சார்ந்து அனுபவத்தை விரித்துக் கொண்டு போவதும் ஒரு மாபெரும் தரிசனமாகவே தோன்றுகிறது.

❖❖❖

உங்கள் மனஓசை

# தமிழ் ஒளியின் புகழ் பரப்பும் ‘ புது மலர்’கள்

**கமலாலயன்**

கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு தொடங்கியிருக்கிறது.1924இல் பிறந்து 1965 இல் மறைந்தவர் தமிழ் ஒளி.பாரதிதாசனின் புதல்வர் எனத்தகும் நிலையில் அவருடன் அணுக்கமாக இருந்தவர். பாரதிதாசனின் கவிதைகளையும், காவியங்களையும் பிரதியெடுத்துத் தரும் வாய்ப்பினால் தமிழ் ஆர்வமும், கவிதை இயற்றும் ஆற்றலும் கை வரப்பெற்றவர் தமிழ் ஒளி. இதை அவரே பாலசுந்தரம் என்ற தன் சக தோழரிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் பட்டப் படிப்புக்குப் போன இடத்தில் அவரோடு பயின்றவர்தான் பாலசுந்தரம்.

படிப்போர் மலைத்து நிற்கும் வண்ணம் கவிதைகளையும், காவியங்களையும் படைத்துத் தந்த தமிழ் ஒளியின் பெயரைத் தமிழ்கூர் நல்லுலகம் ஏன் அடியோடு மறந்து விட்டது ? படைப்பிலக்கியத்தின் அனைத்து வடிவங்களிலும் தன் சிந்தனைகளை எழுதிக் குவித்திருக்கிறார் அவர். கவிதைகள், காவியங்கள், குட்டிக் கதைகள்,சிறுவர் பாடல்கள்,கட்டுரைகள்,ஆய்வுக் கட்டுரைகள் என எல்லா இலக்கிய வடிவங்களிலும் அவருடைய சிந்தனைப் பறவை சிறகடித்திருக்கிறது. **தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்** முன்கை எடுத்துத் தமிழ் ஒளியின் நூற்றாண்டு நிகழ்வை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று பத்தாண்டுகளுக்கு முன்னரே திட்டமிட்டிருந்தது.தொடர்ந்து இந்த விஷயம் பற்றிய அறிக்கைகள்,தயாரிப்புக் கூட்டங்கள்,பிரசுரங்கள், ஊடகங்களில் நேர்காணல்கள் என அனைத்துப் பரப்புரை வடிவங்களிலும் தமிழ் ஒளியின் புகழைப் பாடிப் பரவி நின்றது த மு எ க ச.அதன் விளைவாக,கடந்த ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டுத் தொடக்கத்தின் நிகழ்வுகளைக் கொண்டாட்டங்களுடன் தொடங்கியது அந்த அமைப்பின் முன்னணிப் படை.குறிப்பாக,**சிகரம் ச.செந்தில்நாதன்** அவர்களும்,**கல்வியாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு** அவர்களும் வேறு பல இலக்கிய ஆர்வலர்கள், பதிப்பக உரிமையாளர்கள்,

பேராசிரியர்கள்,நாடகஊடகவியலாளர்கள் என முக்கிய மான அனைத்துத் தரப்பினருடனும் கரங்கோர்த்துப் பணியாற்றினர்.

**“கவிஞர் தமிழ் ஒளி படைப்புலகம்”** என்ற ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பையும், கவிஞரின் ஒன்பது தீந்தமிழ்க் காவியங்களின் தொகுப்பு நூலையும் கண் கவரும் பெரு நூல்களாகத் தொகுத்து வெளியிட்டுக் கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தது நூற்றாண்டு நிகழ்வுக் குழ.அதனைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு பத்திரிகைகள்,படைப்பாளிகளின் கவனம்,கவிஞரின் மீது குவியத் தொடங்கியுள்ளது.அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக,கண.குறிஞ்சி அவர்க ளின் கடும் உழைப்பில் வெளியாகியிருக்கிறது **‘புது மலர்’ கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டுச் சிறப்பிதழ்**.

இதழின் குரல் இப்படி ஒலிக்கிறது : ‘ கால வெள்ளத்தில் நமது தொடர்பு எல்லைக்கு அப்பால் போய்விட்ட கவிஞர் தமிழ் ஒளியின் நினைவைப் போற்றும் வகையில் புதுமலர் இதழ்,கவிஞரின் சிறப்பிதழ் ஆகத் தற்போது மலர்கிறது. வாழ்நாள் பூராவும் மக்களுக்காகச் சிந்தித்து,செயலாற்றி வந்த ஓர் அற்புதக் கவிஞனுக்குக் கிடைத்திருக்க வேண்டிய மதிப்பு,அங்கீகாரம் அவரது வாழ் நாளிலும்,அதற்குப் பிறகும் கிடைக்காமல் போனது வரலாற்றுச் சோகம்.இருப்பி னும்,கவிஞர் தமிழ் ஒளியின் முக்கியத்துவத்தை உணர்ந்து,தமிழ்ச் சமுதாயத்திற்கு அவரை அடையாளங் காட்டி,சிறப்புறக் கொண்டாடி வரும் **தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்** மிகுந்த பாராட்டிற்கு உரியது.”

“ இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளிலும் தனது படைப்பு முத்திரையைப் பதித்துச் சென்ற மாபெரும் இலக்கிய ஆசான் தமிழ் ஒளி அவர்கள்.பாரதி, பாரதிதா சன் ஆகிய இருவரது கவிதைகளால் கவரப்பட்ட தமிழ் ஒளி,அவர்களின் வழித் தோன்றலாக விளங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடம் நேரடியாகப் பழகி,அவரது கவிதைச் சிறப்பை விதந்தோதியவர்.’உயிரில் உணர்வில் கலந்த கவிஞன் என் / உயிரில் உயிர் கொண்டு உலவுகின்றான்.வெறும் / துயரில் நான் மூழ்கிக் கிடக்கவில்லை.அவன் / தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன் !” என அவரைப் பற்றிய கவிதையில் தனது திசைவழியைப் பறை சாற்றியவர் !“

“ தமிழ் ஒளி படைப்புகளின் பல்வேறு கூறுகளை வெளிச்சமிட்டுக் காட்டும் சில கட்டுரைகள் இந்தச் சிறப்பிதழில் வெளியாகியுள்ளன. இவை போதா.இன்னும், இன்னும் நுணுக்கமாகக் கவிஞர் தமிழ் ஒளியைப் பயின்று,அவரைக் கொண்டாட வேண்டியது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையாகும்”

இந்த வேண்டுகோளுடன் ஒலிக்கும் சிறப்பிதழின்

அறிமுகக்குரல்,பல்வேறு அறிஞர் பெருமக்களின் ஆய்வுக்கட்டுரைகளைப் பெருங்குரலெடுத்துத் தமிழ்கூர் நல்லுலகின் முன் சமர்ப்பித்துள்ளது.'' தோழர் தமிழ் ஒளிகாலமும் கருத் தும்'' என்ற தலைப்பில் **பேராசிரியர் வீ. அரசு,** ஓர் ஆழமான பரிசீலனையைக் கட்டுரை வடிவில் செய்திருக்கிறார்.தோழர்கள் **தியாகு, ச.தமிழ்ச்செல்வன்,** பேராசிரியர் **க.பஞ்சாங்கம்,** மூத்த பத்திரிகையாளரும் சிறந்த மொழி பெயர்ப்பாளருமான **தோழர் மயிலை பாலு,** கல்வியாளரும் போராளியுமான **பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு,** புதுமலர் இதழ் ஆசிரியர் **கண.குறிஞ்சி,** ஆய்வாளர்களான **ஜமாலன், சதீஷ்குமார்** ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் அவரவர் பார்வை யில் தமிழ் ஒளியின் படைப்புகளை ஆராய்ந்து சொல்லியிருக்கின்றனர்.

தமிழ் ஒளியின் சிறுகதைகளைத் தோழர் ச.தமிழ்ச்செல்வன்,கவிஞர் ஓர் இடதுசாரி,திராவிட தமிழியக்க முன்னோடி என நிறுவும் விதத்தில் ஜமாலன், கவிஞரின் கருத்துலகம் பற்றி கண.குறிஞ்சி, கட்டுரை இலக்கியம் பற்றிப் பேராசிரியர் க.பஞ்சாங்கம்,கவிஞர் ஒரு பொதுமைச் செவ்வொளி என நிறுவும் தோழர் தியாகுவின் கட்டுரை தமிழ்ச்சமூகம் குறித்த கவிஞரின் பார்வை என சதீஷ் குமார் ஆகப் பன்முகப் பார்வைகளில் இத்தனை பேரும் சிந்தனைக்கு விருந்து படைத்துள்ளனர்.

கவிஞர் **ஈரோடு தமிழன்பன்** கட்டுரை சில நினைவலைகளைப் பகிர்கிறது. ஏனோ அது நிறைவடையாமல் பாதியில் நிற்பது போன்ற உணர்வையேற்ப டுத்துகிறது.இது ஒன்று தவிர,ஏனைய கட்டுரைகளைப் படிக்கையில்,மறைந்த கவிஞர் தமிழ் ஒளியின் மாபெரும் ஆளுமை குறித்த பிரமிப்பையே ஏற்படுத்துகின்றன.அது வெறும் பிரமிப்பாக மட்டுமன்றி,தமிழ் ஒளியின் பாதையில் நடைபோட்டு அவர் எட்ட நினைத்த சிகரங்களைத் தொட்டு நிற்கவும்,தொடர்ந்து நடை போடவும் நமக்கு உத்வேகத்தையும்,செயலூக்கத்தையும் வழங்குவதாக வும் அமைந்துள்ளது.இந்தச் சிறப்பிதழின் மூலம்,கவிஞருக்குச் சிறந்ததோர் அஞ்சலியையும்,இன்றைய தமிழ்ச் சமூகத்திற்கு ஓர் அறிமுகத்தையும் ஒரு சேர வழங்கியிருக்கிறார் கண.குறிஞ்சி அவர்கள்.இறுதியாக,தமிழ் ஒளி நம் போன்ற படைப்பாளிகளுக்குச் சொல்லிச் சென்ற ஓர் அறிவுரை அல்லது அறைகூவலை நினைவு கூர்ந்து இக்கட்டுரையை, நிறைவு செய்வது பொருத்தமாயிருக்குமென நம்புகிறேன் :

“ தமிழ் நாடு இன்றைக்கு எதிர்பார்ப்பது வாழ்கையை வளப்படுத்தும் கலையைத்தான்.கலை கலைக்காகவே என்று சொல்லும் கற்பனைச் சித்தாந்தத்தை அல்ல.சிறுபிள்ளைகளிடம் பலூன்களை ஊத விட்டு வேடிக்கை காட்டுவதைப் போல

வெறும் உவமைப் பிதற்றலும்,கனவுலக மாயாவாதக் கதைகளும் இன்றைய தமிழ் நாட்டைச் சாவுப் படுக்கையில் வீழ்த்தும் கொடிய தொற்று நோய்களைப் போன்றவை.நம் கண்ணெதிரே நம் உடன்பிறந்தவன் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகிறான். அவன் குடும்பம் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து சிதறுகிறது. அதைக்கண்டு மனமிரங்காமல் மரத்துப் போன நெஞ்சுடன் உலாவும் மானிடப் பிண்டங்களின் உடல்களில் " சுரீர் ! சுரீர் !" என்று அடிக்கும்படி எழுதுவதுதான் உண்மையான எழுத்தாளனின் கடமையும்,நோக்கமும் ஆகும் !"

( வீராயிகவியத்திற்குக் கவிஞர் தமிழ் ஒளியின் முன்னுரை யிலிருந்து ).

'இடதுசாரி, திராவிடத் தமிழியக்க முன்னோடி கவிஞர் தமிழ் ஒளி ' என்ற நீண்ட கட்டுரையை ஆய்வாளர் ஜமாலன் அவர்கள் மிகுந்த செறிவுடனும்,பொருள் பொதிந்த விதத்திலும் படைத்துள்ளார்.க ட்டுரையின் தொடக்க வரிகள்,கவிஞர் தமிழ் ஒளியின் கவிதை வரிகள் : " போகும் வழி நீளமென்று புத்தி உணர்ந்தாலும் போகும் வழியெனது போக்குக்கிசைந்த வழி!" கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகளை, தான் நீண்ட காலம் அறிந்து பயிலாமல் தவற விட்டு விட்ட இழப்புணர்வோடும், அது குறித்த குற்றவுணர்வுடனும் ஜமாலன் இக்கட்டுரையைப் படைத்தி ருக்கும் விதம்,அவரின் அறிவுலக நேர்மையை வெளிக்காட்டுவதா யிருக்கிறது. ஒரு படைப்பாளியாகத் தமிழ் ஒளி அவர்களின் படைப்பு மனதையும்,நாடோடி வாழ்க்கையையும் கட்டற்ற சுதந்திரத்தைத் தனது வாழ்வாக அமைத்துக் கொண்ட போக்கையும் அவரின் வாழ்க்கை வரலாற்றை இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் நூல் வடிவில் படிக்கும் போது உணர முடிகிறது என்கிறார் ஜமாலன்.

" ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த தமிழ் ஒளி,தமிழ் இலக்கியத்தில் தலித்துகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பேரவலங்களைத் தனது இலக்கியங்களாகப் பதிவு செய்துள்ளார் " என்று குறிப்பிடும் ஜமாலன்,தனது கருத்திற்குச் சான்றாதாரங்களாகக் கவிஞரின் பல படைப்புகளை மேற்கோள் காட்டுகிறார்.1945இல் எழுதப்பட்ட 'நிலை பெற்ற சிலை' காவியம்,'கோசல குமாரி' காவியம், 'மாதவி காவியம்', 'குற்றப்பரம்பரை' கதை போன்றவை ஜமாலனின் கட்டுரையில் விவாதிக்கப்படும் படைப்புகளாகும்.ஆய்வுகளும் அரசியலும்,தமிழ் மொழியும் சமஸ்கிருதமும்,தமிழ் மொழி வரலாறு,புராணக்கதைகள் : கீதை,புத்தர்,மற்றும் மூவேந்தர்கள் போன்ற துணைத்தலைப்புகளில் விரிவாக ஆராய்ந்து தன் கருத் துகளை முன் வைக்கும் ஜமாலனின் நடை மிக எளிய,இனிய

தன்மையுடன் அமைந்துள்ளதைக் குறிப்பிட்டுப் பாராட்ட வேண்டும்.ஆய்வுக் கட்டுரை என்றால்,எளிதில் புரிந்து கொள்ள முடியாத கடுந்தமிழ் நடையிலேயே இருக்க வேண்டும் என்ற பொதுப்போக்கிற்கு நேர் மாறான சொல் முறை இவருடையது. வாசித்துப் பார்த்தால் மட்டுமே இந்த மாற்றத்தைப் புரிந்து கொண்டு பாராட்ட முடியும்.கவிஞர் தமிழ் ஒளிக்கான மரியாதை,நினைவு எப்படி அமைய வேண் டும் என்பதற்குத் தன் முடிவுரையின் இறுதியில் சில முக்கியமான கோரிக்கை களை முன்வைத்துத் தன் கட்டுரையை நிறைவு செய்கிறார் ஜமாலன்.

தமிழ்ச் சமூகம் குறித்த தமிழ் ஒளியின் பார்வை கட்டுரையில் சதீஷ்குமார் தன் ஊகங்களைப் போதிய ஆதாரங்களின் துணையுடன் முன்வைத்திருக்கிறார். இக்கட்டுரையை ஒட்டியும்,வெட்டியும் நாம் நிறைய விவாதிப்பதற்கான வெளி இருக்கிறது என்பதைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். குடிப்பழக்கத்தைக் கொண் டாடுவதும்,போதையில் மூழ்கித் தன்னிலை மறந்தும் படைப்பதுதான் கவிதை, இலக்கியம் என்றெல்லாம் இன்று பல கவிஞர்கள் குடியைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில்,தமிழ் ஒளி தனது ‘கவிஞன் ஒரு குடிகாரன்’ என்னும் கட்டுரையில் இதற்கு ஒரு மாற்றுக் கருத்தை முன் வைப்பதை இக்கட்டுரை பொருத்தமாகக் காட்டியிருக்கிறது : “ நமது புலவர்கள் பலர் கவிதையைப் புகலிடமாகக் கொள்ளும் போதை வழியில்தான் சென்று விட்டனர்.இத்தகைய ‘கஞ்சா’க் கவிதைகளைச் சிருஷ்டிப்பது சமூகத்திற்கு நல்லதல்ல “ என்கிறார் தமிழ் ஒளி !

தமிழ் ஒளியின் கருத்துலகம் என்ற கட்டுரை,புது மலர் இதழ் ஆசிரியர் கண. குறிஞ்சி அவர்களின் பார்வையில்,கவிஞரின் கருத்துலகம் எப்படிப் பொதுவுடை மைக் காதலை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்துகிறது என்று நிறுவுகிறது. மே தினத்தை முதன் முதலில் கொண்டாடியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் என்றால்,அதை முதலில் வரவேற்றுக் கவிதையில் கொண்டாடி முழங்கிய முதற் கவிஞன் தமிழ் ஒளியே என்று அறியும் போது நாம் வியப்பிலும்,பெருமித உணர்விலும் மூழ்கிப் போவோம் என்பது உறுதி ! தொழிலாளி,முதலாளி என்ற இரு வேறு வர்க்கங்களுக்கு இடையே நடு நிலை என்ற ஒன்று இருக்க முடியாது என்று தமிழ் ஒளி திடமாக நம்பியவர்.எனவே, “ ஏ,செந்தமிழனே, என்னுடைச் சகோதரா ! நீ யார் பக்கம் ? கொள்ளையடித்திடும் கொடியவர் பக்கமா ? துன்பமுற்றிடும் தொழிலாளர் பக்கமா ?” எனும் கவிதையில் நேரடியாக ‘நீ யார் பக்கம் ?’ என்ற கேள்வியை முன் வைப்பதைக் காட்டுகிறார் கண.குறிஞ்சி அவர்கள்.

கவிஞரின் பொதுவுடைமை நேயம்,தமிழ் நாட்டுப்

புவிப்பரப்புடனோ,இந்தியத் துணைக்கண்ட எல்லைகளுக்குள்ளோ குறுகி விடவில்லை;அது உலகளவு விரிந்து பறந்து ஆர்த்த கவி முரசு என்று நிறுவுகிறார் கட்டுரையாளர்.

மேனாள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஒய்வு பெற்ற பேராசிரியரும்,பதிப்பாசிரியப் பணிகளைச் செம்மையாக மேற்கொண்டு **ஜீவானந்தம்** போன்ற பொதுவுடைமைத் தலைவர்களின் ஆக்கங்களைத் தொகுத்து நூல்களை வெளியிட்டு வரும் ஆய்வாளருமான வீ.அரசு அவர் களின் விரிவான நேர்காணல்,இந்த இதழின் சிறப்பம்சம் எனலாம். அவரின் சொந்த இல்லத்தில் சுமார் இருபத்தைந்தாயிரம் நூல்களுடனும்,எண்ணற்ற சிற்றிதழ்களின் தொகுப்புகளுடனும் அமைக்கப்பட்டுள்ள ஒரு மாபெரும் நூலகம் பற்றிய தகவல்களை அவர் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.அவை நம்மைப் பெரும் பிரமிப்பில் ஆழ்த்தக்கூடியவை.தனக்குப் பொருளாதார ரீதியில் நல்ல ஊதியம் கிடைத்ததால்தான் தன்னால் இவ்வளவு பெரிய நூலகத்தை உருவாக்க முடிந்தது என்று சொல்கிறார் பேராசிரியர். இவரைப் போன்றே இலட்சக் கணக்கிலான பேராசிரியர்கள் அவர்களிலும் பலர் கணவன்,மனைவி இருவருமே பேராசிரியப் பணியில் இலட்சக் கணக்கில் ஊதியம் பெறுபவர்கள்தாம் - எண்ணற்றோர் இருப்பினும்,அவர்களில் மாதம் குறைந்தது ஓர் ஆயிரம் ரூபாய்க்காகிலும் புத்தகத்திற்காகச் செலவு செய்வோர் எத்தனை பேர் ? ஆயிரம் கூட வேண்டாம்,ஒரு நூறு ரூபாயைச் செலவு செய்யட்டுமே பார்ப்போம் ! அத்தகையோரை என்னுடைய ஐம்பதாண்டுக் கால அனுபவ த்தில்,விரல் விட்டு எண்ணி விடலாம்.

தான் பல காலம் முயன்று தேடித் தேடித் தொகுத்துப் பாதுகாத்திருந்த பல்வேறு சேகரிப்புகளிலிருந்து அவற்றின் உள்ளடக்கங்களைத் தீர ஆராய்ந்து பல்வேறு நூல்களாக அவற்றை வெளியிட்டு யாரும் பயன் பெறும் வகையில் பதிப்புப் பணிகளிலும் பேரா.வீ.அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.அந்த வகையில் அவர் பதிப்பித்த நுல்களைப் பாருங்கள் : சென்னை இலௌகீக சங்கம் என்ற நாத்திக இயக்கம் 1878-1888 ஆம் ஆண்டுகளில் நடத்தி வந்திருந்த **தத்துவ விவேசினி** என்ற இதழையும், அதே அமைப்பு ஆங்கிலத்தில் நடத்திய The Thinker என்ற இதழையும் தனது ஆய்வு மாணவர்கள் இருவரின் உதவியுடன் பகுப் பாய்வு செய்து அவ்விதழ்களில் வெளியாகி இருந்த செய்திகளைப் பொருண்மை வாரியாகப் பகுத்து அனைத்தையும் தமிழில் நான்கும்,ஆங்கிலத்தில் இரண்டு மாக மொத்தம் ஆறு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்.**அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயக்கர்** என்ற பெரியவர் படைத்த அனைத்து ஆக்கங்களையும்

தொகுத்து அத்திப்பாக்கம் வெங்கடாசலனார் ஆக்கங்கள் திரட்டு என்ற பெரு நூலாகப் பதிப்பித்துள்ளார் வீ.அரசு அவர்கள்.

மறைந்த சுதந்திரப்போராட்ட வீரரும்,கப்பலோட்டிய தமிழர் எனப் போற்றப் படுபவருமாகிய **வ.உ.சிதம்பரனார்** அவர்களின் சிறு நூல்கள் பலவற்றையும் தேடித் தொகுத்து **'வ.உ.சி.நூல் திரட்டு'** எனும் பெயரில் பதிப்பித்துள்ளார்.இந்த நூலைத் தற்போது சில புதிய இணைப்புகளுடன் சேர்த்துத் தமிழ் நாடு பாட நூல் கழகம் **'வ.உ.சி.பன்நூல் திரட்டு'** எனும் பெயரில் வெளியிட்டுள்ளது. இவை தவிர,தமிழ் நாடகத்தந்தையான **சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்கள்,மயிலை சீனி.வெங்கடசாமியின் ஆக்கங்கள், புதுமைப்பித்தனின் இதழ் வழிக் கதைகள்** ஆகியவற்றையும் தொகுத்தும்,விரித்தும் பல்வேறு பதிப்புப் பணிகளைப் பேரா. வீ.அரசு அவர்கள் செய்துள்ளார்.இவரின் பன்முகப் பணிகள் குறித்துத் தமிழில் விரிவாக வெளியான நேர்காணல் இதுவே முதன்முறையாயிருக்கும் என்று தோன்றுகிறது.இதனை வெளி யிட்டதன் மூலம்,இவரின் அடியொற்றி மேலும் பல இளம் ஆய்வாளர்கள் இத்தகைய பணிகளைத் தொடர்வார்கள் என நம்பலாம்.

கவிஞர் தமிழ் ஒளி சிறப்பிதழில் அவரின் காலமும் கருத்தும் என்ற விரிவான கட்டுரையொன்றையும் வீ.அரசு அவர்கள் படைத்திருக்கிறார்.இக்கட்டுரை தமிழ் ஒளியின் வாழ்க்கை,அவரின் கவிதைத்திறன்,படைப்புகள்,அவற்றின் காலப் பொருத்தம்,கருத்துச் செறிவு என்ற பல்வேறு பரிமாணங்களும் படிப்போருக்குப் புலனாகும் வண்ணம் ஆழ்ந்த பொருள் பொதிந்த வகையில் படைக்கப்பட்டுள்ளது.1961இல் தமிழ் ஒளி வெளியிட்ட 'போராடும் மனிதனின் புதிய உண்மைகள்' என்ற சிறு நூலின் துணை கொண்டு பல்வேறு புதிய செய்திகளை அரசு நம்முன் வைத்துள்ளார். தமிழ் ஒளியின் வாழ்க்கையை மூன்று கட்டங்களாகப் பகுத்துக் கொண்டு,ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிஞர் எவ்வாறு தன் படைப்புகளில் அக்காலகட்டத் தமிழ் நிலத்தின் வரலாற்றையும், இயக்கங்களின் போக்கையும்,மக்களின் மனங்களில் இடம்பெற வேண்டிய முற்போக்குக் கருத்துக்களையும் கவியழகும்,கற்பனைத் திறனும் மேலோங்கப் படைத்தளித்திருக்கிறார் என்பதை நாம் இந்தக் கட்டுரை மூலம் பெருமளவுக்குப் புரிந்து கொள்கிறோம்.இந்தியப் பொதுவுடைமைக் கட்சியும்,உலகக் கம்யூனிஸ்ட் இயக்கமும் சந்தித்த சமர்கள்,தாக்குதல்கள்,சாதனைகள் ஆகியவற்றைப் பாடி யிருக்கிறார்.மே தினமே வருக என்ற கவிதையில்,மே தினத்தின் பெருமைகளைக் கூறி,அதனைத் தமிழ் நிலத்தின் உழைப்பாளி மக்களின் சார்பில் வரவேற்று மகிழ்ந்திருக்கிறார் தமிழ் ஒளி.இப்படி

எண்ணற்ற தகவல்களின் களஞ்சியமாக,அதே சமயம்,வெறும் தகவல் குவியலாக மட்டும் அமைந்து விடாமல்,உணர்ச்சி குன்றாத நடையில் அரசு தந்துள்ள இக்கட்டுரை வாசிக்கும் போதே பரவசப்படுத்துகிறது.

ச.தமிழ்ச்செல்வன் அவர்கள்,தமிழ் ஒளியின் சிறுகதைகளைப் பற்றிய செறிவு மிக்க கட்டுரையைப் படைத்துள்ளார்.தன் கைக்குக் கிடைத்த **குருவிப்பட்டி** என்ற ஒரு தொகுப்பிலுள்ள கதைகளை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு தமிழ் ஒளியின் கதையுலகைப் பற்றிய ஒரு சுவையான,ஆர்வமூட்டும் படைப்பைத் தந்திருக்கிறார் தமிழ்.குறிப்பாகத் தமிழ் ஒளியின் ‘புறாவும் டாலரும்’ என்ற உருவகக் கதையை விரிவாகக் குறிப்பிட்டு,இன்றும் கூட இக்கதையின் பொருத்தப்பாடு எந்த அளவுக்குச் சமகாலத் தன்மையுடையதாக இருக்கிறது என்று நிறுவி இருக்கிறார்.சமாதானத்தின் விதையை நாடு நாடாகச் சென்று விதைக்கும் புறா ஒன்று டாலர் தேசத்திற்கும் போய் விதைக்கிறது.அங்கே டாலர் கோபுரப் பேர் வழி தன் தொப்பை வயிற்றுடன் புறாவை மிரட்டுகிறான் : “உன் உயிர் என் கையில் ! திமிர் பேசினால் உன்னைக் கொன்று விடுவேன்” என்று துப்பாக்கியை எடுத்து நீட்டுகிறான்.உடனே புறா ஜிவ்வென்று ஆகாயத்தில் எழும்பி ஒரு குரல் எழுப்புகிறது. காற்று,அதை உலகமெங்கும் பரப்பியது. செங்கொடியின் ஒளி வெள்ளம்,புறாவைச் சூழ்ந்து நின்று ஒரு பாதுகாப்பு அரணாகி றது.அருணோதயத்தின் அடையாளமான அந்தச் செங்கொடியின் கீழ் உலக மக்கள் எல்லாரும் திரண்டு நிற்கிறார்கள்.” வாழ்த்துச் செய்தி கொண்டு வந்த அமைதிப்புறாவை டாலர் வியாபாரி கொல்லப்போகிறானாம்” என்ற செய்தி உலகம் பூராவும் பரவி விடுகிறது.”அவனுடைய டாலர்க் கோபுரத்தை இடித்து நரகத்தில் போடுங்கள்!” என்று அசரீரி போலப் புறா கட்டளையிடுகிறது. காற்று அக்கட்டளையை நிறைவேற்றச் சூறாவளியாக மாறி டாலர்க் கோபுரத்தின் மேல் மோதுகிறது.மேகங்கள் இடிமுழக்கத்துடன் அங்கு திரள்கின்றன.கோபுரத்தின் மேல் பேரிடிகளை வீசியெறிகின்றன.”டாலர்க் குண்டு ஒழிக ! மரண வியாபாரி ஒழிக !”என்ற முழக்கம் வான மண்டலமெங்கும் எதிரொலித்தது.இருளைக் கிழித்துக் கொண்டு மக்கள் நடந்தார்கள்.புறாவுக்கு வாழ்த்துக் கூறினார்கள். மதுரமான அந்த வேளை வந்தது.செவ்வானத்தில் தவழ்ந்த இந்திர வில் புறாவின் சிறகுகளை முத்தமிட்டது.“சமாதானம் வாழ்க !” என்று புறா இசை பாடியது. ஐம்பதுகளில் உருவான சமாதான அணியின் இயக்கத்தை வரவேற்று இக்கதையைத் தமிழ் ஒளி படைத்திருக்கிறார்.இன்றைக்கும் பொருந்துகின்ற ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கதையை அன்றைக்கே தமிழ் ஒளி தந்திருக்கிறார்

“ என்று தமிழ்ச்செல்வன் குறிப்பிடுவதைப் படிக்கையில் மெய் சிலிர்க்கிறது!

இந்தச் சிறப்பிதழில் வெளியாகியுள்ள ஒவ்வொரு படைப்பைப் பற்றியும் ஒரு பத்தியளவுக்கு எழுதினாலே இன்னும் பல பக்கங்களுக்கு இக்கட்டுரையை நான் விரிவாக்கிக் கொண்டு போக வேண்டும். அவ்வளவு சுவை, அவ்வளவு பயன் ! வாசகர்கள் வாங்கிப்படித்து இச்செய்திகளை வீடுகள்தோறும், வசிக்கும் மனிதர்களின் கண்கள் தோறும் கொண்டு சேர்த்திட வேண்டும். இதுவே என் வேண்டுகோள்!

❖❖❖

# புதுமலர் இதழ்கள்-பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷங்கள்

சாவித்திரி கண்ணன்

அமைதியாக, அதே சமயம் அழுத்தமாக இதழியல் பணியைச் செவ்வனே செய்து வருபவர்களில் இன்றைய தினம் ஈரோட்டுத் தோழர் கண.குறிஞ்சி அவர்களுக்கு ஈடு இணை இல்லை.

ஆண்டுக்கு நான்கென, காலாண்டு இதழாக அவர் கொண்டு வரும் புதுமலர் என்ற சமூக இலக்கிய இதழ் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்களாகும்.

சமூகத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்து மறைந்தவர்களை மிகச் சிறப்பாக ஆவணப்படுத்தி வருகிறார். அந்த வகையில் **வள்ளலார், வ.உ.சி, கவிஞர் தமிழ் ஒளி** ஆகியோருக்கு கொண்டு வந்த சிறப்பிதழ்களே சாட்சி! இது மட்டுமின்றி வாழும் அறிஞர்கள், சான்றோர்கள், சமூகத்திற்கு உழைப்பவர்கள் போன்றவர்களை தேடிக் கண்டடைந்து வாழும் போதே கவனப்படுத்துகிறார்.

இந்த வகையில் சென்ற இதழில் **ஹென்றி டிபேன்** அவர்களையும், தற்போதைய இதழில் **பேராசிரியர் வீ.அரசு** அவர்களையும் விரிவாக நேர்காணல் செய்து அவர்களின் தமிழ்ச் சமூகத்திற்கான பங்களிப்பை ஆவணப்படுத்தி உள்ளார்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் மேற்படி இருவரையும் நான் கடந்த 30 அண்டுகளுக்கும் மேலாக அறிவேன் என்றாலும், இவர்களைக் குறித்த முழுமையான பிம்பம் எனக்கு புதுமலர் காலாண்டிதழ் மூலமே தெரிய வந்தது. அடடா, நானே மேற்படி சான்றோர்களைச் சரியாக உணராமல் இருந்துள்ளேனே..என குற்றவுணர்வு ஏற்பட்டது. ஆம், நாம் கற்க, கற்கத்தான் நாம் தெரிந்து வைத்திருப்பது மிகக் குறைவு! தெரிய வேண்டியது மிக அதிகம் எனப் புரிய வருகிறது.

வள்ளலார் ஆவணச் சிறப்பிதழில் **பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி, பொதிகை சித்தர், கண.குறிஞ்சி, பொழிலன், விடுதலை ராஜேந்திரன், ரெங்கையா முருகன், முனைவர் தேவேந்திரன், கு.கலைவாணன், ஐ.சிவக்குமார்** ஆகிய பத்து ஆளுமைகள் விதவிதமாக வள்ளலாரை ஆய்வு செய்திருந்தனர்.

தற்போதைய தமிழ்ஒளி சிறப்பிதழில் **பேராசிரியர் வீ.அரசு, ஈரோடு தமிழன்பன், தோழர் தியாகு, ச.தமிழ்ச் செல்வன், பேராசிரியர் பஞ்சாங்கம், மயிலை பாலு, பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, கண.குறிஞ்சி, ஜமாலன், சதீஷ்குமார்** ஆகிய பத்து ஆளுமைகள் கவிஞர் தமிழ்ஒளியை ஒவ்வொரு தலைப்பில் ஆழமாக ஆய்வு

செய்துள்ளனர்! கவிஞர் தமிழ்ஒளி குறித்த சரியான புரிதலுக்கு வர இந்தக் கட்டுரைகள் நமக்கு உதவுகின்றன.

இப்படியாக அந்தந்த இதழ்களின் பேசுபடு பொருளுக்கு ஏற்றத் தகுந்த ஆளுமைகளை கண்டடைவது மட்டுமல்ல, அவர்களை எழுத வைத்து கட்டுரைகள் பெறுவது என்பது சாதாரண விஷயமல்ல. தோழர் கண.குறிஞ்சி மீது இப்படியானவர்கள் வைத்துள்ள மரியாதையும், அன்பும் இதில் வெளிப்படுகிறது. எனினும், பல ஆளுமைகளிடம் கட்டுரைகள் பெறும் போது தொடர் நினைவூட்டலின்றி அவற்றை சுலபத்தில் வாங்க முடியாது. ஆகவே, காலாண்டு இடைவெளியில் இவை அனைத்தும் சாத்தியமாகிறது என நினைக்கிறேன்.

தமிழ் மற்றும் சமூகத் தளத்தில் இயங்கும் ஆய்வு மாணவர்கள், பேராசிரியர்கள், இதழியலளர்கள் தவறாமல் படிக்க வேண்டிய இதழ் புதுமலர். தொடர்ந்து இந்த காலாண்டிதழ்களை வாசித்து வரும் யாரும் இங்கே நான் குறிப்பிட்டவை எதுவுமே மிகைபடக் கிடையாது என உணர முடியும். நூலகங்கள் நடத்துபவர்கள் இந்த இதழைத் தவறாமல் வாங்கி பாதுகாக்க வேண்டும்.

**ஆசிரியர்,**
**அறம் இணைய இதழ்**

❖❖❖

# 'புதுமலர் ' காலாண்டிதழ் முதலாண்டின் முச்செவ்விகளும் மூன்று ஆவணச் சிறப்பிதழ்களும்..

**பொதிகைச்சித்தர்**

தோழர் கண.குறிஞ்சி இவ்வாண்டில் (2023) தம் 'புதுமலர்' எனும் 'சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டிதழின் நான்கிதழ்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

தேவைப்படும் தருணங்களில் முகாமையான ஆளுமையர் தம் ஆவணச்சிறப்பிதழாக வெளிவரும் என்றும் குறித்தார். அவ்வாறே இதன் முதலிதழ் **'வள்ளலார் 200 ஆவணச் சிறப்பிதழ்'** ஆகவும்; நான்காமிதழ் **'கவிஞர் தமிழ்ஒளிநூற்றாண்டுச் சிறப்பிதழ்'** ஆகவும் ஆவணத் தொகைகளாக வெளியாகி உள்ளன.காலாண்டிதழ் விலை நூறு மேனி ஆண்டுக்கட்டணம் 400/ என முறைப்படுத்தப்பட்டு விட்டாலும் **பக்கங்கள் கூடுதலாகிப் போனாலும் ஒரே விலையாக வெளிக்கொணரப் படுவது பாராட்டத்தக்கதே**.

முதலிதழைத் தவிர முறையே ஏனைப்பிற இதழ்களில் மொழி உரிமைப் போராளி **பஞ்சாப் பேராசிரியர் ஜோகா சிங்**,மனித உரிமைப் போராளி **வழக்கறிஞர் ஹென்றி திபேன்,பேரா. வீ.அரசு** மூவருடனான குறிப்பிடத்தக்க செவ்விகள் இடம்பெற்றுள்ளன. வெவ்வேறு துறை சார் ஆளுமைகளுடன் அவர்தம் பட்டுப் பாடுன்றும் பணிகள் தெள்ளிதின் புலப்படுமாறு குறிஞ்சி இவற்றை மேற்கொண்டுள்ளது கவனங் கொள்ளத்தக்கது.

'மொழிச்சிக்கல்கள் குறித்த சர்வதேசக் கருத்துக்கள்' எனும் ஜோகா சிங்கின் குறிஞ்சி தமிழாக்கத்திலானநூல் புதுமலர் வெளியீடாக நான்கு பதிப்புகள் 3000 படிகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளது . இதுவரையில் இதனையும் உள்ளடக்கி இந்நூல் 11 இந்திய மொழிகளில் அச்சு வடிவிலோ ,மின்னூல் வடிவிலே கிடக்கின்றது. அவர் தொடங்கிய **'மொழி நிகர்மை உரிமைப் பரப்பியக்கத்தில்**(CLEAR)' இந்திய மொழிகள் பலவற்றின் சார்பிலும் பலர் பங்கேற்றுள்ளனர்.தமிழ்நாட்டில் குறிஞ்சி, பழநி, மணி மணிவண்ணண், ஆழி செந்தில் நாதன் ஆகிய நால்வரும் முன்னோடிச் செயல்பாட்டாளர்களாக உள்ளனர். தம் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆழி. செந்தில்நாதன் அதன் முகாமை அச்செனஜோகா சிங் விதந்தோதிப் போற்றுகின்றார்.

நவீன இந்தியாவில் சமூகநீதி இயக்கங்களுக்குவழிகாட்டியாகவும்; கூட்டாட்சி இந்தியாவின் பாதுகாவலன் ஆகவும் ஜோகிந்தர்

தமிழ்நாட்டை அடையாளப்படுத்துகின்றார். முறையே இவற்றிற்கான பெருமை பெரியார் அவர்களுக்கும் திராவிட இயக்கத்திற்கும் தான் போய்ச் சேருமெனப் போற்றுகின்றார். தம் பாடப்பயிற்சியில் தொல்காப்பியர் பங்களிப்புக் குறித்து அறிய நேர்ந்ததைப் பதிவு செய்கின்றார்.

வழக்கறிஞர் ஹென்றி திபேன் தாம் பொதுவாழ்விற்கு வரக்காரணமானவர் தமைத்தத்தெடுத்து ஆளாக்கியஅம்மை; வேடசந்தூரில் மேற்கொண்ட கம்யூன்வாழ்க்கை; தம் பியூசிஎல் அமைப்புப்பணி ,அத்தொடர்பிலான உண்மை காண் குழுக்களப்பணி,காவல்துறை வன்முறைக்கு எதிராகச் செயல்படக் காரணமான நிகழ்வு; தலைமறைவு வாழ்க்கையில் தப்பி ஓடுகையில் காவலர்களிடமிருந்து பழ.நெடுமாறனார் தமைப் பாதுகாத்தமை; மதுரையில் 'மக்கள் கண்காணிப்பகம்' உருவாகக் காரணமான வாய்ப்பு, அவ்வமைப்பு மிகவலுவாக மனித உரிமைக்களத்தில் பணியாற்ற நேர்ந்த சூழல்;காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கப்பாடுகள் குறித்த மனித உரிமைச் சமராவணமாக இச்செவ்வியை அவரிடமிருந்து வெளிக்கொணர வைத்து குறிஞ்சி காத்திரமாக ஆவணப்படுத்தி உள்ளார்.

இன்னும் அருட்பணி ஸ்டேன் சாமி உடனான அனுபவங்கள், அவர் காலமானபின் அவருடைய சாம்பல்பவனித் திட்டத்தை அனைத்துக்கட்சி, இயக்கங்கள் கூட்டாக முன்னெடுக்க முனைந்தமை, அதற்கூடான இடர்ப்பாடுகள்; எதிர்காலத்திட்டங்கள், திராவிட மாடல் அரசு மேற்கொள்ளவேண்டிய சித்திரவதைத் தடுப்புக்கான சிறப்புச்சட்டம்;உலகளாவிய மனித உரிமைக் கூட்டமைப்பில் உறுப்பாண்மை,தேசியமனித உரிமை ஆணையங்களைத்தலையீடு செய்வதற்கான அரசு சாரா அமைப்புகளுக்குஆசிய அளவிலான ANNI எனுந் தள உருவாக்கம் ஆகியவை குறித்த பதிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் கண்காணிப்பகத்தின் தலித் மனித உரிமைப்பணிகுறித்து **சந்திரபோஸ், தொல்.திருமா** இருவரும் அதன்முன்னோடித்தன்மை குறித்தும் ,தொடர்ந்து முன்னெடுக்கவேண்டிய பயிற்சிகளை வலியுறுத்தியும் பெரிதும் பாராட்டி உள்ளனர். கண.குறிஞ்சி களத்தூன்றி நிற்கும் மனித உரிமைப் போராளி என்பதனால் அவராலன்றி தகைசால் மனித உரிமைப் போராளி ஹென்றியின் வாணாட் பாடுகளை இத்துணைச் சிறப்பாக இத்தகுசெவ்வியாக வெளிக்கொணர்விக்க இயலாதுதானே?

**பேரா.வீ.அரசு** உடனான செவ்வி அவருடைய பல்துறைப்பாடுகள் யாவற்றையும் ஒன்றுவிடாமல் துருவித்துருவி சாவி நாம் மலைக்கும் வண்ணம் வெகு சிறப்பாகத் தொகுத்தளித்துள்ளது. அவையாவன:

அவருடைய பல்கலைக்கழகப் பேராசிரியராகத் தனித்துவமான பணிகள்; தொகுப்பாசிரியப் பணிகள்; ஈழப்போராட்டப் பங்களிப்புகள்; சற்றொப்ப இருபத்தையாயிலரம் பிரதிகளுடன் பெருஞ் சேகரிப்பான 'கல்மரம்' இல்ல நூலகம்; பல்வேறு ஆளுமை குறித்த அவருடைய பார்வைகள்; இயக்கங்கள் பலவற்றையும் குறித்த அவரதுபதிவுகள் எனப் பன்முகமான விரிவான செவ்வியை நிகழ்த்தியுள்ளார் குறிஞ்சி.

இம்மூன்று பேட்டிகளுமே நேர்காணல் என்பதாக அல்லாமல் செவ்வி தலைப்பட்ட உரையாடலாக வாய்த்துள்ளன எனிலது மிகையாகாது. முகாமையான ஆளுமையர் குறித்த ஆவணச் சிறப்பிதழ் எனும் வகையில் ஏலவே குறிப்பிட்ட வள்ளலார், தமிழ்ஒளி

குறித்த ஆவணச் சிறப்பிதழ்கள் தேர்ந்த தெரிவும் வெளிப்பாடுகளுமாகக் காலத்தின் தேவையாக முன்னெடுக்கப்பட வேண்டிய வண்ணம் அருமையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. 'கடைவிரித்தேன் பொருள் கொள்வாரில்லை' எனக் கடைகட்டிக் கொண்டதாக ஒரு கூற்று இராமலிங்கக்கூற்றாகப் பலராலும் பலகாலும் சுட்டப்பட்டாலும்.எனக்கு எட்டிய மட்டில் அது அவர் கூற்றாகக்காணக் கிடைக்கவில்லை. இதுவும் ஏலவே சிலராலும் குறிப்பிடப்பட்ட ஒன்றே. கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிகெனவும்,அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்கெனவும் அரசியலைப் பேசிநின்றவர் அன்றோ அவர்? இற்றைச் சூழலில் இராமலிங்கரை எவ்வாறெல்லாம் நாம் வாசிக்க வேண்டும்,எவ்வாறு எல்லாம் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்த வல்லனவாக அவர் குறித்த ஆவணத் தொகுப்பு அமைந்தியல்கின்றது. மட்டுமல்லாமல் அவர் படைப்புகள் குறித்த பதிப்பரசியல்; அவரை எவ்வாறெல்லாம் இருட்டடித்தும் , திசைதிருப்பியும் நிகழ்த்தப்பட்ட அரசியலையும் கட்டுரைகள் அருமையாக எடுத்துரைக்கக் காணலாம்.மபொசியின் திருகுதாளங்கள், மு.அருணாசலத்தின் உண்மைக்குப் புறம்பான மதநோக்கு சைவசமய மரபுக்குள் வள்ளலாரைக் கட்டமைக்கும் அரசியல் ஆகியனவும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. வடலூரும் ஈரோடும் சங்கமிக்கும் சங்குமுகங்கள் குறித்தும் எம்மனோர் முன்வைத்துள்ளோம். காவியை மறுத்த வெண்மைத் தெரிவின் உட்கிடையும் உணர்த்தப்பட்டுள்ளது. தமிழர் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றிய முன்னோடித் தேசியச் செல்நெறியும் சுட்டியே காட்டப்பட்டுள்ளது. தொகு மொத்தமாக இற்றைப்படுத்தி நோக்கையில் காவி தர்பார் பாசிசச் சூழலில் வள்ளலாரியத்தின் இன்றியமையாத் தேவை தெற்றெனத் துலங்குமாறு அதன் ஆவணச் சிறப்பிதழ் சிறப்பாக வெளிப்போந்துள்ளது.

வாழ்ந்த போதும் உரிய ஏற்பு வாய்க்கப் பெறாமலேயே போனது மட்டுமல்லாமல் ; வாணாட் காலத்துக்குப் பின்னருங்கூட

அவருக்கான இடத்தை அடையொணாமல் போன கெடுவாய்ப்பிற்கு ஆளான மகத்தான ஆளுமையே தமிழ்ஒளி.அவருக்கொரு பாஸ்வெல்லாய் தனிஒருவராய்த் தம் வாணாட்பாடாக அவரைப் பதிப்பித்தே முன்னிறுத்தியவர் **செ.து.சஞ்சீவி** தாம். தமிழ்ச் சூழலில் முப்பெருங்கவிஞர்கள் எனப் பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி என அவரவர் இயக்கப் பின்புலத்தோடு ஒரு முறைவைப்பை முன்மொழிந்து தம் நூலாலும் ,கட்டுரைகளாலும், பேச்சுக்கூடாகவும் தொடர்ந்து வலியுறுத்தியவர் பேரா.வீ.அரசு தாம். தமிழ்ஒளி நூற்றாண்டு விழாவை முன்னெடுத்த அமைப்பு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கமே. அதன் சார்பில் ஒரு சிறப்புமலரையும் வெளிக்கொணர்ந்துள்ளது. மார்க்சியச் செயற்பாட்டாளர்களான ம.சிங்காரவேலர், ப.ஜீவானந்தம் எனும் வரிசையில் தமிழ்ஒளியை அறிமுகப்படுத்துவார் வீ.அரசு. இடதுசாரி மேடைப்பாடல் மரபில் **ஜீவா,வெ.நா.திருமூர்த்தி** வரிசையில் தமிழ்ஒளியை அடையாளப்படுத்துவார். மேலும் தன்மான இயக்கக் கருத்தியலை இடதுசாரி அமைப்புச் செயற்பாடுகளுக்கு ஊடாகவும் நடைமுறைப்படுத்தியவர் ஆக அவரை இனங்காண்பார். இடதுசாரி/ திராவிட / தமிழியக்க முன்னோடியாகத் தமிழ்ஒளியை இனங்காணும் ஜமாலன் இன்குலாப் கூட இம்மரபில் கிளைத்தவர் என்பார். அவரது தமிழியல் சார் ஆய்வுகளை வாசிக்கையில் ஆழ்ந்த தமிழறிவும்,அதன் உருவாக்கமான தமிழியல் சிந்தனையின் நவீனத்தையும் எத்தகையதென அறிய முடிந்ததென்பார். தமிழ்ஒளியின் கவிதை, காவியங்கள் என்பதற்கு அப்பாலாக சிறுகதைகள், புலமைத்துவம், திறனாய்வு, ஆராய்ச்சி ,சிறார் பாடல்கள், நாடகப் பிரதிகள் குறித்தும் வெவ்வேறு கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. பாரதிதாசன் அவர்களின் சமாந்தரக் கவிஞர்களை இனங்கண்டு எடுத்துரைத்த பரிமாணம் விதந்தோதிக் காண வேண்டியதாகும். இத்தொடர்பில் முன்னோடியான பாரதியை மட்டுமன்றி அவர் தமிழ் ஒளி, **சுரதா, பட்டுக்கோட்டையார், பொன்னடியான், ஈரோடு தமிழன்பன்** என்றவர் மாணவர் பட்டியல் நீளும். **முடியரசன்,வாணிதாசன்** இருவரும் அவரை நகலெடுத்தோரே. எல்லாவகையாலும் பாரதிதாசப் பரம்பரையில் தலைமாணக்கர் தமிழ் ஒளியே. கவித்துவப் பாரம்பரியத்தில் மட்டுமல்ல புலமைத்துவப் பாரம்பரியத்திலும் கூடத்தான் என்பதை இச்சிறப்பிதழும் குறிப்பாக அரசின்பதிவுகளும் நமக்கு உணர்த்துகின்றன. இம்மலர் மூலம் காணக்கிடைத்த இன்னுமொரு புதிய திறப்பு **தொ.மு.சி, புதுமைப்பித்தன் குறித்த தமிழ் ஒளியின் மதிப்பீடுகளாகும்**. தொ.மு.சி, புதுமைப்பித்தன் போலவே வசன கவிதையை தமிழ்ஒளியும் ஏற்கவில்லை. இன்னும் தொமுசியைப் போலன்றி புதுமைப்பித்தன் கவிதைகளையே தமிழ்ஒளி ஏற்கவில்லை.

மாறாக பித்தனின் 'சாபவிமோசனம்' கதையை அகல்யை குறித்த புனைவுகளில் சிறப்பானதாகக் கொண்டாடுகின்றார். இந்திரன் ,இந்திர தேசம் குறித்த தொன்ம வகைமையில் ஆரியஎதிர்ப்பு தமிழின் ஆழ்தள உளவியலாக அமைந்தியல்கின்றது என்னும் ஜமாலன் அதனைத் தொன்மக்கதைகளைத் தலைகீழாக்கும் நவீனக் கோட்பாட்டின் மொழிவிளையாட்டாக எடுத்துரைப்பார். தமிழின் மூல முதல் நூலான 'ஐந்திர ' நூலை அடிப்படையாகக் கொண்டு இந்திரன் குறித்த கருத்தியலை வளர்த்தெடுப்பதாகத் தொடர்வார்.

1948 இல் வெளியான தொமுசியின் 'இலக்கிய விமர்சனமே ' கலை இலக்கியம் தலைமயங்கி முயங்கி வெளியான தமிழின் முதல் நவீனத் திறனாய்வு நூலாகும்.இந்நூல் குறித்து மிக விரிவான எதிர்மறைத் திறனாய்வைத் தமிழ்ஒளி முன்வைத்துள்ளது குறித்தும் குறிப்பிடுகின்றார் அரசு. அதன் மீதான வாசிப்பிற்கு அப்புறமே மேலும் விவாதிக்கத்தக்கதென்பதால் இங்கே அதுகுறித்து இதற்குமேல் பேச இடமில்லை. ஜமாலன் முறையான தமிழ் வாசிப்பு தமக்கில்லாதாலேயே தமிழ்ஒளியின் முன்னோடிப் பங்களிப்பைத் தம்மால் இனங்காண இயலாமற் போயிற்றென ஒரு தன்னாய்வை முன்வைப்பார்.மாறாக இதில் முரண்தொனி யாதெனில் தமிழ்ஒளி பாரதிதாசன் தமிழ்ஒளியை முறையாகத் தமிழ் பயில வற்புறுத்திக் கரந்தையில் சேர்ப்பித்தும் தமிழ்ஒளி அதனைத் தவிர்த்து வெளியேறினார் என்பதே. அங்கவர்மீது ஆதிக்கசாதியினர் அடக்குமுறையால் மனநொந்தவர் வெளியேற நேர்ந்தபோது பாரதிதாசன் பாதுகாப்பரண் ஏற்படுத்தியும் தமிழ்ப்ப யில்வின் பாடத்திட்ட முறைமையையே தமிழ்ஒளி புறக்கணித்து வெளியேற நேர்ந்தது என்பது கவனங்கூர வேண்டியதாகும்.

இவைதவிர மூன்றாமிதழ் **தலித் ஆளுமமையர் சிறப்பிதழாக** வாய்த்துள்ளது மார்க்ஸ் முதல் அம்பேத்கர் வரையிலான சோசலிச அனுபவங்கள்; அம்பேத்கர் இரட்டைமலை சீனிவாசன் குறித்த கட்டுரைகள் ; ஆவணங்களில் அடித்தளமக்கள், சாதி ஒழிப்பு வரலாற்றுக் குறிப்புகள் ; ஆகியவை அதில் இடம்பெற்றுள்ளன. விரித்தெழுத இடமில்லை.இன்னும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் ஒருங்கிணைந்த பரப்புரை குறித்த கட்டுரையின் தமிழாக்கம்; என் பவளவிழா குறித்த பதிவுகள், என் மெய் யியல் சார்ந்த உரையாடல்கள் மீதான கட்டுரை ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.'புதுமலர்' காலாண்டிதழ் முதலாண்டின் முச்செவ்விகள், மூன்று ஆவணச்சிறப்பிதழ்களுக்கு ஊடாகவும் புதுப்புதுத் திறப்புகள் வாயிலாகப் புதுவெளிச்சம் பாய்ச்சி உள்ளது.

• • •

★★★

புதுமலர் இதழ் (அக்டோபர்-திசம்பர் 2003 ) சிறப்பாக வந்துள்ளது. துரை.மதிவாணன் அய்யாவின் பெரியவர் தொகுப்பு கவனப்படுத்தியமைக்குப் புதுமலர் இதழுக்கு மிக்க நன்றி. கவிஞர் தமிழ் ஒளி அவர்களின் முழுப் பரிணாமம் இந்த இதழ் வழியாக வாசித்துத் தெரிந்து கொள்ள இருக்கிறேன். ஒவ்வொரு இதழும் சிறப்பான கவனத்துடன் வருகிறது

**ரெங்கைய்யா முருகன்**

★★★

ஜெயகாந்தன் வயது 13. தமிழ் ஒளியின் வயது 23. இந்தியா சுதந்திரம் அடைந்த ஆண்டு இவர்களது நட்பு தொடங்கியது. அதன்பின் ஒன்பது ஆண்டுகள் இருவரும் இணைபிரியாத் தோழர்கள்.

தமிழ் ஒளியின் பேதைமையாலும், ஜெயகாந்தன் தனது சகிப்பின்மையாலும் தமிழ் ஒளியின் நட்பைத் துண்டித்துக் கொண்டதாக ஜே.கே. தனது அனுபவங்களில் எழுதியிருக்கிறார்.

இப்போது ஆராய்கையில் இருவரும் எதிரெதிர் தத்துவங்களைத் தம் வாழ்வின் பாதையாக ஏற்றுக் கொண்டவர்கள் என்று தெரிகிறது.

அநீதிகளை அடித்தளமாகக் கொண்ட சனாதனத்தையும், அதன் பிள்ளையான சாதியத்தையும் எதிர்ப்பதே தமிழ் ஒளியின் தாரக மந்திரம்.

இன்றும் ஆதிக்கம் செய்யும் சனாதனத்தையும், சாதியையும் தம் இறுதிவரை தூக்கிப் பிடித்து வாழ்ந்தார் ஜெயகாந்தன்.தமிழ் ஒளியின் 'வீராயி' காவியத்தை நான் ஏற்கனவே படித்து வியந்திருக்கிறேன்.

தமிழ் ஒளியைப் படிக்கவே இந்தச் சிறப்பிதழை உடனே வாங்கினேன். தமிழ் ஒளிக்குச் செய்த சீரிய நன்றிக்கடன்களில் இது முதன்மையானது.பேராசிரியர் வீ.அரசு அவர்களின் சிறப்பான பேட்டி என்னை வெகுவாகக் கவர்ந்தது. இந்த அரிதினும் அரிதான புத்தகத்தை வாங்க Gana Kurinji 94433 07681 அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**கவுதமன், முகநூல் பதிவு**

❖❖❖

★★★

தோழர் கண.குறிஞ்சி அவர்களை ஆசிரியராக கொண்டு அவர் நடத்தும் புதுமலர் இதழைத் தமிழ் உலகம் கட்டாயம் போற்றி வளர்த்துப் பாதுகாக்க வேண்டும்.

கவிஞர் தமிழ் ஒளி அவர்களின் சிறப்பிதழாக மலர்ந்துள்ள நான்காவது இதழின் உள்ளே தமிழ்ஒளியைக் காண்பதற்கு முன்பு

பேரா.வீ.அரசு அவர்களின் ஒரு விரிவான செவ்வியையும் முன்விருந்தாக நமக்குப் புதுமலர் படைக்கிறது.

பேரா.வீ அரசு அவர்களின் வாழ்க்கை / மணவாழ்வு / கல்வி நூலகம் உருவாக்கம் / அதில் உள்ள நேர்த்தி இவைகளுக்கு அப்பால் துறைதோறும் அவர்பெற்றுள்ள அறிவுத் தொடர்புகள்

இலக்கியம், இலக்கணம், படைப்பாளர்கள், அவர்களது அரசியல் சமூகக் கண்ணோட்டத்தை மார்க்சிய தேடல்வழியில் நின்று இவர்(வீ.அரசு) பார்க்கும் நோக்கு திறனாய்வு,

புதுமைப்பித்தன், பேரா.கேசவன், பேரா.கவிஞர், இன்குலாப், வெங்கட்சாமிநாதன், ஜெயமோகன் எனப் பலரையும் மதிப்பீடு செய்யும் முறைமை என்னை வெகுவாக வியக்க வைத்துவிட்டது.

பேருக்கு ஆசிரியர்களாக பலரும்இருக்கிற சமூகத்தில், இவர் தனித்த, ஓர் இயங்கும் பேராசிரியராக விளங்கி வருகிறார். திராவிடம், மார்க்சியம், அம்பேத்கர் எனத் தமிழ்ச்சமூக மாற்றுக் கருத்தோட்டங்களின் துலக்கங்களை தெள்ளிதின் காய்தல் உவத்தலின்றி பதிவிடுகிறார். கவிஞர் தமிழ் ஒளி குறித்துக் காத்திரமான செய்திகளைத் தருகிறார்.

தோழர் கண.குறிஞ்சி அவர்கள் நேர்காணலுக்குப் பொருத்தமும் தகுதியும் வாய்ந்த ஒருவரைத் தேர்வு செய்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

நாம் இந்த நேர்காணலில் தோழர் வீ.அரசுவை மட்டும் பார்க்கவில்லை;அவருடைய நேர்காணல் செய்திகள் ஆவணங்கள் வழியாக தமிழ்ச் சமூக மானுடம் இலக்கியம் இலக்கணம் தொல்பொருள்அரசியல் சமூக வரலாறு அனைத்தையும் அறிந்துகொள்ளும் காலக் கண்ணாடியாக வரலாற்றுப் பெட்டகமாக பேழையாக பேராசிரியர் தோழர் வீ.அரசின் நேர்காணல் அமைந்துள்ளது தமிழுக்குக் கிடைத்த பெரும்பேறு

**அரங்க. குணசேகரன்,**
**பட்டுக்கோட்டை**

❖❖❖

★★★

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டில் அவரை மேலும் வாசிக்கத் தூண்டும் அழகிய பதிப்பாகக் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டுச் சிறப்பிதழ் வெளிவந்துள்ளது.ஒரு வரலாற்று பணியைப் "புதுமலர் பதிப்பகம்" செய்துள்ளது.

புதுமலர் ஆசிரியருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி.

பேராசிரியர் வீ. அரசு அவர்களுடனான நேர்த்தியான நேர்காணல் தொடங்கி அனைத்துக் கட்டுரைகளும் பல்வேறு ஆக்கபூர்வமான செய்திகளுடன் அமைந்துள்ளது.

தலையங்கம், அரசிற்கும் சமூகத்திற்கும் ஒரு திசைகாட்டி.

தமிழ்ஒளி படைப்புகளைப் பாடநூல் கழகம் வெளியிட வைக்கப்பட்ட கோரிக்கை அரசின் கவனத்தை ஈர்க்கும் என்று நம்புகிறேன்.

பேராசிரியர் வீ. அரசு தொடங்கி சதீஷ் குமார் வரை இத்தொகுப்பில் எழுதியுள்ள கட்டுரைகள், கவிஞர் தமிழ்ஒளியின் தாகத்தையும், தவிப்பையும் உணர்ந்திட உதவுகிறது. தங்களின் பொறுமையே இப்படைப்பின் வெற்றி

**பிரின்சு கஜேந்திர பாபு,**
**சென்னை.**




தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்டம் திருவல்லிக்கேணி சேப்பாக்கம் கிளை நடத்திய "புதுமலர்" காலாண்டிதழ் குறித்த அறிமுகக் கூட்டத்தில் மார்க்சியச் சிந்தனையாளர் **தோழர் ஜி. செல்வா** அவர்களுக்குத் தமுஎகச மாநிலத் துணைத் தலைவர் பத்திரிகையாளர் **மயிலை பாலு** அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகிறார். மேடையில் (இடமிருந்து) திரு. ச. சாஹிர் உசேன், திரு. வே. மணி, கவிஞர் இளம்பிறை, முனைவர் தா. ஜான்சன் வெஸ்லி

❖❖❖

★★★

## தீக்கதிர்-திசம்பர், 10-2023

சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டிதழ் என்ற அறிவிப்புடன் தமிழ்ச் சூழலில் 'புதுமலர்' ஓராண்டு காலமாகப் பூத்துக் குலுங்குகிறது. இதன் முதல் மலர்ச்சியே (சனவரி மார்ச்சு 2023) வள்ளலார் 200 ஆவணச் சிறப்பிதழ். ஓராண்டு நிறைவில் இப்போது (அக்டோபர் திசம்பர் 2023) பூத்திருப்பது கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு சிறப்பிதழ்.

"தமிழனே நான் உலகின் சொந்தக்காரன்

தனிமுறையில் நான் உனக்குப் புதிய சொத்து"

என்று சுயப் பிரகடனம் செய்து கொண்டவர் தமிழ் ஒளி. அதற்கேற்பவே படைப்புகளைத் தந்தவர். கவிஞர் தமிழ் ஒளி என்று பொதுவாக அறியப்பட்டாலும் கம்யூனிசத் தத்துவக்காரர். இதனாலேயே தோழர் தமிழ் ஒளி என்று குறிப்பிடும் பேராசிரியர் வீ. அரசு கட்டுரை முகமன் கூறி இதழுக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு தொடர்பு கொண்டு அரசியலில் ஈடுபடுத்திக் கொண்ட தொடக்க காலம் (1924 1944) பொதுவுடைமை இயக்கத்தின் தொண்டனாக இருந்து செயல்பட்ட காலம் (1945 1954) சுதந்திர மனிதனாக வாழ்ந்து பல்வேறு ஆக்கங்களை உருவாக்கிய காலம் (1955 1965) என தமிழ் ஒளியின் வாழ்க்கைக் காலத்தை முப்பாலாக்கி அதன்படி படைப்புகளையும் சிந்தனைகளையும் நிரல்படுத்தி ஆழமான ஆய்வுக் கட்டுரையைத் தந்துள்ளார் பேராசிரியர் அரசு.

கவிதைகள், சிறுகதைகள், காவியங்கள், ஓரங்க நாடகங்கள், மேடை நாடகம், இலக்கிய ஆய்வு, சிறுவர் பாடல்கள், உருவகக் கதைகள், குழந்தைகளுக்கான குட்டிக் கதைகள், விமர்சனக் கட்டுரைகள் என அனைத்து வகைமைகளிலும் தமிழ் ஒளியின் பங்களிப்பைக் கால ஒழுங்கில் நுட்பமாகப் பதிவிட்டுள்ளது இக்கட்டுரை.

இதேபோன்று ஜமாலன் அவர்களின் கட்டுரையும் தமிழ் ஒளியின் படைப்புகளை வேறொரு கோணத்தில் விரிவாகப் பேசுகிறது. கவிதைகளை விடுத்து, ஆய்வு நூல்கள் வழியாகக் கவிஞர் காணும் சமூக, அரசியல், சித்தாந்தப் பார்வைகளை ஆழ, அகலத்தோடு அலசுகிறது. இந்தக் கட்டுரையின் ஊடாக இன்குலாப், கோ. கேசவன், அயோத்திதாசர், ஃபூகோ ஆகியோரின் கருத்துக்களைத் தமிழ் ஒளியோடு ஒப்பிட்டு உரைத்திருப்பது புதிய புரிதலை ஏற்படுத்துகிறது. பல ஆய்வுக் களங்களையும் அறிமுகம் செய்கிறது.

இவை தவிர கவிஞர் ஈரோடு தமிழன்பன், தோழர் தியாகு, ச. தமிழ்ச்செல்வன், பேராசிரியர் பஞ்சாங்கம், மயிலை பாலு, பு.பா.பிரின்சு கஜேந்திரபாபு, கண. குறிஞ்சி, சதீஷ்குமார் ஆகிய எண்மரின் கட்டுரைகளும் ஒவ்வொரு கோணத்திலான கருப்பொருளைக் கொண்டு மலரைச் செறிவாக்கியுள்ளன.

கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு விழா ஓராண்டு காலத்திற்குக் கொண்டாடப்படும் என தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கமும், தமிழ் ஒளி நூற்றாண்டு விழா குழுவும் அறிவித்துள்ளன. இந்நிலையில் கண. குறிஞ்சி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'புதுமலர்' , தமிழ் ஒளி நூற்றாண்டு சிறப்பிதழை வெளியிட்டிருப்பது சாலப்பொருத்தமானது.

பல ஆண்டுகாலம் புதையுண்ட பொக்கிஷத்தைத் தேடிக் கண்டடைந்த மகிழ்வை இந்தச் சிறப்பிதழ் ஏற்படுத்துகிறது. 1960களில் இருந்து 2023 ஜூன் மாதம் இயற்கை எய்தும் வரை தமிழ் ஒளி நூல்களை விடாமுயற்சியுடன் பதிப்பித்து தமிழ் 'ஒளி' மங்காமல் பார்த்துக்கொண்டவர் செ.து. சஞ்சீவி அவர்கள். அவருக்குப் புதுமலரும் கட்டுரைப் படைப்பாளிகளும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கும் குறிப்புகள் பண்பாட்டின் அடையாளங்களாக உள்ளன.

புதுமலரின் இன்னொரு சிறப்பாக அமைந்திருப்பது பேராசிரியர் வீ. அரசு உடனான கண. குறிஞ்சி அவர்களின் நேர்காணலாகும். பிறப்பு தொடங்கி இன்றுவரையிலான வாழ்க்கை நிகழ்வுகளையும், சந்தித்த ஆளுமைகளையும், இலக்கியத் தடங்களையும் பற்றிய விரிவான பதிவாக இது உள்ளது. அகவை எழுதில் இவரது மாணவர்கள் வெளிக்கொணர இருக்கும் தொகுப்பு பற்றிய தகவல் குறிப்பு ஆவலைத் தூண்டுகிறது.

புதுமலர் உண்மையிலேயே இலக்கிய மணம் பரப்புகிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

**மயிலைபாலு, சென்னை**

இந்து-தமிழ் 11/11/2023

சிற்றிதழ் அறிமுகம்

# துலக்கமாகும் தமிழ் ஒளி எழுத்துகள்




புதுமலர் (காலாண்டிதழ்)
ஆசிரியர்: கண.குறிஞ்சி
விலை: ரூ.100
தொடர்புக்கு: 9443307681

கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டுச் சிறப்பிதழாக இந்த இதழ் மலர்ந்திருக்கிறது. தமிழ் ஒளியின் சிறுகதைகள் குறித்த எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனின் கட்டுரை, அதிகம் விவாதிக்கப்படாத தமிழ் ஒளியின் சிறுகதைகள் உலகம் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது. பேராசிரியர் க.பஞ்சாங்கம், தமிழ் ஒளியின் கட்டுரைகளின் உள்ளடக்கத்தைத் தன் குறுக்கீட்டின் வழி புதிய முறையில் துலங்கச் செய்துள்ளார். ஏற்கெனவே வழக்கத்தில் உள்ள நிலைப்பாட்டைத் தமிழ் ஒளி தன் கட்டுரைகளின் வழி கேள்விக்கு உள்படுத்துகிறார். அதனால், அவற்றை விசாரணைக் கட்டுரைகள் என மதிப்பிடுகிறார் பஞ்சாங்கம். தமிழ் ஒளி என்னும் ஆளுமையைத் துலங்கச்செய்யும் பல கட்டுரைகளும் இந்த இதழில் தொகுக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் வீ.அரசு நேர்காணல் இந்த இதழின் சிறப்புக்குரிய அம்சம்.

**- ஜெய்**

கவிதைகள்

# எழுத்துத்தச்சன் தமிழ் ஒளி

ஈரோடு தமிழன்பன்

அவளைப் பற்றி
நான் பேச வேண்டுமாம்.
பாரதிதாசக் குன்றிலிருந்து
புறப்பட்ட அருவி
தமிழ்க் குளியல் போட்டுப்
பறந்து வந்த அந்தக் குயில் பற்றி
நான் பேசவேண்டுமாம்.

பாட்டியல் இனத்தில் அவன்
வெண்பாவும் இல்லை மென்பாவும் இல்லை
அவன் வலிப்பா மடியில் கிடந்தவன்
வாதைப்பா தோளில் தவித்தவன்

பாட்டியல் தளைகள்
அவனை அச்சுறுத்தவில்லை.
பட்டியல் இனத்தான் என்பது
அச்சுறுத்தாமல்
இருந்ததே இல்லை
அவமானப்படுத்தாமல்
இருந்ததே இல்லை.
வஞ்சிப்பாவுக்குள்
ஒரு கனிச்சீர் வந்து சேர்வதுபோல்
பாரதிதாசன் கையைப்
பிடித்துக் கொண்டே
கரந்தையில் தமிழ் கற்கப் போய்ச் சேர்ந்தவன்
ஆனால்
எந்த வஞ்சியையும்
கைப்பற்றி வாழாமலே போய்ச் சேர்ந்தவன்
எந்த வஞ்சிப்பாவோ
அவனை வஞ்சித்திருக்கலாம்
யாழிசைப்போல் பெருக்கெடுக்க வேண்டியவன்
ஒரு தாழிசைப்போல்
இரண்டடி வைத்தான்
மூன்றாம் அடியிலேயே

வாழ்வை முடித்துவிட்டான்.
அதிகாரம் செய்யத் தெரிந்த
எந்த அரசியல் கட்சிக்கும்
தமிழ்ஒளி
அடிபணிந்துப் போக
அடிமைச்சீட்டு எழுதித் தரவில்லை
தமிழ்ஒளி வலக்கண்ணில்
பெரியார் இருந்தார்
இடக்கண்ணில்
மார்க்சு இருந்தார்
இதயத்தில் எப்போதும்
தமிழே இருந்தது.

ஒட்டிய வயிற்றோடு
ஓயாமல் கவிதை யாத்தவனுக்கு
தோழர் செ.து.சஞ்சீவீதான்
கஞ்சி வார்த்தார்
கருணை வார்த்தார்.

மகா கவிஞன் பாரதி பாதையில்
உருவக உலா நடத்திய தமிழ்ஒளி
கண்ணப்பன் கிளிகளிடம்
குயில்பாட்டை
உருவாக்கி எடுத்தான்
ஆண்கிளி குணம் என்றும்
பெண்கிளி குற்றம் என்றும்
குறியீடு செய்தான்.
ஆயின்
குணமும் குற்றமும் இல்லாமல்
வாழ்க்கை இல்லை என்றான்.
குற்றத்துக்கு ஏன் பெண் குறியீடு?
அவன் மூடுண்ட வாழ்க்கைக்
கதவை திறந்து பார்த்தால்
ஏதேனும் தென்படலாம்.
எதுவுமே இல்லாமல்
எதுவுமே நடக்காதே!
கவிதை
எதுவுமே இல்லாமல்
எதுவுமே பேசாதே!
கவிதை நாயகி
அவனைக் கட்டி அணைத்தாள்
காதல் நாயகி
அவனை விட்டு விலகினாள்.

பாட்டாளி வர்க்கப்
போராட்ட வெற்றி
தமிழ்ப் பாட்டுத் தேவி
காதில் விழுந்ததும்
அவள் தமிழ்ஒளி வீட்டு அறையின்
கதவைத் தட்டினாள்.....
முதல், மேதினப் பாட்டால்
தமிழக வனங்கள் காடுகள்
வயல்வெளிகள் மலைச்சரிவுகள்
நதிக்கரைகள் நெசவுப்பட்டறைகள்
கொல்லுலைக் கூடங்கள்
எங்கெங்கும்
சிவப்புச் சிலிர்ப்புகள்
உழைப்புத் தோள் உற்சவங்கள்

முள்குத்திய கால்களோடு
ஓடினான் தமிழ்ஒளி
ஒலிம்பிக் தங்கப்பதக்கம்
கிடைக்காமல் போயிருக்கலாம்.
ஒப்பற்ற தமிழ்தாயின்
முத்தத்தில் குளிர்ந்தான்
வரலாற்றின்
அரைக்கண்பார்வை
அவன் மேல் விழுந்தது
மிகக் குறைவாக எழுதியவர்
தமிழ்ஒளி என்று
விமர்சகர் தி.க.சி தன் ஆய்வை
வெளியிட்டார் ஆயின்
நாற்பதாண்டுகள்
தடுமாறு வாழ்விலும்
தடுக்கி விழுந்துவிடாமல்
தொடுவதும் விடுவதுமான
வாழ்வாதாரங்களுக்கிடையே
உருப்படியாய்க்
கவிதைகள் காவியங்கள்
நாடகங்கள் என்று
அந்த எழுத்துத் தச்சன்
இயங்கினான் என்பதைத்
தமிழன் மறந்தாலும்
தமிழ் மறக்காது.

# சிமிழுக்குள் அடைப்பாயோ?

ரவி குமாரசாமி

வட்டார மொழியைக் கண்டறிய முயன்றார்கள்.
உதிர்க்கும் வசைச் சொற்களை வைத்து
ஊர் எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்தார்கள்.
பெயரை வைத்து
சாதியின் மூலத்தை அறிய முற்பட்டார்கள்.
வடித்த போதையைக்
கோப்பைகளில் ஊற்றி
கொள்கைகளை
உளவு பார்த்தார்கள்.
கிடைத்த அளவைகளில் எல்லாம்
என்னை அளந்தும்
எடை போடவும் எத்தனித்தார்கள்.
புனிதனா என எனை நிழல்போல் தொடர்ந்தார்கள்.
கசக்கும் புகையிலையைத் துப்பும் போது
கடுகி ஓடினார்கள்.
பொய்யாடைகளைக் கழற்றி
ஒவ்வொன்றாக மேடைகளில்
அவிழ்த்தெறிந்த போது
அதிர்வடைந்தார்கள்.
அப்புறமென்ன ?
கழுத்து வலிக்க என்னை
அண்ணாந்து பார்க்கின்றார்கள்.
காற்று என்னைத் தழுவிக் கொண்டது.
கருணை என் முகத்தைத் துடைத்தது.
சிமிழுக்குள் அடக்க நினைத்தவர்கள்
சிதறி ஓடிக் கொண்டிருக்கின்றனர்.
இனி அன்பின் துணையால்
பயணம் செய்வேன் யான்.

❖❖❖

# தேவிபாரதிக்குப் பாராட்டு விழா

சாகித்திய அகாதமி விருது பெற்ற தேவிபாரதி அவர்களுக்கு 30.12.2023 அன்று ஈரோடு பெரியார் மன்றத்தில் புதுமலர் பதிப்பகம் மற்றும் புதுமலர் பத்திரிகை ஆகியவற்றின் சார்பாகப் பாராட்டு விழா நடைபெற்றது.

புது மலர் இதழாசிரியர் கண. குறிஞ்சி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மேனாள் மாநில / ஒன்றிய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், திரைக்கலைஞர் கவிதா பாரதி (சென்னை) எழுத்தாளர் ச. பாலமுருகன், ஓவியர் எம். சுந்தரன், கவிஞர் மோகனரங்கன், நக்கீரன் வாரஇதழ் மூத்த செய்தியாளர் ஜீவா தங்கவேல், தற்சார்பு விவசாயிகள் சங்கம் கி.வே. பொன்னையன், கவிஞர் இரவிச்சந்திரன், இலக்கியத்தளம் அன்பழகன், சங்கத்தமிழ்



இலக்கியப் பூங்காவை சேர்ந்த திருமதி இராஜாமணி ஆகியோர் வாழ்த்துரையும் கருத்துரையும் வழங்கினர்.

ஓவியர் எம். சுந்தரன் அவர்கள் எழிலுற வரைந்த தேவி பாரதி மற்றும் கவிதாபாரதி ஆகியோரது கோட்டோவியப் படங்கள்


முறையே அவர்களுக்கு வழங்கப் பட்டது.

மேலும் கருத்துரையாற்றிய அனைவருக்கும் புதுமலர் சார்பாக நூல்கள் பரிசளிக்கப்பட்டன.

ஊடகவியலாளர் த. சண்முகம், மருது பதிப்பகம் ஆ.கிருஷ்ணன், கதிர்வேல் சி., வழக்கறிஞர் சிதம்பரன் கி, சக்கரபாணி மற்றும் சிவகிரி நண்பர்கள் இலக்கிய வட்டத்தைச் சார்ந்த வெள்ளிங்கிரி, முருகபூபதி மற்றும் சமூக நீதிக் கூட்டமைப்பு உறுப்பு இயக்கத்தினர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

அரங்கு நிறைந்த இவ்விழாவில் தேவிபாரதிக்கு ஏராளமான நண்பர்கள் பொன்னாடையும், புத்தகங்களும் பரிசளித்துச் சிறப்பித்தனர்.

மூன்று மணி நேரம் நடைபெற்ற இப்பாராட்டு விழா இனிதே நிறைவுற்றது.





ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி


திரைக்கலைஞர் கவிதா பாரதி


புதுமலர் பத்திரிகை ஆசிரியர் கண. குறிஞ்சி தேவிபாரதிக்குப் பரிசளித்தல்.





புதுமலர் இதழாசிரியர் கண. குறிஞ்சி



ஓவியர் சுந்தரன், கவிதா பாரதிக்குப் பரிசளித்தல் உடன் ஒன்றிய/மாநில அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் தேவிபாரதி




விழாவில் பங்கேற்ற விருந்தினர்கள்



# புத்தகப் பேழை




தமிழ்ச் சிறார் இலக்கியம் :
யதார்த்தமும் எதிர்காலமும்

**ஆதி வள்ளியப்பன்**

பக்கங்கள் : 80
விலை ரூ : 80

பாரதி புத்தகாலயம்
சென்னை 600 018.
தொடர்புக்கு 044 2433 29244.

தமிழ்ச்சிறார் இலக்கியத்திற்கான கையேடாக விளங்கும் இந்நூலில், தமிழ்ச் சிறார் இலக்கியம் செல்லவேண்டிய திசை குறித்தும், அழ.வள்ளியப்பா, வாண்டுமாமா மற்றும் சிறார் இலக்கியச் சாதனையாளர்கள் குறித்தும் விரிவான விவரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. ஆங்கில வழிக் கல்வி, செயற்கைக்கோள் தொலைக்காட்சி அலைவரிசைகள் காரணமாக, சிறார் இலக்கியம் மீதான கவனம் குறைந்ததைச் சுட்டிக்காட்டும் அதேவேளை, குழந்தைகளிடம் எல்லாப் பிரச்சனைகள் குறித்தும் பேசவேண்டிய தேவை இருப்பதால் மாற்றத்தைக் காண முடிகிறது என இந்நூலாசிரியர் ஆதி வள்ளியப்பன் அவர்கள் தெளிவுபடுத்துகிறார். முக்கியமான சிறார் இலக்கியப் படைப்புகள் பற்றிய அறிமுகம் மற்றும் படைப்பாளிகள் **யூமா வாசுகி / உதயசங்கர்** ஆகியோரது நேர்காணல்கள் ஆகியவை விவரச் செறிவும் சுவையும் மிக்கதாக உள்ளன. சுற்றுச்சூழல் சிறார் இலக்கியத்தின் மூன்று முக்கியப் புத்தகங்களாக **இரசியப் புத்தகங்கள், ரஸ்கின் பாண்டு மற்றும் கேரளப் பேராசிரியர் சிவதாஸ்** ஆகியோரது புத்தகங்களைச் சிறப்பான முறையில் அறிமுகப் படுத்துகிறது இந்தப் புத்தகம். சிறார் இலக்கியம் எதிர்கொள்ளும் 10 பிரச்சனைகள் பட்டியலிடப் பட்டுள்ளன. சிறார் இலக்கியம் குறித்த முக்கிய ஆவணமாகத் திகழும் இந்நூல், தமிழுக்கு நல்வரவு. சிறார் இலக்கிய வகையினத்தில், ஓர் அரிய திசைக்காட்டியாகவும் திகழ்கிறது இப்படைப்பு.

❖❖❖




தொகுப்பும் பதிப்பும்:
**தி. அமிர்த கணேசன்**

பக்கங்கள் :725
விலை ரூ. :700

வெளியீடு
ஒரு துளிக்கவிதை
புதுச்சேரி
agan123@ymail.com

தமிழிலக்கியத்தின் மகாகவிகளில் குறிப்பிடத்தக்கவரான ஈரோடு தமிழன்பன் அவர்களின் தன்னிகரற்ற கவித்துவ மேன்மையைத் தொகுத்தளிக்கும் பெருமை மிகு ஆவணமாக இந்நூல் திகழ்கிறது. "படித்தவர் படிக்காதவர் / எல்லோரும்/உண்ணக்கூடிய ரொட்டிகளாகக் /கவிதைகள் இருக்க வேண்டும்" எனும் பாப்லோ நெருதாவின் கூற்றினை மெய்ப்படுத்துபவை ஈரோடு தமிழன்பன் கவிதைகள் என இந்நூலாசிரியர் குறிப்பிடுவதை இத்தொகுப்பின் ஒவ்வொரு பக்கமும் உறுதிப் படுத்துகிறது. 16 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கவிஞரின் பன்முக ஆளுமையை அமிர்த கணேசன் அவர்கள் செறிவுறப் பதிவு செய்துள்ளார். ஹைகூ / விமரைக்கூ / சென்ரியு / சின்கொயன் / ஈரோ சென்வியம் / பழமொன்ரியு / கஜல் பிறைகள் என எண்ணற்ற புதிய கவிதை வடிவங்களை அறிமுகப்படுத்திய கவிஞரின் கவிதைகள், அகச்சான்றுகளுடன் விரிகின்றன. கவிஞரின் சாகித்திய அகாதமி விருது பெற்ற **"வணக்கம் வள்ளுவ !"** நூல் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது."இன்குலாபின்/ நண்பன் நான் என்று சொல்லும்போது/ நசருல் இஸ்லாமும், வால்ட் விட்மனும் / நாங்கள் உங்கள் நண்பர்கள் என்று / என்னைத் தழுவிக் கொள்கின்றனர்"

-என்பது போன்ற நினைவோடு உறவாடும் கவிதைகளும் இதில் அடர்ந்து காணப்படுகின்றன. ஈரோடு தமிழன்பன் அவர்களின் கவித்துவக்கலைக் களஞ்சியம் இந்நூல் எனில் அது மிகையாகாது.

❖❖❖

CIBF 2024 | CHENNAI INTERNATIONAL BOOK FAIR

தமிழின் அடுத்த பாய்ச்சல்.
பன்னாட்டுப் புத்தகச் சந்தை.
**"புதுமலர்" இதழ் வரவேற்கிறது; வாழ்த்துகிறது.**

## புதுமலர் இதழ் கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| **பாரதி புத்தகாலயம்,** | |
| **சென்னை.** | **72995 79627** |
| **ஈரோடு.** | **92454 48353** |
| **டிஸ்கவரி புக் பேலஸ்** | |
| **சென்னை.** | **87545 07070** |
| **பனுவல் புத்தக நிலையம்** | |
| **சென்னை.** | **97890 09666** |
| **விஜயா பதிப்பகம்** | |
| **கோவை.** | **90470 87058** |
| **என் சி பி ஹெச்** | |
| **மதுரை.** | **94430 44106** |
| **திருச்சி** | **94425 88495** |
| **கோவை.** | **94427 64286** |
| **ஈரோடு.** | **90475 71857** |
| **எதிர் வெளியீடு** | |
| **பொள்ளாச்சி** | **98650 05084** |
| **பாலம் புத்தக நிலையம்** | |
| **சேலம்** | **94432 22007** |
| **அருவி பொத்தக உலகம்** | **9092948002** |

❖❖❖